ஏப்ரல்
2014
ரூ.25/-
இறக்கை: 3 இறகு : 4

# காக்கைச் சிறகினிலே

இலக்கிய மாத இதழ்



# அணி அரசியல் இனி

கட்டுரை : ஏகன், இரா.எட்வின், பி.எச்.அப்துல் அமீட், இன்குலாப், ஜோ.டி.குருஸ், க.திருநாவுக்கரசு, க.பஞ்சாங்கம்

கவிதை : தமிழ்ப்பித்தன், புன்னை சிறுகதை : ஆத்மார்த்தி, நெல்லை தீன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# காக்கைச் சிறகினிலே

இலக்கிய மாத இதழ்

## அக்டோபர் 2011
## டிசம்பர் 2012

தொகுப்பு

1

அஞ்சலில் பெற விரும்புவோர் கூரியர் கட்டணம் ரூ. 50 சேர்த்து
கேட்போலை அல்லது பணவிடை மூலம் ரூ.300 அனுப்ப வேண்டும்

288, டாக்டர் நடேசன் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை-600 005.
பேசி : 9841457503 email : kaakkaicirakinile@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கைச் சிறகினிலே

இறக்கை 3 இறகு 4

திருவள்ளுவராண்டு 2045
பங்குனி - சித்திரை ஏப்ரல் 2014

வெளியிடுபவர்
ஆசிரியர்
வி. முத்தையா

ஆசிரியர் குழு
இரா. எட்வின்
நெற்கோ
சித்தன்

நெறியாளர்கள்
கி.பி. அரவிந்தன்
ஓவியர் வீர.சந்தானம்
டிராட்ஸ்கி மருது

புலம்பெயர் நாடுகளுக்கான தொடர்புக்கு :

கனடா :
வி. மகேந்திரன்
V. Mahenthiran
Mahenthiran_v@hotmail.com

ஐரோப்பா :
க. முகுந்தன்
K. Mukunthan
kmukunthan@gmail.com

காக்கையில் வெளியாகும் கதை, கவிதை மற்றும் கட்டுரைகளின் கருத்துகள், கட்டுரையாளர்களின் கருத்தாகும். காக்கையின் கருத்தாகாது.

# தேர்தல் பொம்மலாட்டம்

நாடு முழுவதும் ஆராதனைக்கும் எதிர்ப்புக்கும் பாராட்டுக்கும் விமர்சனத்துக்கும் ஆளாகி, குறுகிய காலத்தில் டெல்லி தலைநகர மக்களின் ஆதரவைப் பெற்று, தேர்தல் அரசியலில் பங்கேற்று, டெல்லி சட்டமன்றத் தேர்தலில் ஆம் ஆத்மி கட்சி ஆட்சியைப் பிடித்த நிகழ்வு, இந்தியாவிலுள்ள அரசியல் கட்சிகளையும் அரசியல்வாதிகளையும் அசைத்துப் பார்த்ததோடு, ஊடக மதிப்பீடுகளையே துடைத்தெறிந்துவிட்டது.

மக்கள் தந்த இந்த அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்குள் நாடாளுமன்றத் தேர்தல் தோள்தட்டிக் கொண்டு கண்ணுக்கு முன்னால் வந்து நின்று 'அழகு' கட்டியதை அரசியல் தலைகள் ரசிக்கவில்லை.

'நீ முந்து நான் முந்து' என போட்டி போட்டுக் கொண்டு களமாடித் திரிந்தவர்களெல்லாம் காணாமல் போனார்கள்; அல்லது கண்ணுக்கு மறைவாகி விட்டார்கள்.

ஆண்டுக்கணக்காய் ஒருவர் தோளில் ஒருவர் ஏறிக்கொண்டும் சுமந்துகொண்டும் திரிந்தவர்கள் எல்லாம் முறுக்கிக்கொண்டு போய் விட்டார்கள்.

சாதிப்பூச்சாண்டி காட்டி 'ஒருமாதிரி' கண்ணைச் சிமிட்டிக் கொண்டு தாண்டவமாடியவர்களைல்லாம் தேள்கொட்டியவன் கைகளை உதறியது மாதிரி உதறிவிட்டு ஓடிவிட்டார்கள்.

எப்போதும் எதேச்சாதிகாரத்தையே அரசியல் ஆயுதமாய் தூக்கிக் கொண்டு திரிந்தவர்கள் கூட்டணி குலைந்துபோனதை எண்ணி எண்ணி இப்போது குமைகிறார்கள்.

கொள்கை அரசியலும் கோட்பாட்டு அரசியலும் பேசியவர்கள், குப்புற விழுந்தும் மீசையை முறுக்கிக் கொண்டு, இழப்பதற்கு ஒன்றுமில்லை என்று பேசித்திரிவதைப் பார்த்தால் பாவமாகத்தான் இருக்கிறது.

இந்த அவலம் நாடுமுழுவதும் ஒரே மாதிரியாய் நடந்து கொண்டிருப்பதைப் பார்த்துச் சகிக்க முடியவில்லை.

இவர்தான் பிரதமர்; அவர்தான் பிரதமர்; அவர் எப்படிப் பிரதமராக முடியும்?; இவருக்கு என்ன தகுதி இருக்கிறது? என்றெல்லாம் கொக்கரித்துக் கொண்டு நாட்டைப்பற்றியோ மக்களைப்பற்றியோ துளியளவும் கவலைகொள்ளாத, ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதையே குறிக்கோளாகக் கொண்டு அலையும் அரசியல் கட்சிகளின் காதுகிழியும் இரைச்சலையும் என்ன ஆனாலும் நாங்கள் நினைக்கிறவர்தான் பிரதமராக வர முடியும் என குளுகுளு அறைகளில் குதித்துவிளையாடும் கார்ப்பரேட் கம்பெனிகளின் ஆட்டத்தையும் அவர்தம் கண்ணசைவுக்கு ஏற்ப அபிநயம் பிடிக்கும் ஊடகங்களையும் ரசித்தும் சிரித்தும் முகம்சுழித்தும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள், உண்மையில் யார் இந்த நாட்டை வழிநடத்த வேண்டும் என்பதைத் தீர்மானிக்கிற மக்கள்.

நடக்கட்டும் நடக்கட்டும் பொம்மலாட்டம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காக்கைச் சிறகினிலே

**ஒவ்வொரு மாதமும் 1ஆம் தேதி உங்கள் கைகளில்**

ஒவ்வொரு மாதமும் 29 அல்லது 30 ஆம் தேதியில் 'காக்கைச் சிறகினிலே' அஞ்சல் செய்யப்படுகிறது. 5ஆம் தேதிக்குள் இதழ் கிடைக்கப்பெறாதவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய செல்பேசி எண்: 98414 57503.

**உறுப்பினர் கட்டணம்**

| | |
|---|---|
| தனி இதழ் விலை | ரூ. 25 |
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 275 |
| இரண்டு ஆண்டு | ரூ. 500 |
| ஐந்தாண்டுக் கட்டணம் | ரூ. 1250 |
| மாணவர் சந்தா | ரூ. 200 |

(மாணவர்கள். கல்வி நிறுவனத் தலைவர் அல்லது துறைத் தலைவர் சான்றிதழோடு விண்ணப்பிக்க வேண்டும்)

**வெளிநாட்டு உறுப்பினர் கட்டணம்**

| | |
|---|---|
| ஆண்டுக் கட்டணம் (வெளிநாடு) | $ 20 |

காசோலைகள், வங்கி வரைவோலைகள். அனைத்தும் KAAKKAI, (A/c No. 60111010005660, SYNDICATE BANK, Triplicane, Chennai - 5. IFSC: Synb0006011) என்ற பெயருக்கு சென்னையில் மாற்றத்தக்கதாக அனுப்ப வேண்டும். பணவிடை (மணியாடர்) மூலமும் சந்தா செலுத்தலாம்.


தொடர்பு முகவரி :

**காக்கை**

288, டாக்டர் நடேசன் சாலை,

திருவல்லிக்கேணி, சென்னை-600005.

செல்பேசி: 98414 57503

மின்னஞ்சல் : kaakkaicirakinile@gmail.com

இதழ் வடிவமைப்பு :

**விக்னேஷ்**


## சிறகுக்குள்ளே...



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணி அரசியல் இனி



அறுபதாண்டுகளுக்கு முன்பு தி.மு.க.விலிருந்து வெளியேறிய வேளையில், வைகோ சொன்னது: "நான் கலைஞருக்குச் சொல்லிக் கொள்வேன். புரட்சி முழக்கமிட்டுப் புயலெனப் புறப்பட்டுவிட்டேன். நான் பூகம்பமா? புஸ்வாணமா? என்பது போகப்போகத் தெரியும்." *(மாலைச் சுவடுகள், நவம்பர் 1993)*

இத்தனை ஆண்டுகளில் ம.தி.மு.க தலைவர் வைகோ, பூகம்பமாகத் தன்னை நிரூபித்துக் காட்டியிருக்கிறாரா அல்லது புஸ்வாணமாகிவிட்டாரா என்பது அவரவர் அரசியல் புரிதலின் நீளஅகலம் சார்ந்தது.

கம்பீரமான உரையாளர். நல்ல தமிழிலும் ஆங்கிலத்திலும் பேச வல்லவர். உள்ளூர் முதல் உலகப் பிரச்சினைகள் வரை எதுவானாலும் மக்களுக்குப் புரியும் வகையில், தெளிவாக எடுத்துரைக்கும் ஆற்றலாளர். தேசியத் தலைவர்களுடன் நட்பு பாராட்டுபவர். பா.ஜ.க. மேலிடத் தலைவர் யஷ்வந்த் சின்ஹா சென்னை வந்தால் விருந்தளித்து உபசரிக்கும் அளவுக்கு நெருக்கம் கொண்டவர். ஒரு காலத்தில் தி.மு.க.வின் "போர் வாள்" எனப் போற்றப்பட்டவர்.

**"தமிழகத்தில் ம.தி.மு.க அளவுக்கு செல்வாக்கோ அல்லது வைகோ போன்ற வலுவான தலைவரையோ கொண்டிராத பா.ஜ.க., கூட்டணியின் "நாயகன்" என்பதாலேயே எட்டு இடங்களை எடுத்துக்கொண்டிருக்கிறது. ஆனால் ம.தி.மு.கவுக்கு அதைவிடக் குறைவு. தொகுதிகளின் தேர்வு மற்றும் எண்ணிக்கையிலும் கூட்டணியின் பிற கட்சிகள் போல் கடுமையாகப் பேரம் பேச முடியவில்லை வைகோ. முணுமுணுப்புடன் ஒப்புக்கொள்ளவே நேரிட்டது."**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இவையும், சொல்லாமல் விட்ட இன்னும் பல சிறப்புகளையும் தன்னகத்தே கொண்ட வைகோ, சமீபத்தில் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி "ஒரு வழியாக" உறுதியானதை அதன் தலைவர் ராஜ்நாத் சிங் அறிவித்தபோது மேடையிலிருந்தார். ராஜ்நாத் சிங்குக்கு வலதுபுறம் தே.மு.தி.க தலைவர் விஜயகாந்த். இடதுபுறம் பா.ம.க தலைவர் ராமதாஸின் புதல்வரும் முன்னாள் அமைச்சருமான அன்புமணி. விஜயகாந்துக்கு அடுத்து வைகோ. அரசியலில் அவரவருக்கு உரிய இடம் எப்போதும் கிடைத்துவிடுவதில்லை. அது வேறு கூட்டல், கழித்தல் கணக்கு சார்ந்தது என்பது நாம் அறிந்த உண்மையே. அதை ராஜ்நாத் சிங் தலைமையிலான கூட்டணி மேடை மிக அழுத்தமாகப் பிரகடனம் செய்திருக்கிறது.

பா.ஜ.க தலைமையிலான கூட்டணியில் இணைவதற்கான தன்னார்வத்தை தொடக்கத்திலேயே வெளிப்படுத்தியவர் வைகோ. கூட்டணியில் அங்கம் வகிக்கும் இதரத் திராவிடக் கட்சிகளில், எல்லா நிலைகளிலும் மூத்தவர். ஆனாலும் கூட்டணியில் அவருக்கு ஏழு இடங்களே. தே.மு.தி.க, பா.ம.க.வுக்கு அடுத்த இடமே. தமிழகத்தில் ம.தி.மு.க அளவுக்கு செல்வாக்கோ அல்லது வைகோ போன்ற வலுவான தலைவரையோ கொண்டிராத பா.ஜ.க., கூட்டணியின் "நாயகன்" என்பதாலேயே எட்டு இடங்களை எடுத்துக்கொண்டிருக்கிறது. ஆனால் ம.தி.மு.கவுக்கு அதைவிடக் குறைவு. தொகுதிகளின் தேர்வு மற்றும் எண்ணிக்கையிலும் கூட்டணியின் பிற கட்சிகள் போல் கடுமையாகப் பேரம் பேச முடியவில்லை வைகோ. முணுமுணுப்புடன் ஒப்புக்கொள்ளவே நேரிட்டது.

மதுரை விமான நிலையத்தில் வைகோவை சந்தித்த மு.க.அழகிரி, "விருதுநகரில் வெற்றிபெற்று பா.ஜ.க. தலைமையிலான மத்திய அரசில் அமைச்சராகுங்கள்.." என்று வாழ்த்துகிறார். கூட்டணிக் கட்சியின் நெருக்கடியால் தமிழகத்திலிருந்து பலருக்கு "அமைச்சர் யோகம்" கிட்டியதை நாம் பார்த்திருக்கிறோம். இயல்பாகவே அப்படியொரு வாய்ப்பு கிடைப்பதற்கான தகுதிகளைக் கொண்டவர் வைகோ என்பதில் சந்தேகமில்லை. தேர்தலுக்குப் பிந்தைய சூழல், அப்படியொரு வாய்ப்பை உருவாக்கினால், அவர் தமிழர், தமிழக நலனுக்காக எவ்வாறு பயன்படுத்துவார் அல்லது பயன்படுத்த இயலும் என்பதை இப்போது சொல்வதற்கில்லை.

மத்திய அதிகாரத்தில் பங்கேற்றால், இலங்கையில் தனி ஈழம் அமைய பொது வாக்கெடுப்பு நடத்த அழுத்தம் கொடுப்போம் என்று தேர்தல் அறிக்கையில் வைகோ கூறுகிறார். அடுத்த சில தினங்களில், பா.ஜ.க. மேலிடத் தலைவர்களில் ஒருவரான வெங்கயா நாயுடு "தனி ஈழத்துக்கெல்லாம் ஆதரவு தரமாட்டோம்" என்று கூறியதாகச் செய்தி வெளியாகிறது. இன்னொரு மேலிடப் பிரமுகரான ரவிசங்கர் பிரசாத், "ராஜபட்சேவை போர்க் குற்றவாளியாக அறிவிக்க வேண்டும் என்ற

"

**தமிழக அரசியலின் மைய நீரோட்டத்திலிருந்து தள்ளியிருந்த தோற்றமே, வைகோவின் இருபதாண்டு தனிக் கட்சி அரசியலுக்கு பிறகு மிஞ்சும் காட்சி. கடந்த முறை வாக்களித்த மற்றும் இப்போது வாக்களிக்கத் தகுதி பெற்ற இளம் வாக்காளர்களுக்கு, வைகோவும் அவரது அரசியலும் நெருக்கமாகச் சென்றடையவில்லை.**

"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**ஜி.கே. வாசன் போட்டியிடவில்லை. ப. சிதம்பரம், மகனுக்கு வாய்ப்பளித்தேன் என்கிறார். பல்லாண்டுகளுக்குப் பிறகு காங்கிரஸ் கட்சி, சொந்தக் காலைத் துழாவிப் பார்க்கும் அவல நிலை. இன்னொருவன் தோளில் தொடர்ந்து பயணம் செய்தவனுக்கு, கால் எதற்கு !? காணாமலேயே போய்விட்டது. தேடுங்கள்.**

கோரிக்கையை பா.ஜ.க. ஏற்காது" என்கிறார். இவற்றுக்கெல்லாம் வைகோ உடனடியாக எதிர்வினையாற்ற முடியவில்லை. ஏனெனில், கூட்டணியின் தன்னார்வப் பங்காளி. உடன்படுவது என்றானபின், துண்டைச் சுழற்றுவது சாத்தியமில்லை.

கடந்த இருபதாண்டுகளில், ஈழத் தமிழர் பிரச்சினையை அச்சாகக் கொண்டே வைகோவின் அரசியல் சக்கரம் பெரிதும் சுழன்றிருக்கிறது. ஈழத்தமிழர் பிரச்சினை தமிழக மக்களிடம் பரவலாக உணர்வுபூர்வமாகப் பொங்கியிருந்த காலங்களில் வைகோவின் அரசியல் மிகச் சரியாகத் தோன்றியது. பின்னாளில் பல்வேறு காரணங்கள் நிமித்தம் அது உரு மாறிய போதும், வைகோ பழைய தொனி மாறாமல் இயங்கிக்கொண்டிருந்தார். கூட்டம் கலைந்த பிறகும் கச்சேரி நடத்திக் கொண்டிருந்தால் எப்படி !?

அரசியல் கணக்குகளுடன் வைகோவை நம்பிச் சென்றவர்களும் பெரிதாக எதிர்பார்த்துக் காத்திருந்தவர்களும் தளர்ந்து போனார்கள். அக்கட்சியில் அவருக்கு நெருக்கமாக ஒலித்துக்கொண்டிருந்த குரலாக இருந்த நாஞ்சில் சம்பத்தும் வெளியேறிவிட்டார். பொதுவில், தி.மு.க. மற்றும் அ.தி.மு.க.வுக்கு எதிரான மாற்று அரசியலின் நம்பிக்கை முகமாக அவரைப் பார்த்தவர்களும் ஏமாற்றமடைந்தார்கள். தமிழக அரசியலின் மைய நீரோட்டத்திலிருந்து தள்ளியிருந்த தோற்றமே, வைகோவின் இருபதாண்டு தனிக் கட்சி அரசியலுக்கு பிறகு மிஞ்சும் காட்சி. கடந்த முறை வாக்களித்த மற்றும் இப்போது வாக்களிக்கத் தகுதி பெற்ற இளம் வாக்காளர்களுக்கு, வைகோவும் அவரது அரசியலும் நெருக்கமாகச் சென்றடையவில்லை.

மு.க. அழகிரி, தி.மு.க.விலிருந்து அறவே நீக்கப்படுவதற்கு முன்பே, வைகோ அவர்



இல்லம் தேடிச் சென்று ஆதரவு கேட்டார். (அவர் வழியை, பா.ஜ.க. வேட்பாளர்கள் உள்பட பலரும் தொடர்கிறார்கள்.)

அழகிரி பலம் வாய்ந்தவர் என்று புகழாரம் சூட்டுகிறார்.

நான் நல்லவன் என்று நீங்கள் நினைத்தால் வாக்களியுங்கள் என்று பிரசாரம் செய்கிறார்.

வைகோவின் அரசியல் நமக்குச் சரியாகப் பிடிபடவில்லை. இல்லை, அவருக்கே இன்னும் பிடிபடவில்லையா !?

சில ஆண்டுகளுக்கு முன்பு, சென்னை மியூசிக் அகாதமியில் "இசைஞானி" இளையராஜாவின் "திருவாசகம்" சிம்பொனி இசைக் கோர்வை வெளியீட்டு நிகழ்ச்சி. அரங்கம் திணறும் கூட்டம். அந்தப் பெருந்திரளில் நின்றுகொண்டே நிகழ்ச்சியைப் பார்த்தவர்களில் நானுமிருந்தேன்.

பல முன்னணிப் பிரமுகர்கள் பங்கேற்ற அந்த மேடையில், ஒரே அரசியல்வாதி வைகோ. தமிழர் இசை மரபு குறித்து அற்புதமாக உரையாற்றினார். அசந்துபோன கூட்டம் எழுப்பிய கையொலி அடங்க வெகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காக்கை வாழ்த்து



**சாகித்ய அகாடமி விருது பெற்ற எழுத்தாளர் ஜோ டி குரூஸ் அவர்களுக்கு பொன்னாடை அனிவித்து வாழ்த்தி மகிழ்கிறார் ஆசிரியர் வி.முத்தையா**

நேரமானது. அவருக்குப் பிறகு ஏற்புரை நிகழ்த்த வந்த இளையராஜா "இவருக்கு எதுக்கு அரசியல்!?" என்று தொடங்கி, வைகோவைப் பார்த்தார். மறுபடியும் அரங்கம் அதிரும் கையொலி. தமிழில் இத்தனைப் புலமை வாய்ந்த ஓர் ஆளுமைக்கு அரசியல் எதற்கு என்ற பெரும் பொருளில் இளையராஜா குறிப்பிட்டார்.

இளையராஜா எழுப்பிய கேள்வி, அவரது கட்சிக்குள்ளேயும் கட்சி கடந்த நலவிரும்பிகளிடையிலும் வேறு தொனியில் ஒலிக்கும் நிலையில், கூட்டணி அரசியல் சார்ந்து தீவிரக் களமாட இறங்கியிருக்கிறார் வைகோ.

வைகோ பா.ஜ.க மத்திய அமைச்சர்!.?

வைகோ மு.க.அழகிரி 2016!.?

ஐயந்திரிபற ஏதும் புரிந்தபாடில்லை. உங்களுக்கு!?

அதை விடுங்கள். தமிழருவி மணியன் இப்போது மன உளைச்சலில் இருப்பதை நீங்கள் அறிவீர்களா? பா.ஜ.க தலைமையிலான கூட்டணியை உருவாக்கியதில் இவருக்கு மன உளைச்சல்தான் மிச்சமாம். அதனால் பிரசாரம் செய்ய மாட்டேன் என்று அறிவித்திருக்கிறார்.

சமூக, அரசியல் தளத்தில் மாற்றுச் சிந்தனைக் குரலாகச் சில காலம் தன்னை எழுத்தாலும் பேச்சாலும் அடையாளப்படுத்திக் கொண்ட மணியன், தமிழகத்தில் பா.ஜ.க தலைமையிலான "மெகா" கூட்டணி அமைவதற்கு அடிக்கல் நாட்டியவர் என்றால் அது மிகையாகாது. ஆரம்பத்திலிருந்தே அதற்காகப் பெரும்பாடு பட்டவர். கூட்டணி அமைந்தவுடன் அவர் எதிர்பார்த்த "மரியாதை" கிடைக்காததால் ஒதுங்குவது போன்ற பாவனையை வெளிப்படுத்துகிறார். சுயநலத்துக்காக அமைக்கப்பட்டது பா.ஜ.க. கூட்டணி என்று கூறுகிறார். யாருடைய சுயநலம்? அந்தக் கூட்டணி அமைய முதலிலிருந்தே துடிதுடித்தவர் இவர்தான். இப்போது அதைச் சுயநலக் கூட்டணி என்கிறார்.

காந்தி மக்கள் கட்சித் தொண்டர்களை (சமீபத்தில் தமிழருவி நிறுவிய கட்சி) உரிய மரியாதையுடன் அணுகினால் மட்டுமே மோடியைப் பிரதமராக்கவும் அக்கட்சியை வெற்றி பெறச் செய்யவும் ஆதரவளிப்போம் என்று வேறு கறாராக அறைகூவல் விடுக்கிறார்.

அவரே பிறகு சொல்கிறார்: "கடந்த அக்டோபர் மாதம் மதுரை மீனாட்சியம்மனை பிரார்த்தனை செய்துவிட்டு, முதலில் வைகோவை சந்தித்துப் பேசிக் கூட்டணியை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டேன். பிரார்த்தனை வெற்றிபெற்றுள்ளது. 2016 சட்டமன்றத் தேர்தலில் மாற்று அரசியலை உருவாக்க இந்த அணி அடித்தளமாக இருக்கும்."

தமிழருவியின் அரசியல் நோக்கும் போக்கும் உங்களுக்குப் புரிகிறதா? எனக்குப் புரியவில்லை.

கூட்டணிக் கட்சியினரின் நெருக்கடிகளை நாள்தோறும் பலவிதங்களில் அனுபவித்த பா.ஜ.க மாநிலத் தலைவர் பொன்னாருக்கு (பொன். ராதாகிருஷ்ணனுக்கு) ஏற்படாத மன உளைச்சலா, தமிழருவிக்கு? அவரே கூட்டணி "வெற்றிகரமாக" அமைந்ததற்கு திருப்பதி சென்று முடி காணிக்கை செலுத்திவிட்டு வந்து உற்சாகமாகத் தேர்தல் வேலையில் இறங்கிவிட்டார். தமிழருவி, பிரசாரத்துக்கு முன்பே வற்றிவிட்டதா..? தமிழகத்தை வறட்சி மாநிலமாக அறிவித்தல் அவசியமோ?!

அடுத்து, காங்கிரஸ் கட்சி. திராவிடக் கட்சிகளின் கைகோர்த்து, தோள் சாய்ந்து, தோளிலேறி தங்கள் "மத்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திராவிடக் கட்சிகள் மத்திய அதிகாரத்தைப் பங்கிட்டுக் கொள்வதற்கு காங்கிரஸ் கட்சியை விட்டால் வேறு வழியில்லை என்றிருந்த நிலையை, இந்த முறை பா.ஜ.க உடைத்திருக்கிறது. மோடியின் ஊக்குவிப்பு நிறைந்த பொன்னார் தலைமையின் பங்களிப்பு இதைச் சாத்தியமாக்கியிருக்கிறது.**

நலனை" சொற்பத்திலிருந்து அதிகபட்சம் வரை அனுபவித்த காங்கிரஸ் கட்சி, இந்த முறை தனித்து விடப்பட்டிருக்கிறது. கடந்த இரு தேர்தல்களில் காங்கிரஸ் கட்சியுடன் ஒட்டி உறவாடி, சாத்தியமான வாய்ப்புகள் அனைத்தும் திரண்ட உச்சியைக் கண்ட தி.மு.க., இந்த முறை, அக்கட்சியுடன் சேர்ந்தால் "விதை நெல்லே" மிஞ்சாது என்ற நிலை. நேற்றுவரை உரசி, உள்கலந்த உறவை "யாரோ" என்பது போலக் கடந்து சென்றுவிட்டது தி.மு.க.

எப்படியாவது, யாரையாவது கூட்டணிக்கு கொண்டுவந்துவிடலாம் என்று காங்கிரஸ் நினைத்தது. ஆனால் அதற்கான முயற்சியும் சாதுரியமும் வேண்டுமே!? இல்லை. குமாரு, தீயா வேலை செய்யவில்லை.

ஜி.கே. வாசன் போட்டியிடவில்லை. ப. சிதம்பரம், மகனுக்கு வாய்ப்பளித்தேன் என்கிறார். பல்லாண்டுகளுக்குப் பிறகு காங்கிரஸ் கட்சி, சொந்தக் காலைத் துழாவிப் பார்க்கும் அவல நிலை. இன்னொருவன் தோளில் தொடர்ந்து பயணம் செய்தவனுக்கு, கால் எதற்கு!? காணாமலேயே போய்விட்டது. தேடுங்கள்.


திராவிடக் கட்சிகள் மத்திய அதிகாரத்தைப் பங்கிட்டுக் கொள்வதற்கு காங்கிரஸ் கட்சியை விட்டால் வேறு வழியில்லை என்றிருந்த நிலையை, இந்த முறை பா.ஜ.க உடைத்திருக்கிறது. மோடியின் ஊக்குவிப்பு நிறைந்த பொன்னார் தலைமையின் பங்களிப்பு இதைச் சாத்தியமாக்கியிருக்கிறது.

இருபெரும் திராவிடக் கட்சிகள் அல்லாத, தேசிய அளவில் மத்திய அதிகாரத்துக்கு நெருக்கமாக அல்லது நிர்ணயிக்கும் சக்திகளுள் முக்கியமாகத் திகழும் காங்கிரஸ் கட்சி அல்லாத, வாக்குவங்கி ரீதியாக சற்றே வலுவான கூட்டணி அடுத்தடுத்த தேர்தல்களில் அமைய, பா.ஜ.க. புதிய கதவைத் திறந்திருக்கிறது. இந்தக் கூட்டணி எவ்வாறு அமைந்தது என்று தரமதிப்பீட்டுக் கணக்குப் பார்த்தால், தலை சுற்றும்.

லேபர் பார்டி, அகில இந்திய மருதுபாண்டியர் பேரவை, காமராஜர் தேசிய மக்கள் கட்சி, அகில இந்திய கைவினைஞர்கள் முன்னேற்றக் கழகம், தென்னாடு மக்கள் திராவிடர் கழகம் உள்பட 40 சிறிய கட்சிகள் (!?) பா.ஜ.க.வுக்கு ஆதரவு தெரிவித்துள்ளன. பொன்னார் பம்பரமாகச்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சாகித்ய அகாடமி விருது பெற்றார்**
**எழுத்தாளர் ஜோ டி குரூஸ்**



**"கொற்கை" நாவலுக்காக எழுத்தாளர் ஜோ டி குரூஸுக்கு இந்த ஆண்டுக்கான சாகித்ய அகாதமி விருது அறிவிக்கப்பட்டது காக்கை வாசகர்களுக்கு ஏற்கனவே பரிச்சயம். இந்த மாதம் தில்லியில் நடந்த விழாவில் சாகித்ய அகாதமியின் தலைவர் விஸ்வனாத் பிரசாத் திவாரியிடமிருந்து ஜோ டி குரூஸ் விருதைப் பெற்றுக் கொண்ட போது எடுத்த படத்தை வாசகர்களுடன் பகிர்ந்துகொள்வதில் காக்கை பெருமிதம் கொள்கிறது.**

**ஆசிரியர்.**

சுழன்று உழைத்திருப்பது புரிகிறதா!

சிங்கம் சிறுநரிகளிடம் பிச்சை கேட்காது என்று உறுமினார் பா.ம.க தலைவர் ராமதாஸ். கூட்டணிப் பேச்சு வார்த்தை உச்சக்கட்டத்தில் இருந்த வேளையில், சிங்கப்பூருக்குச் சென்று வந்த தே.தி.மு.க தலைவர் "கேப்டன்" விஜயகாந்த், "மகன் நடிக்கும் படத்துக்கு லொகேஷன் பார்க்கப் போனேன்.." என்று சொன்னார். நான்கு தொகுதிகளுக்கு வேட்பாளர்களைத் தன்னிச்சையாக அறிவித்துவிட்டு, கூட்டணிக் கட்சி பற்றி ஒரு வார்த்தைகூட குறிப்பிடாமல் பிரசாரத்தையும் தொடங்கினார். பிறகு, ராஜ்நாத் சிங்குடன் பக்கத்தில் அமர்ந்து அவர் காதில் ஏதோ கிசுகிசுக்கும் காட்சியைப் பார்த்தோம். "எனக்குத் தமிழைத் தவிர வேறு மொழி தெரியாது" என்று சமீபத்தில்தான் "கேப்டன்" கூறியிருந்தார். ராஜ்நாத் சிங், கொஞ்சம், கொஞ்சம் டமில் தெரிந்தவரோ? தெரியவில்லை.

இந்த முறை தேர்தல் களத்தை எதிர்கொண்ட விதத்தில், விமர்சனங்களைக் கடந்து உறுதியான நிலைப்பாட்டுடன் முன்நகர்ந்தது, முதல்வர் ஜெயலலிதா தலைமையிலான அதிமுகதான். கூட்டணியில் சேர இடதுசாரிகள் நாட்டம் தெரிவித்தார்கள். அழைத்தார். இடதுசாரிகளின் ஏற்பாட்டில், 11 கட்சிகளின் தலைவர்கள் மூன்றாவது அணி பற்றி தில்லியில் கூடிப் பேசினார்கள். முற்போக்கு அரசியலை முன்னெடுத்துச் செல்வதாக எப்போதும் முழக்கமிடும் இடதுசாரிகள், தொகுதிப் பேச்சுவார்த்தையை உரிய வகையில் முன்னெடுத்துச் செல்ல முடியவில்லை. இழுபறியை விரும்பாத ஜெயலலிதா, நாற்பது தொகுதிகளுக்கும் வேட்பாளர்களை அறிவித்து, இடதுசாரிகளுக்கு தமது முடிவை உணர்த்தினார்.

"தேர்தலுக்கு முன்பே, மூன்றாவது அணி முயற்சி எடுத்தது தவறுதான்" என்று இந்தியக் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் ஏ.பி. பரதன் நேர்மையாகப் பதிவு செய்கிறார். அதெல்லாம் சரிதான். எத்தனை முறைதான், வரலாற்றுத் தவறு செய்வார்கள், இடதுசாரிகள்?

இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும் தமிழகத்தில் செல்வாக்கு எவ்வளவு என்பது வாக்குச் சுத்தமாகத் தெரிந்துவிடும்.

அ.தி.மு.க.வை அடுத்து, கூட்டணி விவகாரத்தில் ஏறக்குறைய உறுதியான நிலைப்பாட்டுடன் இருந்தது தி.மு.க. கதவை, இடைவெளி தெரிய கடைசிக்கும் சற்று முன்புவரை திறந்து வைத்திருந்தது உண்மைதான். எனினும் இறுதிச் சுற்றில், நிலவரம் புரிந்து தாழிட்டுக் கொண்டார்கள்.


யாரும் யாரையும் ஒதுக்கத் தயாரில்லை. அன்றி, சேர்ந்திருக்கவும் தயாரில்லை. ஒதுக்குவது போலச் சேர்ந்திருந்தும், சேர்ந்திருப்பது போல ஒதுக்கியும் தோற்றம் தருகிறார்கள்.

வளர்ந்த, தேய்ந்த தேசியக் கட்சிகள், வலுவான திராவிடக் கட்சிகள், வலு குன்றிய திராவிடக் கட்சிகள், சிறு, குறுங் கட்சிகள் எனப் பல தரப்பினரும் தேர்தல் கூட்டணிக்காக எவ்வாறெல்லாம் "பெரும் முயற்சி" செய்தார்கள் என்பதைத் தமிழகம் புரிந்தும் புரியாமலும் பார்த்தது.

இதைவிட நிறையப் பார்க்க வேண்டியிருக்கிறது, தேர்தலுக்குப் பிறகு! ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆறு நாட்கள் இறப்பவன்
ஏழாம் நாள் உயிர்த்தெழுகிறான்
எட்டு மணி நேர வேலையை முடித்து
அறை திரும்பிய நத்தை
தன் நிறுவனத்தை முதுகில் சுமந்தபடியே
கழித்தது, கழுவியது
குளித்தது, படித்தது
உண்டது, உறங்கியது

உடல் மொழி
குனிவதற்கும்,
கை கட்டுவதற்கும்,
கை கூப்புவதற்கும்
பயிற்றுவித்து, பயிற்றுவித்து
தன் உடல் அலீஜீப்பை
நிறுவனம் விரும்பிய படியே
சொலீஜீந்து கொண்டது

கனவுகளை
நிறுவனம் அனுமதிக்காததால்
எதிர்ப்புகள் அவ்வப்போது
அல்லது எப்போதாவது
அறை நண்பர் நத்தைக்கும்
கேட்கா வண்ணம்
தூக்கத்தில் உலரலாய் வெளிப்படலாம்
வருங்காலத்தில்

அதையும் யு+கித்து
நிறுவனம் தடை ஆணைப்
பிறப்பிக்கலாம்.
பனியோ
மழையோ
வெயிலோ
உடல் தொடும் சுரணை
குறைந்து வருவதை கண்ட நத்தைக்கு
வியப்பொன்றுமில்லை
நிறுவனத்தில் சீனியர் நத்தைகள்
தங்கள் இயந்திர உடலுக்கு
சார்ஜ் ஏற்றிக்கொண்டிருந்தன.

வார விடுமுறைக்கு வீடுதிரும்பிய
நத்தையின் நிறுவனத்தை முதுகிலிருந்து
கழற்றி
தத்தைக்குள் கருப்பை வளர்ப்பவள்
ஆறு நாட்கள் இறந்தவனை
ஏழாம் நாள் உயிர்ப்பித்தாள்
அவன் மீண்டும் ஞஞ்.மீண்டும்
ஆறுநாட்கள் இறக்க
பையில் துணிகளை அடுக்கிக்
கொண்டிருந்தான்
மறக்காமல் நிறுவனத்தையும்
கையில் எடுத்துக் கொண்டான்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்போதும் காலம் கடந்துவிடவில்லை

**“இதே ஒற்றுமையோடு, இதே புரிதலோடு இரண்டு இடதுசாரிக் கட்சிகளும் இணைந்து, இந்தப் பூமி எங்கும் விரிந்து பரவி எப்போதும் வேலை பார்க்க வேண்டும் என்பதே எனது ஆயுட்கால ஆசை” மூத்த எழுத்தாளர் தி.க.சி**

தன் நண்பன் ஒருவனிடம் கொடுத்த பணத்தைத் திருப்பிக் கேட்டுக் கொண்டிருக்கிறான் ஒருவன். பணத்தைக் கொடுத்தவன் எது கேட்டாலும் வாங்கியவன் “இந்தியாவின் தலை நகரம் டெல்லி” என்றே சொல்லிக் கொண்டிருக்கிறான். கோவத்தின் விளிம்புவரை சென்றவன் “ஒன்னு தரேன்னு சொல்லு. இல்லாட்டி இல்லேன்னாலும் சொல்லு. என்று கேட்கிறான்.



அப்பொழுதும் சற்றும் சளைக்காதவனாய் “இந்தியாவின் தலை நகரம் டெல்லி” என்கிறான்.

கோவம் எல்லை தாண்ட அவனை அடிக்க கையை ஓங்குகிறான். அப்போது அந்தப் பக்கமாக வந்த பொது ஜனங்களை அழைத்து “இங்க பாருங்க, இந்தியாவோட தலை நகரம் டெல்லிங்கறேன். இல்லைனுட்டு அடிக்க வருகிறான்” என்கிறான் பணத்தை வாங்கியவன்.

“சரியாத் தானே சொல்றான். அவன ஏண்டா அடிக்கப் போற பொறுக்கிப் பயலே” என்று பணம் கொடுத்தவனை தர்மத்திற்கு நாலு போட்டுவிட்டு போகிறார்கள் பொது ஜனங்கள்.

இப்படியெல்லாம் லூசுத்தனமா ஏதேனும் நடக்குமா? என்று சிலர் கேட்கக் கூடும். இப்படி ஒரு காரியத்தைத்தான் பாரதிய ஜனதாக் கட்சியும் கார்பரேட் முதலைகளும் அவர்கள் அண்டிப் பிழைக்கும் ஊடகங்களும் செய்து கொண்டிருக்கிறார்கள்.

“2002 இல் மூர்க்கமான மத வெறியோடு கொலை பாதகமாடினீர்களே...” என்று கேட்டால் “மோடிதான் வருங்காலப் பிரதமர்” என்கிறார்கள். “ஒரு பெண் குழந்தையை வேவு பார்த்தீர்களே” என்று கேட்டாலும், “மோடிதான் வருங்காலப் பிரதமர்” என்கிறார்கள். தவறிப்போய், “நேற்று உங்களுக்குப் பேரன் பிறந்திருக்கிறானாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“

**ஆக, ஊழலைப் போலவே ஈழ விஷயத்திலும் காங்கிரசும் பி.ஜே.பியும் ஒன்றுதான். இங்கு பி.ஜே.பியைப் பற்றி பேசிய அளவிற்கு காங்கிரசைப் பேசாததற்கு தேவை தவிர வேறு எதுவும் காரணம் இல்லை. மற்றபடி மதம் என்பதைத் தவிர இருவரும் ஒன்றுதான். மதம் என்று வரும் போதுகூட இவர்கள் இடிப்பார்கள், அவர்கள் வேடிக்கைப் பார்ப்பார்கள். அவ்வளவுதான்.**

”


எப்படி இருக்கிறார்கள் குழந்தையும் மகளும்” என்று கேட்டாலும், “ மோடிதான் வருங்காலப் பிரதமர்” என்கிறார்கள்.

மோடிதான் வருங்காலப் பிரதமர் என்பதையே ஊடகங்களின் வழி திரும்பத் திரும்பச் சொல்லி அப்படியான ஒரு பிம்பத்தை, பொதுப் புத்தியை பொதுமக்கள் மத்தியில் கட்டமைக்க முயற்சி செய்கிறார்கள்.

தொடர்ந்து ஊதிக் கொண்டே இருக்கிறார்கள். வயிறு பெருத்துக் கொண்டே வருவதும்கூட கொஞ்சம் உண்மைதான். கர்ப்பப் பையில் இருப்பது குழந்தை எனில் ஆசையோடு வலி பொறுத்து சுமக்கலாம். கட்டி எனில் அறுத்து எடுத்தால்தானே உயிர் பிழைக்க முடியும். அந்த நிலையில்தான் தேசம் இருக்கிறது இன்று.

இப்படி ஒரு காரியத்தை செய்வதற்கான தேவை பாரதிய ஜனதா கட்சிக்கு இருக்கலாம். ஆனால் ஊடகங்களுக்கு அதனால் என்ன லாபம் என்று ஒரு கேள்வி எழலாம். பெரிய பெரிய உலக கார்ப்பரேட்டுகள் எல்லாம் சொல்லமுடியாத அளவு சரிவை சந்தித்துக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் ரிலையன்ஸ், ஐ.சி.ஐ.சி.ஐ, பாரதி ஏர்டெல் போன்ற கார்ப்பரேட்டுகள் எந்தவித தொய்வுமின்றி லாபம் சம்பாதிக்கிறார்கள் என்கிற எதார்த்த நிலை இது எப்படி சாத்தியம்? என்றொரு கேள்வியைத் தருகிறது. இவர்கள் சரிவை சந்தித்துவிடக் கூடாது என்பதில் கவனமாயிருக்கும் ஆட்சியாளர்கள் அள்ளி வழங்கும் சலுகைகளே இவர்களை லாபக் குதிரைகளில் தொடர்ந்து பயணிக்க உதவுகிறது.

இதனால்தான் கார்ப்பரேட்டுகளும் அவர்களை அண்டிப் பிழைக்கும் ஊடகங்களும் இத்தகைய காரியங்களை செய்து கொண்டிருக்கக் காரணம். அப்போதும் இன்னொரு கேள்வி முளைக்கிறது. இதற்காகத்தான் இவர்கள் மோடியை இப்படித் தூக்கிச் சுமக்கிறார்கள் என்றால் காங்கிரசும் இதைத்தானே இத்தனை ஆண்டுகளாக செய்து கொண்டிருக்கிறது. பிறகு ஏன் இவர்கள் மோடியை இவ்வளவு பிரதானப் படுத்த வேண்டும்?



குஜராத்தில் அவர்கள் அனுபவிக்கும் சலுகைப் பெருவெள்ளம் ஒரு காரணம். கார்ப்பரேடுகள் நிம்மதியாக கொழுக்க வேண்டுமெனில் நாடு எப்போதும் ஒரு வித பற்றத்தோடு இருக்க வேண்டும். எனில், தொடர்ந்து பதற்றத்தை உருவாக்கிக் கொண்டும் அதன் வெப்பத்தில் குளிர்காயத் தெரிந்தும் வைத்திருக்கக் கூடிய ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவன் அவர்களுக்குத் தேவைப் படுகிறார். மோடி அதற்கு மிகவும் பொருத்தமானவர் என்பதை கடந்த கால குஜராத் நிகழ்வுகள் உணர்த்துகின்றன.

அதற்காக ராகுலை இவர்கள் கைவிட்டு விட்டார்கள் என்றெல்லாம் சொல்லிவிட முடியாது. காங்கிரசின் தேர்தல் செலவுகளையும் கார்ப்பரேட்டுகளே பார்த்துக் கொள்கிறார்கள் என்பதே உண்மை. ஒருக்கால் காங்கிரஸ் வந்து விடுமானால் அதே புள்ளியில் இவர்கள் ராகுலை சுவீகரித்து விடுவார்கள். அதே நேரத்தில் அப்போதும் இவர்கள் மோடியைப் புறக்கணித்து விட மாட்டார்கள். ஆளும் கட்சியும் எதிர்கட்சியும் இவர்களை சமமாகப் பாவிக்க வேண்டும். அப்படியானதொரு சூழலை உருவாக்கும் சூத்திரத்தில் கை தேர்ந்தவர்கள் இந்தக் கார்ப்பரேட்டுகள்.

இவரா அவரா என்று மட்டுமே மக்களை சிந்திக்க வைக்க வேண்டும் என்பதில் இவர்கள் கை தேர்ந்தவர்கள். இதுவா அல்லது அதுவா என்று யோசிப்பதற்கான சூழலை மக்களுக்கு இவர்கள் தர மாட்டார்கள். அதாவது மாற்று மனிதரை மட்டுமே மக்கள் யோசிக்க வேண்டும். மாற்று அரசியலை மக்கள் நாடிவிடக் கூடாது என்கிற கவனம்தான் இவர்களுக்கு. ஒரு நல்ல மாற்று அரசியல் மக்களை தெளிவாக்கிவிடும் என்பதிலும் அப்படி ஒன்று நடந்துவிட்டால் தங்களுக்கான பிழைப்பில் மண் விழுந்துவிடும் என்பதிலும் இவர்கள் தெளிவாயிருக்கிறார்கள்.



இதனால்தான் இந்தியத் தேர்தலிலும் அமெரிக்கா அக்கறை காட்டுவது. காங்கிரசோ பி.ஜே.பி யோ யாரோ வரட்டும் ஆனால் இடதுசாரிகள் மாத்திரம் சொல்லிக் கொள்கிற எண்ணிக்கையில் வந்துவிடக் கூடாது என்பதில் கவனம் கொண்டு அதற்காக இங்குள்ள கார்ப்பரேட்டுகளையும் ஊடகங்களையும் செலவு செய்து முடுக்கி விட்டுக் கொண்டிருக்கிறது. 62 இடது சாரி பாராளு மன்ற உறுப்பினர்கள் மட்டும் இல்லாது இருந்திருந்தால் அணுப் பரவல் ஒப்பந்தத்தை எவ்வளவோ விரைவாக, எளிதாக அவர்களால் நிறைவேற்றிக் கொண்டு போயிருக்க முடியும்.

மோடியா ராகுலா என்பது போல ஒரு தோற்றம் இப்போது தெரிந்தாலும் உண்மை அதுவல்ல. அவர்கள் இருவரில் யார் வருவதிலும் அவர்களுக்கு எந்தக் கருத்தும் இல்லை. கம்யூனிஸ்டுகள் துடைக்கப் பட வேண்டும். அவர்கள்தான் ஆட்சிக்கு வரப் போவது இல்லையே. பிறகு ஏன் இப்படி?

காரணம் எளிதானது. வங்கித் துறையில், இன்சூரன்ஸ் துறையில், சில்லறை வணிகத்தில் அந்நிய முதலீடுகளை கொண்டு வந்து சேர்க்க வேண்டும். சற்றே ஆளுமை செலுத்தக் கூடிய எண்ணிக்கையில் இடது சாரிகள் வந்து விட்டாலும் இது சாத்தியப் படாது. இவைதான் இவர்கள் மோடியை இப்படிக் கொண்டாட காரணம்.

இந்தத் தேர்தல் காங்கிரசை ஒரு பரிதாப நிலைக்குத் தள்ளியிருக்கிறது. இத்தனை ஆண்டுக்காலம் நிதி அமைச்சராக இருந்த சிதம்பரம் அவர்களே தமிழ் மண்ணில் நிற்கப் பயப்படுகிறார். காங்கிரசின் மூளை என்று சொல்லப் படும் தலைவர் அவர். அவர் வெகு மக்களுக்கு விரோதமாக திட்டம் தீட்டுகிறார் என்பதில்தான் அவரோடு நமக்கு பிரச்சினையே அன்றி அவரது ஞானத்தின் மீதோ ஆளுமையின் மீதோ, உலக அரங்கில் அவருக்கான இடம் குறித்தோ எல்லாம் நமக்கு கொஞ்சமும் அய்யம் கிடையாது. அவரே தான் தேர்தலில் நிற்கவில்லை என்று அறிவிக்க வேண்டிய ஒரு சூழல்.

ஒன்றிரண்டு இடங்களிலேனும் ஜாமீன் பெறலாம் எனில் முருகன், சாந்தன் மற்றும் பேரறிவாளன் ஆகிய மூவரையும் விடுதலை செய்வதாக தமிழக முதல்வர் அறிவித்ததை எதிர்த்து மனு செய்த பிறகு ஜாமீனுக்கும் நம்பிக்கை அற்றுப் போன ஒரு அவலமான நிலைதான் காங்கிரசிற்கு.

இந்த நல்ல மனிதர் ஏன் காங்கிரசில் இருக்கிறார். நாம் பல நேரம் எண்ணிப் பார்க்கும்படியான ஒரு மனிதர் அந்தோனி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"

**இவ்வளவு ஏன்? கார்கிலில் பனியில் விறைத்த நிலையில் நம் வீரர்களின் உடல்கள் எடுக்கப் பட்டன. இறந்தபிறகும் தேசத்தை காத்தல் செய்த அந்த தீரம் மிக்க வீரர்களை நல்லடக்கம் செய்வதற்கு வாங்கப் பட்ட சவப்பெட்டிகளில்கூட ஊழலின் முத்திரையைப் பதித்தவர்களாயிற்றே பி.ஜே.பி.யினர்.**

"

தனிப்பட்ட முறையில் மக்களிடம் அதுவும் கேரள மக்களிடம் பேரதிகமான மரியாதையை தக்க வைத்துக் கொண்டிருப்பவர். அவரே இந்தத் தேர்தலில் நிற்கவில்லை என்று சொல்லுமளவிற்குத்தான் வெற்றி வாய்ப்பு அவருக்கு இருக்கிறது. எஞ்சி இருக்கும் வாய்ப்புகளில் கணிசமான பகுதியை உளறியே ஒழித்து விடுவார் ராகுல்.

ராகுல்தான் இப்படி என்றால் ஊடகங்களின் நாயகனான மோடியும் சற்றும் அவருக்கு சளைக்காத வகையில்தான் உளறிக் கொண்டிருக்கிறார்.

ராஜாஜி தலைமையில் வேதாரண்யத்தில் உப்பு சத்தியாகிரஹம் நடந்தது. வ.உ.சி தலைமையில் நடந்ததாக மோடி திருச்சியில் சொல்கிறார்.

குப்தர்களின் காலம் பொற்காலம் என்றும், குப்தர் வம்சத்தைச் சார்ந்த சந்திர குப்தரது நீதி பரி பாலனம் தன் நினைவுக்கு வருவதாகவும் பாட்னா பொதுக் கூட்டத்தில் பேசியிருக்கிறார். சந்திர குப்தர் குப்தரே அல்ல. அவர் மௌரியப் பேரரசர்.

அதே கூட்டத்தில், உலகத்தையே வென்ற அலக்சாண்டர் பீஹாரில் உள்ள தக்க சீலத்தில் தோற்று ஓடியதாகவும் பெருமைபட பேசியிருக்கிறார். திரண்டிருந்தவர்களில் வரலாறு தெரிந்தவர்கள் சிரித்திருக்கிறார்கள். காரணம் கங்கையைக் கடந்து பீஹார் பக்கம் அலெக்சாண்டர் வரவேயில்லை. தக்கசீலம் பீஹாரிலேயே இல்லை. பாகிஸ்தானில் இருக்கிறது.

பட்டேலின் இறுதி நிகழ்ச்சிகளில் நேரு கலந்து கொள்ளவே இல்லை என்றொரு பொய்யையும் மோடி போகிற போக்கில் சொல்லியிருக்கிறார்.

வரலாறு தெரியாமல் உளறுகிறார் என்கிறார்கள் பலர். ஆறாம் வகுப்பு படிக்கும் குழந்தை இப்படி வரலாறை தேர்வில் எழுதினால் ஆசிரியர் அந்தக் குழந்தையின் காதைப் பிடித்துத் திருகி தலையில் நாலு கொட்டுப் போடுவார். இப்படி வரறை எழுதினால் மாணவனே தோற்றுப் போவான். எனில் இவ்வளவு மோசமாக வரலாறை கூச்சமின்றி சொல்லும் அவர் எப்படி பிரதமராவது.

அல்லது வரலாறைத் திரிப்பது என்று முடிவானபின் இவற்றையும் சேர்த்து திரித்து விடலாமே என்று செய்ய வேண்டும். அப்படி தெரிந்தே திரிக்கிறார் என்றாலும் அவர் பிரதமராவதற்கு உரிய தகுதியை இழக்கிறார்.

ஊழலை தேசத்திலிருந்து ஒழிக்க வேண்டும். அதற்கு முற்றிலும் தகுதியானவர் மோடிதான் என்று கேப்டன் சொல்லியிருப்பதாக செய்தித் தாள்கள் சொல்கின்றன.

வருடம் சரியாய் நினைவில் இல்லை. அன்றைய பி.ஜே.பி தலைவர் பங்காரு லட்சுமணன் கையூட்டு பெறுவதை ஒரு தனியார் தொலைக்காட்சி நிறுவனம் வெளியிட்டதை எல்லோரும் பார்த்தோம். அந்தக் குற்றம் மெய்ப்பிக்கப் பட்டு அவரும் திஹார் சிறையில் அடைக்கப்பட்டார். "சட்டவிரோதமாக சுரங்கத் தொழில் நடத்த வேண்டாம் என்று தாங்கள் எப்படியெல்லாமோ எடுத்து சொல்லியும் அவற்றை அலட்சியப் படுத்தினார் எடியூரப்பா. அதன் விளைவுகளைத்தான் இப்போது அவர் அனுபவித்துக் கொண்டிருக்கிறார். பி.ஜே.பியும் ஊழல் பிடியிலிருந்து தப்ப முடியவில்லை" என்று நாக்பூரில் அத்வானியே




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமுறை பேசியுள்ளார்.

இவ்வளவு ஏன்? கார்கிலில் பனியில் விறைத்த நிலையில் நம் வீரர்களின் உடல்கள் எடுக்கப் பட்டன. இறந்தபிறகும் தேசத்தை காத்தல் செய்த அந்த தீரம் மிக்க வீரர்களை நல்லடக்கம் செய்வதற்கு வாங்கப் பட்ட சவப்பெட்டிகளில்கூட ஊழலின் முத்திரையைப் பதித்தவர்களாயிற்றே பி.ஜே.பி.யினர்.

வி–ஜி நிறுவனத்திற்கு சதுரமீட்டர் ஒரு ரூபாய் என்ற விலையில் எட்டு லட்சம் சதுரமீட்டர் நிலத்தை மோடி அரசு கொடுத்திருக்கிறது. அன்றைய தேதியில் அந்த இடத்தின் அரசு மதிப்பு 950 ரூபாய். அரசு மதிப்பே 950 எனில் வெளிச் சந்தையில் அதன் மதிப்பு இன்னும் கூடுதலாகத்தான் இருக்கும். அரசு மதிப்பிற்கே வைத்துக் கொண்டாலும் 75,92,00,000 அரசுக்கு இழப்பல்லவா?



நானோ நிறுவனத்திற்கு இவர்கள் அள்ளி வழங்கியுள்ள சலுகைகளை எப்படி பட்டியலிடுவதென்றே தெரியவில்லை. சதுர அடி 10,000 ரூபாய் மதிப்புள்ள நிலத்தைவெறும்900ரூபாய்க்கு கொடுத்திருக்கிறார்கள். இவர்களது சக்தியைப் பயன்படுத்தி 0.01 வட்டி விகிதத்தில் நானோவிற்கு 9570 கோடி ரூபாய் கடன் கிடைக்கிறது. கல்விக் கடனுக்கு 14% வட்டி. நானோவிற்கு 0.01%. மட்டுமல்ல 20 ஆண்டுகள் கழித்து கடனைக் கட்ட ஆரம்பித்தால் போதும் என்கிற அளவில் தளர்ந்த நிபந்தனை.

நானோவின் செலவினத்தின் மதிப்பே 2200 கோடிதான். பெற்ற கடனோ 9570 கோடி.

ஒரு லட்சம் ரூபாய்க்குர வீடு கட்டினால் 80,000 தான் கடன் கிடைக்கும். நானோ 2200 கோடி செலவு செய்கிறது. அதற்கு 9570 கோடி கடன் கிடைக்கிறது. நானோ தயாரிக்கும் ஒவ்வொரு காருக்கும் ஏறத்தாழ 60,000 ரூபாயை சலுகையாகப் பெறுகிறது.

இதுதான் மோடி.

குஜராத்தில் நிகழும் மரணங்களுள் 31% தற்கொலை மூலம் நிகழ்வதாக தேசிய குற்றவியல் பதிவுகள் வாரியம் சொல்கிறது.

"இந்தியாவில் விபத்து மரணங்களும் தற்கொலைகளும் 2012" என்ற தனது ஆய்வறிக்கையில் 2011 ஆம் ஆண்டு மட்டும் 6382 பேர் குஜராத்தில் தற்கொலை செய்திருக்கிறார்கள் என்றும் இது 2012 இல்7110 ஆக உயர்ந்தது என்றும் கூறுகிறது.

தற்கொலை செய்து கொள்ளும் குஜராத் மக்களில் ஏறத்தாழ 40% பேர் 15 வயதிற்கும் 29 வயதிற்கும் இடைப் பட்டவர்கள் என்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

குஜராத் சந்தித்த இந்த அவலத்தை மொத்த இந்தியாவும் சந்திக்கக் கூடாது என்பதற்காகவே நாம் மோடியை நிராகரிக்கிறோம்

மோடி பிரதமரானால் அவரைப் பயன்படுத்தி ஈழத்தை சாத்தியமாக்குவார் வைகோ என்கிறார்கள் நண்பர்கள். 2002 இல் அன்றைய துணைப் பிரதமர் அத்வானி அவர்கள் இலங்கையிடம் ராஜீவ் கொலையில் குற்றவாளியாகத் தேடப்படும் பிரபாகரனைக் கைது செய்து இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கேட்டார்.

ஆணையிரவுப் போர் என்பது புலிகளின் ஈழப் போரில் பொன் எழுத்துக்களால் பொறித்துக் கொண்டாட வேண்டிய ஒரு நிகழ்வு. வியக்கத் தக்க அளவு வெற்றிகரமாக முன்னேறிய புலிகள் யாழ்ப்பாணத்தை வசப்படுத்தி விடுகின்றனர். யாழ் நகரை வசப் படுத்திய அடுத்த கணம் அவர்கள் யாழ் கோட்டையை முற்றுகையிடுகின்றனர். யாழ் கோட்டையில் பதுங்கியிருந்த அல்லது தங்கியிருந்த ஏறத்தாழ 4000 இலங்கை ராணுவ வீரர்களுக்கும் புலிகளிடம் சரணடைவதைத் தவிர வேறு வழி இல்லை என்கிற சூழல். இது நடந்தது 2002 இல்.

இது மட்டும் நடந்திருக்குமானால் ஒருக்கால் ஈழப் போரின் முகம் சற்று மாறியிருக்கக் கூடும். 4000 இலங்கை வீரர்கள் புலிகளிடம் சரணடைந்திருந்தால் அந்த 4000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“

**மோடி பிரதமரானால் அவரைப் பயன்படுத்தி ஈழத்தை சாத்தியமாக்குவார் வைகோ என்கிறார்கள் நண்பர்கள். 2002 இல் அன்றைய துணைப் பிரதமர் அத்வானி அவர்கள் இலங்கையிடம் ராஜீவ் கொலையில் குற்றவாளியாகத் தேடப்படும் பிரபாகரனைக் கைது செய்து இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கேட்டார்.**

”

வீரர்களையும் மீட்டெடுக்க வேறு வழியின்றி இலங்கையும் சற்று இறங்கி வந்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கக் கூடும்.

4000 இலங்கை வீரர்களும் சிங்களவர்கள் என்பதால் இலங்கை அரசாங்கத்திற்கு ஒரு நெருக்கடி ஏற்பட்டிருக்கும். சிங்கள மக்கள் என்ன செய்தேனும் அவர்களை மீட்டெடுக்க அரசாங்கத்தை நெருக்கி இருப்பார்கள். சர்வதேச நெருக்கடியும் ஏற்பட்டிருக்கும் இலங்கைக்கு.

அன்றைய பிரதமர் வாஜ்பாய் அவர்கள் தலையிட்டு அந்த நெருக்கடியிலிருந்து 400. வீரர்களையும் மீட்டெடுக்க இலங்கைக்கு உதவினார் என்ற ஒரு செய்தியும் உண்டு.

எனில் ஈழ விஷயத்தில் வெண்ணெய் திரண்டு வந்தபோது தாழியை உடைத்தவர்கள் ஆகிறார்கள் பி.ஜே.பி யினர்.

மத்தியப் பிரதேச பி.ஜே.பி முதல்வர் சிவராஜ்சிங் சௌஹான் சாஞ்சியில் கட்டப்பட்டுள்ள புத்தப் பல்கலைக் கழகத்தை துவக்கி வைக்க ராஜபக்ஷேவைத்தான் அழைத்தார். கருப்புக் கொடி காட்டப் போன வைகோ அவர்களை கைது செய்து திறந்த வெளியில் இரவு பகலாக வைத்திருந்தது பி.ஜே.பி அரசு. மட்டுமல்ல, இவர்களில் யாரேனும் ரயில் மார்க்கமாக வந்து விடக்கூடும் என பயந்த அவர்கள் அன்றைய தினம் போபால் மற்றும் விதிஷா இடையே எந்த ரயிலும் நிற்க அனுமதிக்க வேண்டாம் என்று ரயில்வே அமைச்சகத்திற்கு விண்ணப்பம் வைக்கிறது. 20.09.12 அன்று 11 ரயில்கள் அந்த ரயில் நிலையங்களில் நிற்கவில்லை.

விண்ணப்பித்தது பி.ஜே.பி. ஒத்துழைத்தது காங்கிரஸ். ராஜ பக்ஷேவைக் காப்பாற்றவெனில் இருவரும் எப்போதும் கரம் கோர்க்கவே செய்வார்கள். 19.09.12 அன்று பத்திரிக்கையாளர்களை சந்தித்தபோது ராஜபக்ஷே 2000 இந்து கோயில்களை இடித்து நாசப் படுத்தியவர் என்று கூட கட்காரியிடம் தான் சொல்லிப் பார்த்ததாகவும் ஆனாலும் அவர் இளகவில்லை என்றும் வைகோ சொன்னார்.

ஆக, ஊழலைப் போலவே ஈழ விஷயத்திலும் காங்கிரசும் பி.ஜே.பி யும் ஒன்றுதான். இங்கு பி.ஜே.பியைப் பற்றி பேசிய அளவிற்கு காங்கிரசைப் பேசாததற்கு தேவை தவிர வேறு எதுவும் காரணம் இல்லை.

மற்றபடி மதம் என்பதைத் தவிர இருவரும் ஒன்றுதான். மதம் என்று வரும் போதுகூட இவர்கள் இடிப்பார்கள், அவர்கள் வேடிக்கைப் பார்ப்பார்கள். அவ்வளவுதான்.

தி.மு.க விற்கு இந்தத் தேர்தல் என்பது 2Gயிலிருந்து தன்னைத் தற்காத்துக் கொள்வது என்பதில்தான். அ.தி.மு.க விற்கென மக்கள் சார்ந்த நோக்கமெல்லாம் இல்லை. அதுவும் சில பலூன் கனவுகளோடுதான் இந்தத் தேர்தலை அணுகுகிறது.

மாறாக இந்தத் தேர்தல் செய்த சில நல்லதுகளுள் மிக முக்கியமான நல்லது இரண்டு இடதுசாரிகளையும் இணைந்து தேர்தலை சந்திக்க வைத்ததுதான்.

தனது 50 ஆண்டுகால வாழ்க்கையில் தனது கட்சிக்கு ஓட்டுப் போடும் வாய்ப்பு இப்போதுதான் கிடைத்திருப்பதாக எழுத்தாளர் மாதவராஜ் பூரிப்போடு எழுதுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மோடியா ராகுலா என்பது போல ஒரு தோற்றம் இப்போது தெரிந்தாலும் உண்மை அதுவல்ல. அவர்கள் இருவரில் யார் வருவதிலும் அவர்களுக்கு எந்தக் கருத்தும் இல்லை. கம்யூனிஸ்டுகள் துடைக்கப் பட வேண்டும். அவர்கள்தான் ஆட்சிக்கு வரப் போவது இல்லையே. பிறகு ஏன் இப்படி?**

18 பாராளுமன்றத் தொகுதிகள். எனில் 108 சட்டமன்றத் தொகுதிகள். ஆக 108 சட்டமன்றத் தொகுதிகளில் அருவாள் சுத்தியலும், கதிர் அருவாளும் சுவர்களில் பூக்கும். இது எவ்வளவு பலமான விளைவுகளை வருங்காலத்தில் கொண்டு வரும் என்பதை எண்ணிப் பார்த்தாலே பூரிப்பாய் இருக்கிறது.

108 தொகுதிகளிலும் தோழர்கள் வீடு வீடாய் போய் மக்களைச் சந்திக்கப் போகிறார்கள். சின்னமும் கட்சியும் , கொள்கையும் மக்களிடம் கொண்டுபோகப் படுவதற்கு ஒரு பெரிய வாய்ப்பினை இந்தத் தேர்தல் தந்திருக்கிறது.

மக்களுக்கும் இடதுசாரிகளுக்கும் இடையே ஒரு நெருக்கமான உறவு மலர்வதற்கு இது ஒரு சரியான வாய்ப்பு.

எல்லாமே மோசம் என்றொரு பொது புத்தி இருக்கிறது. அதை உடைக்க வேண்டும். நாம் ஓட்டு போட்டு அனுப்பியவர்கள் என்ன செய்தார்கள் என்று பரிசீலியுங்கள். யாருமே எதுவுமே செய்யவில்லையா. இன்றளவும் பொதுத்துறைகளை இன்சூரசை பி.ஜே.பி மற்றும் காங்கிரசிடமிருந்து காக்கிற வேலையை இடது சாரிகள் செய்திருப்பது தெரியும்.

13 ஆண்டுகாலம் சட்டமன்ற உருப்பினராக உள்ள பாலபாரதியிடம் 10 பவுன்கூட இல்லை. இதை விகடன் சொன்னது. ஐந்து ஆண்டுகள் ச.ம.உ. ஆக தோழியின் தாயார் இன்னமும் மண் சுமந்துதான் பிழைக்கிறார்கள்.

தோழர் நன்மாறன் 5000 ரூபாய் இல்லாமல் அரசு கல்லூரியில் தன் பையனை படிக்க வைத்திருக்கிறார். 10 ஆண்டுகாலம் விலிகி வாக இருந்தவர்.

பொதுத் தொகுதியில் ஒரு தலித் வேட்பாளரை நிறுத்தும் துணிச்சல் இடதுசாரிகளுக்கு மட்டுமே உண்டு. ஆனானப் பட்டவர் என்று புகழ்ப்படுகிற ஆ.ராசாவே பெரம்பலூர் பொதுத் தொகுதியானதும் தனித் தொகுதியான நீலகிரிக்குப் பயணப்பட வேண்டி வந்ததை பொருத்திப் பார்த்தால் இது எவ்வளவு துணிச்சலான செயல் என்பது விளங்கும். எல்லாம் மோசம் இல்லை.

இடதுசாரிகளிடம் நமக்குள்ள கோவம். இன்னும் கொஞ்சம் முன்னமே முடிவெடுத்து ஒரு ஆதரவு சக்தியை கொண்டு வந்திருக்க வேண்டும். அ.தி.மு.க, தி.மு.க வோடே கூட்டு சேர்ந்தவர்கள் ஆம் ஆத்மியை அரவணைத்திருக்க வேண்டும்.

அதை ஏன் செய்ய மறுத்தார்கள் என்று தெரியவில்லை. தாங்கள் போட்டியிடாத தொகுதிகளில் யாருக்கு ஆதரவு என்பதை சொல்வதாக சொல்லியிருக்கிரார்கள். அநேகமாக ஆம் ஆத்மியை ஆதரிக்கக் கூடும். ஒரு உடன்பாடு இவர்களுக்குள் ஏற்பட்டிருக்குமாயின் கோவை, விருதுநகர், மற்றும் கன்னியாகுமரியில் ஏகத்திற்கும் பலம் கூடியிருக்கும்.

இப்போதும் காலம் கடந்துவிடவில்லை என்றே படுகிறது.

ஜெயிக்கறவங்களுக்குப் போடலாமே என்பதும் உடைத்தெறியப் படவேண்டிய ஒரு பொதுப் புத்திதான். நல்லவர்களை ஜெயிக்க வைப்போம். ஜெயிக்காது போயினும்கூட நல்லவர்களுக்கு வாக்களித்த திருப்தி இருக்கிறது பாருங்கள்!. அதை அனுபவித்துப் பார்த்தவர்களுக்குத்தான் புரியும்.

அனுபவித்துப் பாருங்கள். ■




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரொளி

நெடுந்தூரம் கடந்த
நெடுங்கடற் பரப்பின் நடுவிலிருந்து
அலை சுமந்த படகின் ஒளி
சிறு புள்ளியென
தூரத்தொளியாய் தெரிய
கொடுமிருளில்
வாசல் திறந்து காத்திருக்கும்
இரவின் தினசரிகளில்
ஊதக்காற்றின் அலைக்களிப்பில்
ஊசலாடும் சிம்னியின் ஒளியென
இப்பாரதூரத்தின் சிற்றொளி
ஊர்ஜிதப்படுத்துகிறது
நாங்கள் வாழ்ந்துக் கொண்டிருப்பதை

மயிலிறகு குட்டிகள்
முனை மடிக்கப்பட்ட தாளின்
நசுக்கப்பட்ட
ஒவ்வொரு சொல்லுக்குள்ளிருந்தும்
பிரவேசித்துக் கொண்டிருந்தன
குமுறல்கள்.
படர்தலைச் செய்யும் கொடியின்
சுயம் துண்டிக்கப்பட்டு
வாசிப்பு மழுங்கிக் கொண்டிருக்க
தழுவப்படா தேகமொத்ததாய்
நிரலும் நிரையுமாக
நெடுகிலும் கிடந்தன உடல்கள்..
சிந்தனை மூலத்திற்கு
மூடுதிரையிட்டு நாளும்
படிந்துகொண்டிருக்கிறது
தூசி வானம்..
என்றோ ஒருநாள்
ஒரு புத்தகத்தில் வைக்கப்பட்ட
பென்சில் தூள் தின்னும்
மயிலிறகு குட்டிகளிட்டு
திரிந்துக் கொண்டிருந்தன
நூல்களைச் சுமந்து.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரல் வழி ஊடகத்தில் தமிழ்



“செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை” என செவிப்புலனை மேன்மைப்படுத்திப் பாடியிருக்கிறார், அய்யன் திருவள்ளுவர்.

செவிப்புலன் இல்லாதவனே பிறவி ஊமை யாகவும் கருதப்படுகிறான். செவிவழியாகச் செல்லும் ஒலிகளே மனிதனது சிந்தனைகளை வடிவமைக்கின்றன என்கிறார், அமெரிக்க BROWN பல்கலைக்கழகப் பேராசிரியர் SETH HOROWITS. அவர் எழுதிய “The Universal Sence : How hearing shape the mind” எனும் நூலில் வலியுறுத்துவதும் இதனையே. மனிதனது பார்வைப்புலனை விட, செவிப்புலனே மிக மிகச் சிறப்புக்குரியது எனப் பல ஆய்வுக்குறிப்புகளோடு நிரூபிக்கிறார். செவிடனாக இருப்பதைவிடக் குருடனாக இருப்பதையே தான் விரும்புவதாகவும் குறிப்பிடுகிறார்.

நம் பிறப்பின் ரகசியங்களைக் கூறும், மருத்துவ விஞ்ஞான ஆய்வுகளின்படி கரு, வளர்ச்சியுற்ற 13வது வாரத்திலேயே “செவி” உருவாக ஆரம்பித்து, 20ஆவது வாரத்தில் முழு வளர்ச்சியைப் பெற்றுவிடுகிறது. ஆனால் கண்களோ, 26ஆவது வாரத்தில் தான் ஆரம்பமாகிறது. தாயின் இதயத்துடிப்பு, இரத்த ஓட்டத்தின் நுண்ணிய ஒலிகள் அனைத்தையும் கேட்கும் ஆற்றலை, சிசு கர்ப்பத்துக்குள்ளேயே பெற்று விடுகிறது. அது மட்டுமா! வெளிஉலகில் தாய் பேசும் குரலையும், இசை ஒலிகளையும் கூட, கர்ப்பத்துக்குள்ளிருந்து சிசுவால் கேட்க முடிகிறது என ஆய்வுகள் மூலம் கண்டறிந்துள்ளனர்.

இன்றைய இந்த ஆய்வுகள் கூறும் உண்மைகளை,இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, அய்யன் வள்ளுவன் கூறியது விந்தைதான். குழந்தை, ஒரு மொழியை எவ்வாறு பேச ஆரம்பிக்கிறது? தன் செவிவழியாக, நம் பேச்சொலிகளைக் கேட்டு, முகபாவங்களையும் உடலசைவுகளையும், கண்ணால் பார்த்து, தான் உள்வாங்கிய பேச்சொலிகளைப் பிரதிபலிக்க முயன்று பேச ஆரம்பிக்கிறது. அக்குழந்தைக்கு செவிப்புலன் இல்லாதிருந்தால், பார்வையில் கண்டவற்றால் பயனில்லை. காரணம், ஒலி என்றால் என்னவென்று அக்குழந்தைக்குப் புரியாது.

இவ்வாறு குழந்தை முதன் முதலில் பேசும் மொழியே, அதற்குத் தாய் மொழியுமாகிறது. தமிழ்ப் பெற்றோர், குழந்தையிடம் வேற்று மொழியில் பேசி, அதனைக் கிரகித்துக் குழந்தை பேசுமானால் அதுவே அக் குழந்தைக்குத் தாய்மொழியாகிறது. காரணம்? சிந்திக்கும் மொழியும் அதுவாகிவிடுவதே.

என்ன..? சிந்திப்பதற்கு ஒரு மொழியா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என, நீங்கள் இப்போது சிந்திக்கலாம். உண்மையில் ஒவ்வொருவரும் சிந்திப்பதற்கு நம் உணர்விலேயே பதிந்துவிட்ட முதல் மொழிதான் பயன்படும். பின்னாளில் பன்மொழிகளில் பேசும் ஆற்றலை நாம் பெற்றாலும், அந்தந்த மொழிகளிலேயே உடனுக்குடன் சிந்தித்துப் பேசும் ஆற்றலை வளர்த்துக்கொண்டாலும். அடிப்படையான நம் சொந்தவிடயங்ளை, நிச்சயம், குழந்தைப்பருவத்தில் நமக்குள் பதியம்போடப்பட்ட அந்தத் தாய் மொழியில் தான் சிந்திப்போம், இல்லையா!

தாய்மொழி என்பது, தாய் பேசிய மொழியோ, தந்தை பேசிய மொழியோ அல்ல, குழந்தை முதன்முதலில் எந்தமொழியைப் பேசியதோ அதுவே அக்குழந்தைக்குத் தாய் மொழியாகும் என்கிறார் தமிழ்ப்போராசிரியர் அப்துல்காதர். தாயின் கருவறையில் இருந்தபோதும், வெளியில் வந்த பின்னரும், தன் செவிவழியாகக் கேட்ட ஒலிகளைத் தன் குரல்வழி பிரதிபலிக்க, குழந்தை எடுத்துக்கொள்ளும் முயற்சியிலே, ஒரு மொழி பிரசவமாகிறது. எனவே அக்குழந்தையைப் பொறுத்த அளவில், பிரசவிக்கப்பட்ட அம்மொழி குழந்தையைத் தாய் ஆக்குகிறது. அதுவே தாய்மொழி என்கிறார் அவர்.

இத்தனை விளக்கமும் எதற்கென்றால். செவிவழியாகச் செல்லக்கூடிய ஊடகத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தவே.

**ஒரு மொழி நிலைத்து வளர ஒலிஊடகத்தின் பங்கு மிகமுக்கியமானது. ஒலி ஊடகம் என்று சொல்லும்பொழுது, அங்கு முன்னிலை வகிப்பது, வானொலியே. காரணம், வானொலி எனும் சாதனம், மானுடவாழ்க்கையில் தன் ஆளுமையைச் செலுத்த ஆரம்பித்த பின்னர், எத்தனேயோ நவீன மின்னியல் சாதனங்கள் வந்துவிட்டாலும், வானொலியின் சக்தியை எந்த நவீன சாதனமும் விஞ்சியதில்லை.**

ஒரு மொழி நிலைத்து வளர ஒலிஊடகத்தின் பங்கு மிகமுக்கியமானது. ஒலி ஊடகம் என்று சொல்லும்பொழுது, அங்கு முன்னிலை வகிப்பது, வானொலியே. காரணம், வானொலி எனும் சாதனம், மானுடவாழ்க்கையில் தன் ஆளுமையைச் செலுத்த ஆரம்பித்த பின்னர், எத்தனேயோ நவீன மின்னியல் சாதனங்கள் வந்துவிட்டாலும், வானொலியின் சக்தியை எந்த நவீன சாதனமும் விஞ்சியதில்லை, விஞ்சப்போவதுமில்லை. ஏனெனில், தொலைக்காட்சி போன்ற சாதனங்களுக்காக எமது ஐம்புலன்களையும், ஒருமுகப்படுத்த வேண்டியிருக்கும். ஆனால் நமது அன்றாட அலுவல்களுக்கு இடையூறு செய்யாமல் நம்மை வந்தடையக்கூடிய சக்தி, வானொலிக்கு மட்டுமே உண்டு. எனவே வனொலி என்பது, பொதுவாகப் பொழுதுபோக்குச் சாதனங்களில் ஒன்றெனக் கருதப்பட்டாலும், வானொலி ஆற்றிய, ஆற்றவேண்டிய பணி மகத்தானது.

ஆரம்பகாலத்தில், ஒரு நாட்டின் நிர்வாகத்துக்கும், மக்களுக்கும் இடையிலான தொடர்புப் பாலமாக விளங்கியது வானொலியே. அன்று கல்வி தகவல் பொழுதுபோக்கு, என்றிருந்த, வானொலியின் செயற்பாடுகள், இன்றுதமிழ் ஊடகங்களைப் பொறுத்தவரையில், கல்வி காணாமல்போய், தகவல், மற்றும் பொழுதுபோக்கு என்றாகி, தற்போது தகவலும் தொலைந்துபோய், மொழியும் சிதைவடைந்து, பெரும்பாலும் பொழுதுபோக்கும் வர்த்தக நோக்கமுமே மேலோங்கி வருவது, கவலையைத் தருகிறது. நமது மொழிவழி, கலாசாரப் பண்பாட்டுக் கோலங்கள்வழி வந்த விழுமியங்களை சிறிது சிறிதாகத் தொலைத்துக் கொண்டிருக்கிறோம்.

*1996*ம் ஆண்டு, நவம்பர் மாதத்தில், BENIN எனும் மேற்கு ஆபிரிக்க நாட்டில், நெதர்லாந்து வானொலியால் நடத்தப்பட்ட பயிற்சிப்பட்டறை அது. அதன் தலைப்பு "The Relevance of Media for adolescents (growing up in Island societies)" சுருங்கச்சொன்னால் "விடலைப்பருவத்தினரின் சிந்தனைகளை வடிவமைப்பதில் ஊடகங்களின் பங்கு" எனும் கருப்பொருளில், பலவிடயங்கள் ஆராயப்பட்டன. சில வழிகாட்டுதல்களும் அங்கு தரப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலகட்டத்தில் நமது சிந்தனைகளில், செயல்களில், பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய இரண்டு முக்கிய அம்சங்கள் உண்டு. ஒன்று நமக்கு அமையும் நண்பர்களின் சகவாசம். அடுத்தது ஊடகங்களால் ஏற்படுத்தப்படும் தாக்கம். இதனையே "Adolescents and the Media" என்ற நூலின் ஆசிரியர் Victor S Strasbuger அழுத்தமாக குறிப்பிடுகிறார்: "விடலைப்பருவத்தில், வன்முறை உணர்வு, சமூகவிரோத மனப்பாண்மை, தவறான பாலுணர்வுச் சிக்கல்கள், போன்றவற்றைத் தூண்டுவதற்கான காரணிகளில் ஊடகங்களே முன்னிற்கின்றன" என்று.

Benin நாட்டில்பெற்றபயிற்சியின் முடிவில் நாடுதிரும்பிய பின், அவ் வழிகாட்டுதல்களை நான் பணியாற்றிக்கொண்டிருந்த ஊடகத்துறையில் பயன்படுத்தமுடியாத அளவு காலம் மாறியிருந்தது. காரணம்! வனொலி, தொலைக்காட்சி என இரண்டு துறைகளிலும் தனியார் வரவு அப்போது ஆரம்பமாகியிருந்தது. அவ்வரவு, ஆரோக்கியமானதோர் போட்டியைத் தோற்றுவிப்பதற்குப் பதிலாக, நூறு சத விகிதம் வர்த்தக நோக்கமே மேலோங்கி, முழுக்க முழுக்க பொழுதுபோக்கு என்ற நிலையில், விழுமியங்களைத் தொலைக்கும் நிலையும், அந்நிய கலாசார அத்துமீறல்களும் துளிர்விட ஆரம்பித்திருந்தன.

மாணவப்பருவத்தில் பொதுவாக ஏற்படக்கூடிய மன அழுத்தங்களிலிருந்து விடுபட ஒரு வடிகாலாய் அமையக்கூடிய, பொழுதுபோக்குச் சாதனங்கள், இனிப்பூட்டப்பட்ட மருந்து போல, விழுமியங்களைக் காக்கும் பணியையும் ஆற்றவேண்டும் என நம்பப்பட்ட ஒரு காலகட்டத்தில்தான் நான் எனது ஒலிபரப்பு வாழ்க்கைப் பயணத்தை ஆரம்பித்தேன். இது கொஞ்சம் மனோதத்துவ ரீதியாக, பொறுப்புடன் ஆற்றவேண்டிய பணி என்பதை, நமக்கு வழிகாட்டியவர்கள் சொல்லித் தந்திருக்கிறார்கள். அறுபதுகளின் பிற்பகுதியில் ஒரு ஒலிபரப்பாளனாக என் பயணத்தை ஆரம்பித்தபோது, என்னுள் விதைக்கப்பட்ட விழுமியப் பண்புகளே, எனக்கோர் சிறந்த அத்திவாரமுமாக அமைந்தது. அவற்றில் சிலவற்றைத் தொட்டுக் காட்ட விரும்புகிறேன்.

**ஒலிபரப்பாளர்கள் மொழிக்காற்ற வேண்டிய பங்களிப்புகள்:**

நாம் ஒரு விளம்பரத்தை வாசிக்கும் போது கூட, அதனைக் கேட்கும் வளரும் தலைமுறை, அம்மொழியைத் தெளிவாகவும், இலக்கண வழுவின்றியும், உச்சரிக்கக் கற்றுத் தரும் ஒரு ஆசிரியர் நாம் என்ற பொறுப்புணர்வு நமக்கு இருக்கவேண்டும் எனச் சொல்லித் தரப்பட்டது. அதேவேளை, பிரதேசச் சார்பு இல்லாத, குறிப்பாக வட்டார வழக்கின் உச்சரிப்புச் சாயல்கள் இல்லாத, பொதுவான நல்ல தமிழில் அறிவிப்புப் பணிகளைச் செய்தால்தான், பிரதேச எல்லைகள் கடந்து மக்களைச் சென்றடையலாம் என்ற பேருண்மையும் சொல்லித் தரப்பட்டது.

சக்தி வாய்ந்த இவ்வூடகத்தின் மூலம், மறைந்து மறந்தும்போன நல்ல தமிழ் சொற்களை, நேயர்களுக்கு நினைவுபடுத்தி, மீண்டும் வழக்கில் கொண்டுவர முயலும் அதேவேளை, புதிய கலைச்சொற்களை அறிமுகப்படுத்தவும் முயலவேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

**உதாரணத்துக்கு ஒன்று:** வர்த்தக விளம்பரப்பிரதிகளை வடிவமைப்பதில் வித்தகரான, பல்கலை வேந்தர் சில்லையூர் செல்வராசன் அவர்கள் Ballpoint Pennக்கு "குமிழ்முனைப் பேனா" என்றொரு சொல்லை அறிமுகப்படுத்தினார். முதன்முறையாகக் கேட்பவருக்கும் அது என்ன, என்பது புரியும் வகையில் அச்சொல்லாக்கம் அமைந்திருந்ததால் நாளடைவில், பள்ளி மாணவர்க்கும் பரிச்சியமான பெயராக அது மாறியது. பேசும் மொழியோடு, அம்மொழிவழி வந்த கலாசாரப் பண்பாட்டுக் கோலமுமே, ஒரு சமூகத்தின் முகமாகும். அவ்வுண்மையை உணர்ந்து, அத்தகைய கலாசாரப் பண்பாட்டுக் கோலங்களை அடுத்துவரும் தலைமுறையும் பெருமையோடு பின்பற்றத் தூண்டுவதும், ஊடகத்தில் பணியாற்றுவோரது கடமையாகும்.

ஒரு வானொலியின் அலைவரிசை எட்டும் தூரம் வரை வாழும் மக்களை ஈர்க்கவேண்டுமெனில் ஒரு ஒலிபரப்பாளன் குறுகிய வட்டத்துக்குள் சுற்றிவராமல் அவனுக்கு பரந்த பார்வை இருக்க வேண்டியது அவசியமெனவும் எங்களுக்குச் சொல்லித்தரப்பட்டது. ஒரு கல்லூரியில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாம் ஒரு விளம்பரத்தை வாசிக்கும் போது கூட, அதனைக் கேட்கும் வளரும் தலைமுறை, அம்மொழியைத் தெளிவாகவும், இலக்கண வழுவின்றியும், உச்சரிக்கக் கற்றுத் தரும் ஒரு ஆசிரியர் நாம் என்ற பொறுப்புணர்வு நமக்கு இருக்கவேண்டும்**

அல்லது பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும்போது பெரும்பாலும் பரீட்சையின் பெறுபேறு, அதனால் கிடைக்கும் சான்றிதழே பலரதும் குறிக்கோளாய் இருக்கும். ஆனால், ஒரு ஒலிபரப்பாளனுக்கோ, ஒருவிடயத்தைப் பற்றிய தகவல் எந்த நேரம் தேவைப்படும் எனக் கணித்துக் கருமமாற்ற முடியாது. பல்துறை சார்ந்த அறிவை, விரல் நுனியில் வைத்திருப்பது அவசியம் என்பதால். எவ்வேளையும் தேடல் தேடல், என அறிவுத் தாகத்தோடு விளங்குபவனே சிறந்த ஒலிபரப்பாளனாகத் துலங்கமுடியும். எனவே ஊடகத்துறையில் பணியாற்றுவதென்பது, உலகத்திலேயே சிறந்த பல்கலைக் கழகத்தில் கற்பதற்கொப்பானது.

இனி நிகழ்காலத்துக்கு வருவோம். இன்றைய காலகட்டத்தில், ஊடகத்துறையில் விழுமியங்களைப் பற்றி வலியுறுத்தும்போது, மற்றுமொரு கேள்வியும் எழலாம். தனியார்துறையைப் பொறுத்தவரையில் ஒரு ஊடகத்தின் ஆயுள் என்பது, அது தேடக்கூடிய வருமானத்திற்கான வர்த்தக நோக்கிலல்லவா தங்கியுள்ளது. ஆகவே எதற்கு முக்கியத்துவம் கொடுப்பது? என்று.

உண்மைதான். வருமானத்திற்கான வர்த்தக நோக்கமும், சமூக அக்கறையும் கைகோர்க்க, ஓர் ஊடகத்தை நடத்திச் செல்வதென்பது, ஒற்றைக் கம்பியில் நடக்கும் சாகசத்தைப் போன்றதே. முன்பு இருந்த ஆரோக்கியமான சூழலில், விளம்பரதாரர்களுக்கு, தமது தயாரிப்புகளை, மற்றும் பொருள்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்லும் வழிமுறைகள் பற்றிய அறிவோடு, நமது நோக்கத்தைப் புரிந்துகொள்ளும் பக்குவமும் இருந்தது. இன்றைய அவசர உலகில் அதற்கெல்லாம் நேரமேது? கண்ணுக்குத் தெரிவதெல்லாம் நுனிப் புல்லாய் மேயக்கூடிய, சினிமா சார்ந்த ஜனரஞ்சகமான விடயங்களே. தம் விளம்பர முயற்சிகள் உண்மையிலேயே மக்களைச் சென்றடைகின்றனவா? என்பதை மீளாய்வு செய்வதற்கும், அவர்களுக்கு நேரமிருப்பதில்லை, அதற்கான வழிகாட்டல்களும் இதயசுத்தியோடு இயங்குவதில்லை. விளம்பரதாரர்களின் குறிக்கோளைப் புரிந்து, விளம்பரப்படுத்தப்படும் பொருள்களின் நுகர்வோர் வட்டம் எது, அந்த நுகர்வோரின் இரசனை என்ன, அவர்கள் ஊடகங்களுக்கு செவிமடுக்கச் செலவிடும் நேரம் எத்தகையது, இவற்றைப் புரிந்து ஒரு நிகழ்ச்சியை வடிவமைப்பது எப்படி? என்பதனைக் கடந்தகால உதாரணமொன்றின் மூலம் விளக்க விரும்புகிறேன்.

சுமார் மூன்று தசாப்தங்களுக்கு முன்பு, மீன்பிடி வலைகளைத் தயாரிக்கும் நிறுவனமொன்று. என்னை அணுகி "மீனவர் விரும்பிக் கேட்ட பாடல்கள்" என்றொரு நிகழ்ச்சியை நடத்தித்தர முடியுமா எனக் கேட்டார்கள். வழக்கமாக நாம் நடத்தும் "நீங்கள் கேட்டவை" "நேயர்கேட்டவை" நிகழ்ச்சிகளிலும் கூட மீனவர்கள் பாடல்களை விரும்பிக் கேட்பார்களே? மீனவர்களுக்கென்றே பிரத்தியேகமாக நடத்தும் இந்நிகழ்ச்சியில் அவர்களே கலந்துகொண்டு, அவர்களது அனுபவங்களைப் பகிர்ந்கொள்ளவும், பாரம்பரியப் பாடல்களைப் பாடவும், கலைத் திறமைகளை வெளிப்படுத்தவும் வாய்ப்பளிக்கலாமே? என்று நான் வேண்டுகோள் விடுக்க, அவர்களோ, இப்பாடியான ஒரு நிகழ்ச்சி, எல்லா நேயர்களையும் கவருமா? என கேள்விக்குறி எழுப்பினார்கள். ஏன், எல்லா நேயர்களும் கேட்கவேண்டுமென எதிர்பார்க்கிறீர்கள்? உங்கள் தயாரிப்போ மீன்பிடி வலைகள்! அவற்றைப் பயன் படுத்தப் போவதோ மீனவர்கள். நிச்சயம் அவர்கள் கேட்கும் வகையில் நிகழ்ச்சி அமையும் என நான் உறுதியளித்த பின்னர் அரை மனதுடன் சம்மதித்து மூன்று மாதங்கள் மட்டும் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். இலங்கையில் தமிழ்பேசும் மீனவர் வாழக்கூடிய அனைத்துக் கரையோரப் பிரதேசங்களுக்கும் நேரில் சென்று, அவர்களுடன் ஆழக்கடல் வரை படகில் பயணம் செய்து, எழுச்சியுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் பாடும் பாரம்பரியப் பாடல்களை ஒலிப்பதிவு செய்து, அவர்களது அனுபவங்களைக் கேட்டறிந்து, மற்றும் பல கலைத் திறமைகளையும் பதிவு செய்து வாரந்தோறும் நான் வழங்கிய நிகழ்ச்சி, மீனவர்களை மட்டுமன்றி பெரும்பாலான நேயர்களையும் கவர்ந்து, பெரும் வரவேற்பைப் பெற்றதால், 3 மாத ஒப்பந்தம் மூன்றரை வருடங்களுக்குத் தொடர்ந்தது.

இதுபோலவே தென்னிந்தியாவுக்கான ஒலிபரப்பில் "கிராமத்தின் இதயம்" என்ற ஒரு விளம்பரதாரர் நிகழ்ச்சிக்காக, தமிழகக் கிராமங்கள் அனைத்திலும் நேரில் சென்று பாரம்பரிய மக்களிசை, நாட்டுக் கூத்து போன்ற கலைத் திறமைகளை ஒலிப்பதிவு செய்து நான் வழங்கிய நிகழ்ச்சியும் மூன்றரை ஆண்டுகள் தொடர்ந்து ஒலிபரப்பாகியது.

கிராமத்து மக்களுக்காகவும், மீனவர்களுக்காகவும்;, மட்டுமல்ல, மாணவர்களுக்காகவும் விளம்பரதாரர் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகியுள்ளன என்றால் ஆச்சரியமாக இருக்கும் அல்லவா? நண்பர் எஸ். ராம்தாஸ் அவர்களது தயாரிப்பில், "நட்சத்திர அறிவுக்களஞ்சியம்" என்றொரு விளம்பரதாரர் நிகழ்ச்சி. கல்விப் பொதுத் தராதர(உயர் வகுப்பு) மாணவர்களுக்கான பாடத் திட்டத்தினடிப்படையில் பொது அறிவுக் கேள்விகளை உள்ளடக்கியதாக நாடு முழுவதும் உள்ள தமிழ்ப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்டது. நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கியவர், யார்தெரியுமா? சினிமா சார்ந்த ஜனரஞ்சக நிகழ்ச்சிகளையே தொகுத்து வழங்கிப் பிரபல்யமான நண்பர் கே.எஸ்.ராஜா அவர்கள். அந்நிகழ்ச்சி அவ்வாண்டு பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் அனைவருக்குமோர் வரப்பிரசாதமாக அமைந்தது மட்டுமல்ல. வருட இறுதியில் வெற்றி பெற்ற பாடசாலைக்குப் பரிசாக, ஒரு விஞ்ஞான ஆய்வு கூடத்தையே கட்டிக் கொடுத்தார்கள் அந்த விளம்பரதாரர்கள். இதுவோர் ஆச்சரியமல்லவா?

வர்த்தக நோக்கமும், சமூக அக்கறையும் எவ்வாறு கைகோர்த்துச் செயலாற்ற முடியும் என்பதை எடுத்துக்காட்டவே இவ்வுதாரணங்களை இங்கு குறிப்பிட்டேன்.

தனியார் வானொலிகள் பற்றிய வரலாறை ஆராய்ந்தால், 20ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில், தனிப்பட்டவர்கள், வர்த்தக நோக்கின்றி பொழுதுபோக்கிற்காக, ஆரம்பித்த Ham Radio வானொலித் தொடர்புகள் நாளடைவில் லட்சக்கணக்கில் பெருகி, பின் International Telecomunication Union எனும் அமைப்பின் கீழ் ஒன்றிணைக்கப்பட்டன. அவை தங்களுக்குள், பயனுள்ள தகவல்களை, அறிவை, அவசரச் செய்திகளைப் பரிமாறிக் கொண்டன, நடுக்கடலில் ஆபத்தில் தத்தளித்தவர்கள் கூட Ham Radio த் தொடர்புகளால் காப்பாற்றப்பட்ட சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. ஆனால் நவீன விஞ்ஞான சாதனங்கள் பெருகிவிட்ட இன்றைய சூழலில், வானொலி என்பது பெரும்பாலும் ஒரு குடிசைக் கைத்தொழில் போல் மலிந்து விட்டதால் விளையும் பயன்கள் என்ன?. Terrestrial-Satellite-Internet எனப் பலவேறு தளங்களில் பல்லாயிரம் வானொலிகள் வலம் வருகின்றன. தமிழில் எவர் நினைத்தாலும் ஒரு வனொலியை இணையத்தளத்தில் ஆரம்பித்துவிடலாம் என்று எளிதாக நினைப்பதற்கான காரணம் எது? இட்டுநிரப்ப இருக்கவே இருக்கின்றன, தமிழ்த் திரையிசைப் பாடல்கள் என்ற நிலைதான் முக்கிய காரணம். எடுப்பார் கைப்பிள்ளையாக இருக்கும் திரையிசைப் பாடல்களை எடுத்தாள, எந்தவித கட்டுப்பாடும், தற்போது நடைமுறையில் இல்லை.

நான் வனொலியில் பணியாற்றிய

## ஆங்கிலத்தில் உலகத் தமிழ்க் கவிதைகளின் தொகுப்பு கனடாவில் வெளியீடு

**கனடாவில் இயங்கிவரும் 'தமிழ் இலக்கியத் தோட்டம்' என்னும் அமைப்பின் முன்முயற்சியின் பயனாக, தமிழ் ஆங்கிலம் ஆகிய இரு மொழி கொண்டதான உலகத் தமிழ்க் கவிதைகளின் தொகுப்பு அண்மையில் வெளிவந்துள்ளது. தமிழ்நாடு, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், மற்றும் புலம்பெயர் நாடுகள் உள்ளிட்டதான நாடுகளில் வாழும் எழுபத்தெட்டு தமிழ்க் கவிஞர்களின் கவிதைகள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. 'IN OUR TRANSLATED WORLD' தலைப்பிலான இத்தொகுப்பினை தமிழ் இலக்கியத் தோட்டத்திற்காக பேராசிரியர் செல்வா கனகநாயகம் தொகுத்துள்ளார். இந்நூலின் வெளியீடு கடந்த 9ம் நாள் கனடாவில் இடம்பெற்றது.**

**கி.பி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பகாலத்தில் ஒரு பாடலை ஒவ்வொருமுறை ஒலிபரப்பும்போதும் ஒரு குறிப்பிட்ட தொகை படத் தயாரிப்பு நிறுனத்தின் கணக்கில் சேர்க்கப்பட்டு, மாத இறுதியில் தென்னிந்திய திரைப்படச் சம்மேளணத்திற்கு அனுப்பிவைக்கப்படும். ஏன்? இன்றுவரை சர்வதேச மட்டத்திலான மற்ற மொழிப்பாடல்களுக்கு Royalty எனும் கொடுப்பனவு உண்டு. தமிழகத்தில் இப்போது இயங்கும் வானொலிகள் கூட இந்த வரைமுறையைப் பின்பற்றி வருகின்றன. ஆனால் நம்மவர்களோ! கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைப்பதுபோல் ஒரு தொகைப் பாடல்களை இணையத்திலிருந்தே இறக்கித் தம் கணினியில் தேக்கி வைத்து தன்னியக்கமாக தமது வானொலியில் தொடர்ந்து ஒலித்துக் கொண்டிருக்குமாறு செய்து, அதற்கு வானொலி என்ற பெயரையும் சூட்டிவிடுகிறார்கள். திருட்டு DVD போல, அதுவும் ஒருவகையில் திருட்டுப் பாட்டுப் பெட்டி என்றே அவை கணிக்கப்படவேண்டும்.

இத்தகைய வானொலிகளில், விரல் விட்டு எண்ணக்கூடிய மிகச்சிலரே இடையிடையே தகவல்கள், செய்திகள் போன்றவற்றைத் தருகிறார்கள். இவ்வாறு வானொலி என்பது மிக எளிமையான ஒன்றாக மாறிவிட்டதில் நன்மையும் ஏற்படாமல் இல்லை. முன்பு Terrestrial வானொலிகள் மட்டும் இருந்த காலத்தில், சிற்றலை தவிர்த்து மத்தியலை, பண்பலை போன்றவற்றில் இயங்கிய வானொலிகளுக்கு எல்லைகளும், நேயர் வட்டமும் வரையறுக்கப்பட்ட நிலையிலேயே இருந்தது. ஆனால் இன்று செய்மதி, மற்றும் இணையத்தள வானொலிகள் செல்லும் தூரமோ வரையறுக்கமுடியாதது. அவ்வாறெனில் அவற்றின் பொறுப்பும் கூட விசாலமானது என்பதை நாம் உணரந்து செயலாற்ற வேண்டும். வெறும் சினிமாப்பாடல்களை மட்டும் நம்பி, வானொலியை நடத்துவோமெனில், அல்லது பெரும்பாலான வானொலிகளை நடத்துவோர், அன்றாடம் தொலைபேசி உரையாடல்களில் கலந்துகொள்ளும் சுமார் இருபத்தி ஐந்துபேர் (நிச்சயம் அதற்குமேல் இருக்க முடியாது) பேசும் கருத்துக்களை ஓட்டுமொத்த நேயர்களது ரசனையின் வெளிப்பாடு என்று நினைத்து தமது வானொலியையும் ஒரேபோக்கில் நடத்துவார்கள் எனில், அவ்வாறான வனொலி, வெறும் பத்தோடு பதினொன்றாகவே இருக்க முடியும்.

**சக்தி வாய்ந்த இவ்வூடகத்தின் மூலம், மறைந்து மறந்தும்போன நல்ல தமிழ் சொற்களை, நேயர்களுக்கு நினைவுபடுத்தி, மீண்டும் வழக்கில் கொண்டுவர முயலும் அதேவேளை, புதிய கலைச்சொற்களை அறிமுகப்படுத்தவும் முயலவேண்டும்**

உண்மையில், எந்தவொரு நேயரது உள்மனமும், தகவல்களை அறியவும், அறிவைத் தேடவுமே ஆவலுடன் காத்திருக்கும். இதனைப் புரிந்து கொண்டு வானொலிச்சேவையை நடத்துவோர் மட்டுமே வெல்லப்போவது நிச்சயம். அன்றைய சூழலில், வானொலியில் தம் பங்களிப்பினை நல்குவோர், தொலைதூரங்களிலிருந்து வானொலிநிலையம் இருக்குமிடத்துக்கு வந்துபோகவேண்டும். அதற்காக பல சிரமங்களைத் தாங்கித் தம் பொன்னான நேரத்தையும் செலவிடவேண்டும். ஆனால் நவீன விஞ்ஞான வளரச்சியின் பயனாக. வானொலிக்குப் பங்களிப்பினை வழங்குவோர், தேச எல்லைகளைத் தாண்டி வாழ்ந்தாலும், தாம் இருக்கும் இடத்திலிருந்தே தமது பங்களிப்புகளை இணையவழி அனுப்பலாம், பல்தேச மக்களது அபிமானத்தையும் பெறலாம்.

BBCயின் தமிழோசை எனும் வானொலிநிகழ்ச்சி, தேச எல்லைகள் கடந்து ஒரே அலைவரிசையில் தமிழ் உள்ளங்களை இணைக்கும் பணியைப் பல்லாண்டுகளாக ஆற்றிவருவதுபோல், தமிழுணர்வு கொண்ட நல்ல உள்ளங்கள் ஒன்றுபட்டு உழைத்தால், நமக்கென்று ஒரு வானொலி, உலகத்தமிழர்களை ஒரே அலைவரிசையில் இணக்கும் வானொலியாக உருவாகும் காலம் நிஜமாகும். அக்காலம் விரைவில் மலர நம் எல்லோருக்கும் பொதுவான ஏக இறைவனிடம் வேண்டி விடைபெறுகிறேன்.

*[ பிரான்சில் செயல்படுகிற சிலம்பு சங்கம் 2014ஆம் ஜனவரியில் நடாத்திய தமிழர் திருநாளில் நிகழ்வுகள் ஒன்றாக இடம்பெற்ற ஆய்வரங்கில் ஆற்றப்பட்ட உரை]* ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்மார்த்தி | சிறுகதை



# ஆசை

வந்த வேலை சுமூகமாக முடிந்து விட்டது.திலீப் சென்றாயன் மீட்டிங் நடந்த ஹாலில் இருந்து அனைவரிடமும் விடை பெற்றுக்கொண்டான். தன் அறைக்குத் திரும்புவதற்காக லிஃப்டின் வாயிலில் காத்திருந்த போது அவளைப் பார்த்தான்.அணிகலன்களெதும் இல்லை. அவள் அணிந்திருந்தது அந்த ஹோட்டலின் யூனிஃபார்ம் சேலை.ரொம்ப சாதாரணமான தோற்றம் இருந்தாலும் அவளிடம் ஏதோவொன்று வசீகரித்தது.

சென்றாயன் தன் அறைக்குள் நுழைந்தான்.சற்று நேரத்திற்கு முன்பு வரை வெறுப்பின் மொழியில் தொடர்ந்து உரையாடிக் கொண்டிருந்தான்.ஆங்கிலத்தை என்றைக்கும் அவன் விரும்பிக் கதைத்ததில்லை. தமிழ் போல இனிதாவதெங்கேயாவது அகப்பட்டால் தான் உண்டு.திலீப் சென்றாயன் வேலைக்காக ஆங்கிலத்தையும் ஹிந்தியையும் மாறிமாறி உச்சரித்தாலும் அவன் மனசு அதிலிருந்து எப்போதும் விடுபடுவதற்கு ஏங்கும்.ரூமுக்குள் நுழைந்து டையைக் கழற்றி எறிந்தான்.ஷூக்கள் திசைக்கொன்றாய்ப் பறந்தன.சாக்ஸ்கள் செத்துவிழும் சர்ப்பங்களைப் போலக் கட்டிலுக்கடியில் ஒளிந்துகொண்டன. அறையின் ஒரு சுவரில் இருந்த பெரிய கண்ணாடியில் தன்னையே பார்த்துக் கொண்டு நின்றான்.

ரே ஜட்டியும் பனியனுமாகத் தெரிந்த தன்னைப் பார்த்துப் புன்னகைத்தான். திலீப் சென்றாயன்..... முப்பத்தாறு வயது. அவனது பொறுப்பில் நான்கு தென் மாநிலங்களையும் அத்தோடு கோவா மற்றும் பாண்டிச்சேரியையும் ஆளச்சொல்லிக் கொடுத்திருந்தது கம்பெனி. இந்தியாவில் பதினோராவது செல்லுலர் சர்வீஸ் ப்ரொவைடராக நுழைந்திருந்த ஒன்செல் நிறுவனத்தின் குறுநில மன்னன் அவன். பசித்த ராட்சசன்.இதற்கு முன்னால் வேறோர் நிறுவனத்துக்காகத் தமிழ்நாட்டையும் கேரளாவையும் கவனித்து வந்திருந்தான்.அதே தொழில் வேறு நிறுவனம் மற்றும் ஒரு உயர்வு என கடந்த ஒன்றரை வருடங்களாக தேச வரைபடத்தின் குறுக்கு நெடுக்காக விமானத்திலும் உயர்தரக் காரிலும் அலைந்துகொண்டே இருக்கிற அதே திலீப் சென்றாயன் தான் தற்போது ஜட்டியோடு நின்றுகொண்டிருக்கிறான்.

தொலைபேசியை எடுத்து ரிஸப்ஷனை அழைத்தான்.

"இன்றைக்கு மழை வர வாய்ப்பிருக்கிறதா..?"என்றான்.

எதிர்முனையாள் "பார்டன்"என்றாள்.

இவனுக்கு அடுத்த கேள்வியாக .. ..... எனக் கேட்கும் ஆசை எழுந்தது.கேட்கவில்லை. அதற்கும் பார்டன் தான்.அடிமைகளின் மொத்த மொழியுமே ஆங்கிலத்தின் பத்து வார்த்தைகளுக்குள் அடங்கிப் போகிறது.. சென்றாயனுக்கு அடுத்த கணமே அந்த ரிஸப்ஷனிஸ்ட் மீது பச்சாதாபம் எழுந்தது.

எனக்கொரு டீச்சர்ஸ் ஃபுல் வேண்டும்"என்றான். அவள் "வித் ப்ளெஷர்" என்று முடிப்பதற்குள் தொலைபேசியை அறைந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு ஸ்யூட் ரூம்.அவனது நிறுவனம் அவனுக்கு ஆக்ச்சுவல்ஸ் வழங்குகிறது. அவன் வேலை நேரத்தில் மலம் கழித்தால் கூடக் கம்பெனி அதற்கான செலவை ஏற்கும். அவன் குடித்தாலும் சரி. கூடினாலும் சரி.எதுவும் செய்துகொள்.எனக்குத் தேவை வியாபாரம்.என் அலுவலன் நீ.என் முதலடிமை. உனக்குப் பிறர் அடிமை என்று வாரி வழங்கியது.இந்த நிறுவனத்திற்கு இரண்டு முகமும் இரண்டு குரலும் உண்டு.தேனாய் நக்கும் குரல் திடீரென்று விஷம் கக்கும்... "ஒய் டோண்ட் யூ கமிட் ஸ்யூசைட் ஜெண்டில் மேன்...?" இந்தக் கேள்வியை அவன் ஒருமுறை சந்தித்திருக்கிறான்.

சென்றாயனுக்குத் தலை வலித்தது.தன் வாழ்க்கையைத் தனக்கு எதிர்ப்புறக் கண்ணாடியில் தான் போலவே நிர்வாணமாக நின்றுகொண்டிருக்கிற இன்னொருவன் எள்ளி நகையாடுகிறானோ என்று ஐயம் வந்தது. அவன் தானில்லை என்று நம்ப விரும்பினான். அவனை விடத் தான் சிறப்பானவன் என்று நிறுவ ஏங்கினான்.என்ன செய்வதென்று தெரியவில்லை.ரூம் சர்வீஸ் காலிங் பெல்லை அடித்த சப்தம் வந்ததும் டக்கென்று ஒரு துருக்கியத் துண்டை எடுத்துத் தன் முந்தைய நிர்வாணத்தின் மீது அணிந்துகொண்டான்.

"யெஸ்...கமின்..."

அவனது குரலுக்காகக் காத்திருந்த வெள்ளுடை சேவகன் ஒரு வண்டியைத் தள்ளியபடியே நுழைந்தான்.சின்ன ஐஸ்பாக்ஸ் ஒன்று. இரண்டு கண்ணாடிக் குவளைகள்.ஒரு பாக்கெட் இண்டியா கிங்க்ஸ் சிகரட் அது திறந்து அதன் முதலாவது சிகரட் வானை நோக்கி நீண்டிருந்தது. இவற்றுக்கெல்லாம் 'தான் தான் ராஜாவாக்கும்' என்ற தோரணையில் அப்போது தான் குளித்து வந்த சீமாட்டி போல 'டீச்சர்ஸ்' ஃபுல் பாட்டில் ஒன்று.தான் கொணர்ந்ததை டீப்பாய் மேல் பரப்பினான்.காத்திருந்தான்.

"எனிதிங் எல்ஸ் சார்..?என்றான்,. அவன் உச்சரிப்பில் பிரிட்டனின் ஸ்பரிசம் தொனித்தது.

'நத்திங்'என்றவன்'உன் பேர்..?"என்றான்.

அதை எதிர்பார்க்காத அந்த வெயிட்டர் "வினோத் சார்..."என்றான்.

சென்றாயனுக்கு ஏமாற்றமாக இருந்தது. அவன் பேரை வெள்ளைச்சாமி என்று சொல்லியிருந்தால் தான் மகிழ்ந்திருப்போம் எனத் தோன்றியது.அவன் சென்றதும் சிகரட்டைப் பற்ற வைத்தான்.அன்றைய தன் முதலாவது டிரிங்க்கைத் தயாரித்து எடுத்துக்கொண்டு சன்னலோரம் வந்து நின்றான்.சாலையில் செல்கிற வாகனங்களைப் பார்த்தபடியே சிப் சிப்பாக அந்த திரவத்தின் சத்தியத்தை உள்வாங்கினான். அத்தனை போதை அத்தனை தேவையாக இருந்தது. இதே திரவத்துக்காகத் தான் அலைந்த அலைச்சல்கள் எல்லாமும் ஒரு மைக்ரோ வினாடியில் அவனுக்குள் மின்னி மறைந்தது.

தன் செல்லை எடுத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஃபோன்புக்கில் இருந்த ஒரு எண்ணைச் சுழற்றினான்.

"செல்லா....எங்கே இருக்கே..?"என்றான்.

மறுமுனையில் இருந்தவன் சொன்னதைக் கேட்டவாறே மீண்டும் தன் கோப்பையை உறிஞ்சி விட்டு

"செல்லா...நான் மதுரைல ஹோட்டல் டான்ல இருக்கேன்.உடனே எனக்கு இங்கே ஒருத்தி வேணும்...நம்பர் குடு..."என்றான்.

அவன் சொல்லச்சொல்ல தன் உள்ளங்கையில் நம்பரைக் குறித்துக் கொண்டு செல்லைத் துண்டித்து மெத்தை மீது எறிந்தான்.மீண்டும் ஃபோனை எடுத்தவன் சொல்லப்பட்ட எண்ணை ஒற்றினான். எதிர்முனையில் ரிங் போனது.எடுத்ததும் ஹல்லோ என்றான். அடுத்த கணம் "செல்லாவோட ஃப்ரெண்டு"என்றான்.

எதிர்முனை சற்று மௌனித்தது.தயங்கிய குரலில் "சொல்லுங்க"என்றது.சென்றாயன் எதிர் முனையில் அவ்வளவு பெண்மையாய் ஒரு குரலை எதிர்பார்த்திருக்கவில்லை. சற்றுத் தடுமாறியவன் உடனே சுதாரித்துக் கொண்டு "எக்ஸ்க்யூஸ் மீ...நான் ஹோட்டல் டான்ல ரூம் நம்பர் ட்ரிப்பிள் நைன்ல இருக்கேன்"என்றான்.

"அங்கே அனுப்பணுமா... இல்லை அட்ரஸ் சொன்னா நீங்க போறீங்களா..?"என்றாள் எதிர்முனையாள்.

சென்றாயன் சற்றே யோசித்தவன் "நானே போறேன்.. அட்ரஸ்..?என்றான்.

"எஸ்.எம்.எஸ். வரும்"என்றவளிடம்

"ஹெல்லோ...கேன் ஐ ஹேவ் எ கேரளா ......... ? என்றான்.அவள் ஒரு நிமிடம் நிதானித்தாள்.இதற்கான பதிலை தன் செல்லின் பேச்சுமுனையை ம்யூட் செய்துவிட்டு யாரிடமோ ஒரு நிமிடம் பேசிவிட்டு வந்தாள்.

"அட்ரஸ் எஸ்.எம்.எஸ் வரும்."

அவ்வளவு தான் .துண்டித்தாள்.

சென்றாயன் மீண்டும் ஒரு ரவுண்ட் மதுவை தனக்குள் அனுப்பினான். மெல்ல பாத்டப்பில் இறங்கி வெகுநேரம் குளித்தான். எழுந்து வந்து உடலை நன்றாகத் துடைத்துக் கொண்டான். வாசனைபொங்கும் செண்ட்டை அணிந்து கொண்டபிறகே ஆடைகளுக்குள் புகுந்தான். அதிகாரத்தின் கேளிக்கை நேர உடைகள் கூட செல்வந்தம் வழியும் வண்ணமே தயாரிக்கப் படுகின்றன.ஷூக்களைத் தவிர்த்து செப்பல்களை அணிந்தான்.,வாயில் தொங்கும் சிகரட்டுக்குத் தீத்தொப்பி ஒன்றை அணிவித்தவாறே கீழிறங்கினான் .பாதிக்கும் மேலே இருக்கையிலேயே அந்த சிகரட்டை எறிந்தவனைத் தூரத்தே பார்த்த ட்ரைவர் எழுந்து ஓடிச்சென்று காரை எடுத்துவந்து முன்வாசலில் நிறுத்தினான். சென்றாயன் ஏறிக்கொண்டான்.தனக்கு வந்திருந்த குறுஞ் செய்தியைப் பார்த்தவாறே

"கண்ணன் நகருக்குப் போ" என்றவன் முழு முகவரியையும் சொன்னான்.

கண்களை மூடிக் கொண்டான்.டேப்பில் மெல்லிய இசை அவனைத் தாலாட்டியது.,பத்து நிமிடத்தில் அவன் சொன்ன அட்ரஸ் வாசலில் நின்றது வாகனம்.இறங்கிக்கொண்டவன் "காரை ஒரு தெரு தள்ளி நிறுத்திக்கோ... ஒன் அவர்ல வர்றேன்.நானே வந்துருவேன்.நீ அங்கேயே இரு..."என்றவாறே அந்த அபார்ட்மெண்டில் நுழைந்தான்.குறிப்பிட்ட வீட்டு வாசலில் ஒரு பனையோலைத் தட்டி சார்த்தி இருந்தது.கூரை வேய்வதற்குப் பயன்படும் தட்டி ஒன்றே ஒன்று அங்கே இருந்தது அபார்ட்மெண்ட்டுக்குச் சம்மந்தமில்லாத தட்டி.சென்றாயன் காலிங் பெல்லை அழுத்தினான்.

கதவைத் திறந்தவள் இளமையாக இருந்தாள்.ஒரு கைத்தறிச் சேலையில் பார்ப்பதற்கு சென்றாயனுடன் லிஃப்டில் வந்த ஹோட்டல் பணிப் பெண்ணின் வேறோர் வெர்ஷன் போலத் தெரிந்தாள். அவன் நுழைந்ததும் கதவைத் தாழிட்டாள். மெல்லத் தன் பார்வையால் அந்த வீட்டின் காட்சிக்குக் கிடைத்த திசைகளையெல்லாம் பருகத் தொடங்கினான்.அவள் உள்ளே இடதும் வலதுமாயிருந்த இரண்டு அறைகளில் வலதுபுறக் கதவைத் திறந்தாள்.சில்லிடும் ஏஸி குளிரோடுஅவனை வரவேற்றது.அவன் மெல்ல அவளைத் தொடர்ந்தான்.ஒரு நிமிடம் அவள் விளக்கை அணைத்தாள். அறையெங்கும் இருள் ததும்பியது.மெலிதான ஏசியின் விர் மட்டும் கேட்டது.சுற்றிலும் பார்த்தவனுக்கு ஏஸியின் மேனியோரம் இருந்த சின்னஞ்சிறு சிகப்பு ஒளி மட்டும் ஒரு புள்ளியெனத் தெரிந்தது.சென்றாயனுக்கு மூச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> சென்றாயன் மீண்டும் ஒரு ரவுண்ட் மதுவை தனக்குள் அனுப்பினான். மெல்ல பாத்டப்பில் இறங்கி வெகுநேரம் குளித்தான். எழுந்து வந்து உடலை நன்றாகத் துடைத்துக் கொண்டான். வாசனைபொங்கும் செண்ட்டை அணிந்து கொண்டபிறகே ஆடைகளுக்குள் புகுந்தான்.

முட்டும் போலிருந்தது.ரூம் ஃப்ரெஷ்னரின் தேர்வு அவளொரு வாசனை உபாசகியாய் இருப்பாள் எனத் தெரிவித்தது.சட்டென்று விளக்கு உயிர்பெற்றது.

இப்போது அவள் மௌனத்தையும் புன்னகையையும் மட்டும் அணிந்து கொண்டிருந்தாள்.சென்றாயன் அவளிடம் பேசுவதற்காக வரவில்லை .அவளை முழுவதுமாக எடுத்துக்கொண்டு தன்னைக் கொடுத்துவிட முனைந்தான்..அவள் சென்றாயனுக்குத் தேவைப்படும் விதிதங்களைக் கண்டறிந்தவாறே உடன்பட்டாள்.அவனும் அவளும் அதற்கு முன்பு எப்போதுமே அனுபவித்திராத புதுச்செயலொன்றைச் செய்கிற இரண்டு நடிகர்களைப் போல நடித்துக்கொண்டிருந்தனர்.அவர்களின் நடிப்பு அத்தனை அசலாக இருந்தது.அவள் சென்றாயனின் அனுபவங்களையெல்லாமும் தன் உடல்கொண்டு அழித்தாள்.தன்னுடனான அனுபவத்தை மட்டும் கல்லில் உளிகொண்டு எழுதவிழைந்தாள்.சென்றாயனுக்கு மூச்சு நிசமாகவே முட்டியது.இதுவரை அவன் பல நதிகளில் குளித்திருக்கிறான். இவள் வேறொரு கடல் என்று தன்னை அறிவித்துக்கொண்டிருந்தாள். சென்றாயனுக்கு அவளோடு இருக்கையிலயே இறந்து போகவேண்டும் என்று ஆசை வந்தது.இதற்கு முன்பு எப்போதோ ஒருதரம் அவன் பீத்தோவனின் மூன்லைட் சொனாட்டாவைக் கேட்டுக்கொண்டிருந்த ஒரு கண்ணீர்த்தருணத்தில் மரணத்தை விரும்பியிருந்தான்.ஒரு பெண் தன் உடலில் சிம்பனி வாசிப்பதை அவன் ரசித்தான். அவள் அவனுடலை இடம்பொருள் ஏவலறிந்து வாசித்து முடித்தாள். சென்றாயன் எழுந்து பாத்ரூமுக்குள் சென்று சிகரட்டைப் பற்றவைத்துக் கொண்டான்.முழு சிகரட்டையும் முடித்து விட்டு வெளியே வந்தான்.

அவள் கறுப்பு நிற சூடிதாரை அணிந்திருந்தாள்.இப்போது வேறு மாதிரி அழகாயிருந்தாள்.

"வெளியே கிளம்புறீங்களா..?என்றான் சென்றாயன்.

அவள் மெல்லிய குரலில் ஆமாம்..என்று தலையசைத்தாள்.

சென்றாயன் தன் பர்சை எடுத்து அவளிடம் கொடுத்தான்.அவள் தனக்கான பணத்தாட்களை எண்ணி எடுத்துக்கொண்டு மீண்டும் அவனிடம் கொடுத்தாள். அவன் பர்ஸைத் திறந்து இன்னும் கொஞ்சம் தாட்களை எடுக்க முயன்றவன் இருந்த மொத்தத்தையும் எடுத்து அவள் தலைமீது கொட்டினான். ஆனால் அவள் எந்தச்சலனமும் இல்லாமல் அங்கிருந்து நகர்ந்து கொண்டாள்." இது என் அறை. இங்கே கிடக்கட்டும்" என்று விடுகிறாளா..? சென்றாயன் எழுந்து வாசலுக்கு வந்தான். இப்போது அவள் கீழே கிடந்த கரன்ஸி தாட்களை எல்லாம் எடுத்து பத்திரம் செய்து விட்டு வந்தாள்.

சென்றாயன் தன் செருப்பை அணிந்தவன் அவளும் தன் காலணிகளை அணிந்துகொண்டு வீட்டை வெளியே பூட்டுவதைப் பார்த்தவாறே கேட்டான்.

"இதென்னங்க தட்டி...? வித்யாசமா.?" என்றான்.

அவள் புன்னகையைக் குறுக்கிக் கொண்டு "எண்ட அச்சன் மரிச்சுப்போயி. இன்னும் முழுசா ஒரு மாசம் கழிஞ் சில்லா... நாட்டுப்புறத்தே பெரிய பந்தல் எல்லாம் சாத்யம். அப்புறம் இது சிட்டி. அபார்ட்மெண்ட் அல்லே..?அது தன்னே செறியதாய் ஒரு தட்டி.துக்கம் கேட்க வர்றவங்க எந்த வீடுன்னு முழிக்கக் கூடாதில்லை.?"மெல்லிய சிரிப்போடு நடக்க ஆரம்பித்தாள்.

சென்றாயன் அந்தத் தட்டியையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனிமலர் வைத்தி கவிதைகள்



- புறாவிற்கு
வைத்த
தண்ணீர் தட்டில்
நிலா விழுந்து
கிடக்கிறது!!!!

- இரு கைகளை மூடி
குழந்தையிடம்
விளையாட்டு காட்டும் போது
மூடிய கைகளினுள்
ஏதேனும் இருக்கக் கூடும்
என்ற குழந்தையின்
நம்பிக்கையைத் தவிர
என் கைகளில் ஏதும் இல்லை.......

- என்னைக் கண்டுபிடியென
நாற்காலி பின்னே
ஒளிந்துக் கொள்ளும்
குழந்தையை
இன்னும் சிறிது நேரம்
தேடத் தோனுகிறது
மனசுக்கு

- ஒதுக்கி வைக்கப் பட்டது
சேரிக்கு வெளியே
நகரம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலுவை சுமந்தவர்கள்

பேருந்தில் ஏறும்போது தெப்பக்குளத்தில் இறங்கிக் கல்லூரிக்குச் செல்ல வேண்டும் என்றுதான் நினைத்தேன். ஆகஸ்டு 15 விடுமுறை நாள், ஒருவேளை நண்பர்கள் விடுதியில் இல்லாவிட்டால்? விடுதி மாணவனாயும் நான் இல்லை. பிறகு எங்குப்போய்த் தங்குவது? விளக்குத்தூண் நிறுத்தத்திலேயே இறங்கிவிட்டேன். ஒரு லாட்ஜில் இரண்டு நண்பர்களுடன் அறை எடுத்துத் தங்கி இருந்தேன்; ஒருவர் ஆங்கில இலக்கியம் பயின்றுகொண்டிருந்த லோகநாதன். மற்றொருவர் மலையாள இளைஞர். எங்கோ ஒரிடத்தில் வேலைப் பார்த்துக்கொண்டிருந்தார். தமிழ் தெரியாது. நாங்கள் பெரும்பாலும் சைகை மொழியில்தான் பேசுவோம். கொஞ்சம் கொஞ்சம் ஆங்கிலமும் உதவும். நான் போனபோது அந்த இளைஞர்தான் இருந்தார். அவருக்குக் காவல்துறை என்னை இழுத்துக் கொண்டு போனது தெரியும். அந்த அறையில் சோதனை போட்டுத்தான் நாட்குறிப்பேட்டையும், செயராமன் விட்டுச்சென்ற குறிப்பையும் எடுத்துச் சென்றார்கள். அப்போது அங்கிருந்த லோகநாதனையும், அந்த மலையாள இளைஞரையும் அந்த அதிகாரி பார்வையாலேயே சுட்டெரித்தார்.

அந்த இளைஞர் வாஞ்சையுடன் கைகளைப் பற்றிக்கொண்டார். என்ன நடந்தது என்றெல்லாம் மலையாளத்தில் கேட்டார். மறுநாள் ஊர் போக வேண்டும் என்று சொல்லிவிட்டு எனது பாயை விரித்துப் படுத்துக் கொண்டேன். காலைச் சிற்றுண்டியை முடித்துக்கொண்டு கீழக்கரைக்குப் புறப்பட்டுவிட்டேன். அந்த மலையாள இளைஞரின் பெயர் ஜோசபோ, ஆண்டனியோ...? நினைவில் இல்லை. முகமும் அவருடைய மழலைத் தமிழும் மறதியில் இல்லை.

அக்காள் இறந்த துயரம் வீடு முழுதும்



“துரத்தி வந்த காவலர்களைப் பேராசிரியர் மிகத் துணிச்சலாக எதிர்கொண்டிருக்கிறார். இடத்திற்கேற்பப் பேசி அவர்களைப் பின்வாங்க வைத்திருக்கிறார். காவல் துறையினரின் ‘வீர’த்தையும் சரியாகவே மதிப்பிட்டிருக்கிறார். என்னை எப்பொழுதும் ‘சாயிபு’ என்றுதான் சொல்வார். இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு என்னை ‘முரட்டு சாயிபு’ என்று சொல்லத் தொடங்கினார்.”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. எல்லா முகமும் சோம்பி இருந்தது. அம்மா, 'வந்திட்டியா?' என்று கேட்டார். 'லீவு... வந்துட்டேன்' என்றேன். 'என்ன விடுமுறை' என்று யாரும் கேட்கவில்லை. நான் வந்தது அவர்களுக்கு ஆறுதலாக இருந்திருக்கவேண்டும். காவலர்களின் தாக்குதலால் எனக்கு இரத்தக் காயமில்லை; எல்லாம் உள்காயந்தான். ஆனால் மிகுந்த சேர்வுடன் இருந்தேன். எனக்கு நடந்தது எதையும் சொல்லவில்லை; பெரிய மச்சான், சின்ன மச்சான், சின்ன அக்காள், தங்கைகள், அம்மா எல்லோருமே அந்த இறப்பால் காயப்பட்டிருந்தவர்கள்தாம். எனது சோர்வு, வீட்டில் யாருடைய துயரத்திலிருந்தும் வேறுபடுத்திப்பார்க்கத்தக்கதாய்இல்லை.மரணம், நலன் விசாரிப்புகளை ஒத்தி வைத்துவிடுகிறது. பிற துன்பங்கள் பேசப்படுவதற்கான வாய்ப்புக்கு இடந்தருவதில்லை. நடந்ததைச் சொல்லி இருந்தால் வீட்டை அமுத்திக் கொண்டிருக்கும் துயரம் இன்னும் சுமை கொண்டிருக்கும்.

இரண்டு நாளோ மூன்று நாளோ ஒய்வு கொண்டேன். வந்த திங்கட்கிழமை அதிக-ாலை மதுரை செல்லும் பேருந்தில் ஏறினேன். தெப்பக்குளத்தில் இறங்கிக் கல்லூரிக்குச் சென்றேன். கல்லூரிச் சிற்றுண்டி நிலையத்தில் காலை உணவை முடித்துக் கொண்டேன். கன்னியப்பன், நூர்முகமது, ஜெயகர், நல்லசிவம் என்று நண்பர்கள் வந்து சூழ்ந்து கொண்டார்கள். எனக்கு நடந்ததைக் கேட்டார்கள். சொன்னேன். அந்த இரவு ஓடிய மாணவர்களுக்கு என்ன நடந்தது என்று கேட்டேன்.

"பசங்கஓடுனாங்க.நீர்தான்தேவையில்லாமல் போய் மாட்டிக்கிட்டீர். எங்களோட ஓடி வந்திருக்கலாம். போலீசு துரத்திச்சா. நாங்க வே-கமா ஓடி மாடிப்படிலே தபதபதன்னு ஏறினோம். அப்போ அகிப அறையிலே இருந்தார். நான் அவர்ட்டே போயி நடந்ததைச் சொன்னேன். அவர் வெளியே வந்துட்டார்...போலீசுக்காரங்க முன்னாலே கையை விரிச்சிக்கிட்டுத் தடுக்குறது மாதிரி நின்னாரு.. 'நான்தான் வார்டன்'னு சத்தம் போட்டுச் சொன்னாரு. போலீசுகாரங்க "ஸ்டூடன்ஸ் கறுப்புக்கொடி காட்டினாங்க... புடிக்கப் போறோம்"னாங்க.

அப்போ ஐயா சொன்னாரு, "உள்ளே நிறையப் பசங்க இருக்காங்க. போனீங்கன்னா என்ன செய்வாங்கன்னு தெரியாது..."

போலீஸ் வந்தவங்க அஞ்சாறுபேர்தான் இருப்பாங்க. அதிலே ஒருத்தன் 'இப்படில்லாம் நடந்திக்கிறதைத் தடுங்க... இல்லே நிலமை மோசமாயிடும்...' என்றான்.

போலீஸ்காரங்க திரும்பிப் போயிட்டாங்க"

அகிப என்று சொன்னது பேராசிரியர் அ.கி.பரந்தாமனாரைத்தான். 'நல்லத்தமிழ் எழுத வேண்டுமா?' 'நாயக்கர் வரலாறு' போன்ற பல நூல்களை எழுதியவர். அவர் எழுதிய சிறுவர்களுக்கான பாடல் தொகுப்பொன்று தமிழக அரசின் பரிசினைப் பெற்றது. அதற்கு விழாவெடுத்துக் கொண்டாடினோம். விடுதியில் சேர்வதற்கு அவர்தான் உதவினார். என்பதை முன்னரே எழுதி இருக்கிறேன்.

துரத்தி வந்த காவலர்களைப் பேராசிரியர் மிகத் துணிச்சலாக எதிர்கொண்டிருக்கிறார். இடத்திற்கேற்பப் பேசி அவர்களைப் பின்வாங்க வைத்திருக்கிறார். காவல் துறையினரின் 'வீர'த்தையும் சாரியாகவே மதிப்பிட்டிருக்கிறார். என்னை எப்பொழுதும் 'சாயிபு' என்றுதான் சொல்வார். இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு என்னை 'முரட்டு சாயிபு' என்று சொல்லத் தொடங்கினார்.

அகிப எப்பொழுதும் பேச்சுத் தமிழில்தான் பேசுவார். எழுதுவார். ஆனால் தனித்தமிழ் ஆர்வலர். அன்று துரத்தி வந்த காவலர்களிடம் அவர் தனித்தமிழில் பேசியதாகத் தெரியவில்லை. 'நான்தான் விடுதிக் காப்பாளர்' என்று தனித்தமிழில்இயம்பிஇருந்தால்காவலர்களுக்குப் புரியாமலே போயிருக்கும். அதைக் கற்பனை செய்து இப்பொழுதும் சிரித்துக் கொள்வேன்.

நண்பர்கள் நடந்ததைச் சொன்னபோது என் மனசில் பல கேள்விகள் விரிந்தன. அகிப சொன்னதுபோல் உண்மையிலேயே மாணவர்கள் திரும்பித்தாக்கத் தயாராக இருந்தார்களா? என்றால் ஓடியவர்கள், மாணவர்களைத் திரட்டிக்கொண்டு ஏன் திரும்பி வரவில்லை? தனி ஒருவனாக நின்ற என்னை அடித்துத் துவைத்த வீரர்கள் விடுதிக்குள் நுழையாமல் பின்வாங்கிச் சென்றதேன்? எந்த அச்சம் ஓடச் செய்தது? எந்தப் பயம் பின்வாங்க வைத்தது?

"ஆகஸ்டு பதினைந்து கொடியேற்ற நிகழ்ச்சி எப்படி நடந்தது?" - நான் கேட்டேன்.

"ஒருவரும் கலந்துக்கிறலை. போலீஸ், பிரின்சி, சில புரபசர்ஸ் கலந்து கொண்டாங்க. ஸ்டூடன்ஸ் யாரும் கலந்துக்கிறலை..."

என்னைக் காவல் நிலையத்தில் பிடித்து வைத்திருந்த அதிகாரி வழக்காமான 'போலீஸ்' பொய்யைச்சொல்லி இருக்கிறான்.எனக்குத்தான் அந்தப் பொய்யை விளங்கிக் கொள்ளும் அனுபவ அறிவு இல்லாமற் போய்விட்டது. என்றாலும் எனக்கு ஆறுதல்தான். மாணவர்கள் முழுமை-யாக அச்சத்தின் பிடியில் இல்லை. விடுதலைக் கொண்டாட்டத்தைப்புறக்கணித்துவிட்டார்கள்.

இதைஎழுதும்இன்றுஏராளமானகேள்விகள் என்னை மொய்க்கின்றன. நான் பிடிபட்டபோது எங்கிருக்கிறேன்? உயிருடன் இருக்கிறேனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> “தமிழகத்தில் மாணவர்கள் ஒன்றுதிரண்டு போராடிய வரலாற்றை இந்தி எதிர்ப்புப் போராட்டந்தான் உருவாக்கியது. இப்போராட்டத்தில் விரல்விட்டு எண்ணத் தகுந்த ஆசிரியர்களைத் தவிர, ஆசிரியர்களின் பங்களிப்பு குறைவுதான்.”

என்று பார்ப்பதற்குக்கூட ஒரு மாணவரும் ஏன் முனையவில்லை? நான் அடிபட்டுப் பிடிபட்ட செய்தி பேராசிரியர்களுக்குத் தெரியும். என்னை எங்குவைத்திருக்கிறார்கள் என்று ஒருபேராசிரியர் கூட ஏன் அறிய முற்படவில்லை”.

அந்தக்காலச் சூழல்கள்தாம் இதற்குக் காரணம் என்று மனஅமைதி கொள்கிறேன். என் ஆசிரிய நாட்களில் மாணவர்களின் போராட்டங்களின்போது, மாணவர்களைத் தாக்கக் கல்லூரிக்குள் காவல்துறையினர் நுழைந்திருக்கிறார்கள். ஆசிரியர்கள் ஒன்றுகூடிக் காவல் துறையினரைத் தடுத்திருக்கிறோம். மாணவர்கள் தாக்கப்பட்டதைக் கண்டித்து மாணவர்களோடு சேர்ந்து நாங்களும் ஊர்வலம் போயிருக்கிறோம். காவல்துறை அதிகாரிகளோடு கடுமையான வாக்குவாதத்தில் ஈடுபட்டிருக்கிறோம். நாங்கள் ஒதுங்கி இருந்ததில்லை. எங்களுடைய துணிச்சலுக்கும் உறுதிப்பாட்டுக்கும் என்ன பின்னணி?

விடுதலைப் போராட்டக் காலக்கட்டத்தில் மாணவர்களும் ஆசிரியர்களும் போராடி இருக்கிறார்கள். ஒத்துழையாமை இயக்கத்தில் கல்வியையும் பதவிகளையும் துறந்திருக்கிறார்கள். ஆனால் விடுதலையை அடுத்து நின்ற இந்தியாவில் மாணவர்களின் எழுச்சி இல்லாமற் போய்விட்டது. ஆசிரியர்கள் போராட்டங்களைவிட்டு ஒதுங்கியே நின்றார்கள். நான் பணியாற்றிய புதுக்கல்லூரியின் தாளாளர் ஒருவர், தொழிலாளர்கள் போராட்டம் பற்றிக் குறிப்பிடும்போது விடுதலை பெற்ற இந்தியாவில் எந்த ஒரு போராட்டமும் தேவையற்றது என்றார். ஆசிரியர்களும் இநத் மனநிலையில்தான் இருநதனர். இப்படிப் பேசிய கல்லூரித் தாளார் கல்லூரியில் பல்வேறு மோசடிகளில் ஈடுபட்டார். அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தினார். ஆசிரியர்கள் அவர் பெயரை உச்சரிக்கவும் அஞ்சி இருந்த ஓர் அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டிருந்தார். ஆனால் அவரை எதிர்த்தே மாணவர்களும், ஆசிரியர்களும் ஆசிரியரல்லாத ஊழியர்களும் ஒன்றுபட்டுப் போராட வேண்டிய கட்டாயத்தைக் காலம் உருவாக்கியது.


தமிழகத்தில் மாணவர்கள் ஒன்றுதிரண்டு போராடிய வரலாற்றை இந்தி எதிர்ப்புப் போராட்டந்தான் உருவாக்கியது. இப்போராட்டத்தில் விரல்விட்டு எண்ணத்தகுந்த ஆசிரியர்களைத்தவிர, ஆசிரியர்களின் பங்களிப்பு குறைவுதான்.

ஆனால் வாழ்க்கைத் தேவைகள், மோசமான பணிநிலைகள், கல்வித்துறையில் நிகழ்ந்த ஊழல்கள், ஆசிரியர்களைப் போராட்டத்தின்பால்பிடிரியைப்பிடித்துஉந்தின. ஆசிரியர்கள் சங்கங்களாய் அணிதிரண்டார்கள்; ஊர்வலம் போனார்கள்; போராடினார்கள். கல்லூரி ஆசிரியர்கள் போராட்டங்களில் இறங்கியது மிகவும் பின்னால்தான். முறையீடு செய்வது, என்பதற்கு அப்பால் எந்த ஓர் இயக்கச் செயல்பாடும் ஆசிரியர்களிடம் இல்லை. நான் பணியாற்றிய கல்லூரியில் இருந்த ஆசிரியர் அமைப்புக்குப் பெயர் ‘டீச்சர்ஸ் கிளப்’ தான். அது ஒரு பொழுது போக்கிடம். பேராசிரியர்கள் நவநாகரிகமாகச் சொற்பொழிவாற்றுவார்கள். உயர்ந்த தரத்திலான நகைச்சுவைத் துணுக்குகளை உதிர்ப்பார்கள். ஆசிரியர் கூட்டம் கைத்தட்டி ரசிப்பார்கள். விருந்து சாப்பிடுவார்கள். கலைந்து விடுவார்கள். இந்த நிலைமையைத் தேவைகள்தாம் மாற்றியமைத்தன. ஆசிரியர்கள் போராட்டக் களத்தில் இறங்கினார்கள்.

ஆனால் 1965 - ஆசிரியர்கள் அணிதிரளாத காலம். நான்பயின்றதியாகராசர்கல்லூரிவலுவான நிர்வாகத்தைக் கொண்டிருந்தது. நிர்வாகத்தினர் கலைத்தந்தை என்றும் கலையன்னை என்றும் கொண்டாடப்பட்டார்கள். பெரும்பாலும்தமிழ்ப் பேராசிரியர்கள்தான் கொண்டாடினார்கள். இந்நிருவாகங்களின் தமிழ்ப்பற்று இந்தி எதிர்ப்புப் போராட்டக் காலத்தில் சோதனைக்குள்ளானது. பேராசிரியர் இலக்குவனார் இக்கால கட்டத்தில் பணிநீக்கம் செய்யப்பட்டார். போராட்டங்களின் நியாயங்களைப் பேராசிரியர்கள் உணர்ந்திருந்த போதும், தங்களை வெளிப்படுத்திக் கொள்ள அஞ்சினார்கள்; இந்தி எதிர்ப்பின் சிலுவையை மாணவர்களும் மக்களுந்தான் சுமந்து தீர்த்தார்கள். ■



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பாளையங்கோட்டை சவேரியார் பள்ளி

தூத்துக்குடி குருமடத்தில் இடமில்லை என்று ஆனவுடன் வாழ்க்கை ஒன்றும் அப்படியே இருண்டு விடவில்லை. தைரியம் சொன்னாள் பாட்டி.

"எல அய்யா பாளையங்கோட்ட சேவியர் பள்ளிகுடத்துல போயி படிக்கலாம்."

"யாருபாட்டி நமக்கு அங்கன எடம்தருவா..."

"தல்மேதா தாத்தா எதுக்கு இருக்காரு!"

கோடை விடுமுறை கழியுமுன்னே இருவரும் கணபதிபஸ்பிடித்துதிருநெல்வேலிவந்திருந்தோம். ஏற்கனவே வந்துபோய் பழக்கம் இருந்ததால் பேருந்து நிலையத்தில் இறங்கியதும் என் கையைப் பிடித்தபடி ஏதோ ஆமந்துறை நடுத்தெருவில் நடப்பதுபோல் வரிசையாய் நின்றிருந்த பேருந்துகளை கடந்து வந்தாள் பாட்டி. எங்கு பார்த்தாலும் விதவிதமான கடைகள் அவற்றில் ஈக்கள் மொய்க்கும் பண்டங்கள். எங்களைப் போலவே பக்கத்து ஊர்களிலுமிருந்தும் பல்வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலை விசயமாக வந்தவர்கள் அங்குமிங்கும் ஓடியாடியபடி இருந்தார்கள். துர்நாற்றம் வீசும் கழிப்பறை அருகே அரை வட்டமாய் ஒரு கூட்டம் நின்றிருந்தது. பாட்டியின் கையைப் பிடித்தவாறே நோட்டம் விட்டால் ஆண்மைச் சக்தியைப் பெருக்கும் 'கருங்குரங்கு லேகியம்' என்று போர்டு மாட்டியிருந்தது. பக்கத்திலேயே சங்கிலியில்கட்டப்பட்டிருந்தகருங்குரங்கொன்று துள்ளியபடியிருந்தது. கண்ணாடிக் குடுவைகளில் விதவிதமாய் மருந்து வகைகள்.

"அந்த கொரங்குகிட்ட குத்தவச்சியிருக்கான அவம் சூடு போட்டாள்தான..." கேட்டாள் பாட்டி.

"தெரியிலிய பாட்டி."

"ஊட்டுல பொண்டாட்டிய வச்சி குடும்பம் நடத்த வக்கில்ல. தெருவென்ன தெருவெல்லாம் மருந்து மாயமின்னுகிட்டு அலையிறாம்."

முனகியபடியே வந்த பாட்டி 'செல்வன் ஒலி ஒளி அமைப்பாளர்கள்' என்று போட்டிருந்த ஒரு அலுவலகத்தின் முன்னால் நின்று மூச்சு வாங்கினாள். அலுவலகத்தினுள் இருந்து ஒரு குரல் கேட்டது.

"வாருங்க பிரகாசியம்மா, கொக்கிரகொளம் கோட்டுல இன்னக்கி வாய்தா ஒன்னுமில்லிய"

"அதெல்லாமில்ல சம்முகம், நம்ம பேரனுக்கு..."

"ஒடம்பு கிடம்பு சரியில்லியோ?"

"சவியர் பள்ளிகுடத்துல ஒரு எடம் வாங்கனும்."

> "ஊதா நிறப்புடவையில், கண்ணுக்கு கூலிங்கிளாஸ் மாட்டியபடி, குதிரைவால் கொண்டையோடு சப்கலெக்டர் சந்திரலேகா அங்கும் இங்கும் ஓடியாடி வேலை செய்தது இன்றும் என் நினைவுகளில் பசுமரத்தாணியாய் இருக்கிறது."

"பெரியவுக இங்கன இப்ப வாரதில்லிய" என்றார் சண்முகம்.

"அப்ப சமாதானபுரத்துக்கா போவச் சொல்லுற."

"சொல்லப் பொறுக்குதியளா... மேம்பாலத்துக்கு கீழோடி போனா படித்துற வருமில்லா அங்கன புதுசா ஒரு கிட்டங்கி வாங்கியிருக்காவ மொதலாளி"

"சரி சரி"

"தை மாசம் இந்த கிட்டங்கிய கிரயம் பண்ணும்போதுதான ஆமந்தொற வந்து ஒங்ககிட்ட பணம் வாங்குனம்"

"..."

"வட்டி ஒழுங்கா வருதில்லா?"

"வருது வருது."

நிலையில்லாத கடல் தொழிலை முழுமையாக நம்ப முடியாததால், மீன் வியாபாரம், வட்டி வாசிக்கு கொடுப்பது என பல தொழில்களிலும் கை வைத்திருந்தாள் பாட்டி.

அலுவலகத்தில் சுவர் தெரியாத அளவுக்கு புகைப்படங்களாய் மாட்டியிருந்தார்கள். முதலாளி தர்மர் பெரிய பெரிய தலைவர்களோடு நின்றிருந்தார். அறிஞர் அண்ணாவிடம் பரிசு வாங்குவதுபோல, தலைநிறைய கருகருவென முடியோடு நடுவகிடெடுத்து வாரிய கலைஞர் கருணாநிதி மோதிரம் போடுவது போல, நாவலர் நெடுஞ்செழியனுக்கு பொன்னாடை போர்த்துவது போல என பல வகையான கருப்பு, வெள்ளைப் புகைப்படங்கள் சுவர்களை நிறைத்திருந்தன. பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்மன் கோட்டையை அவர்கள் ஒளி அலங்காரம் பண்ணியிருந்த புகைப்படத்தை வைத்த கண் வாங்காமல் வெகுநேரம் பார்த்தபடியே இருந்தேன்.

"எய்யா, இவுகதாம் நம்ம ஊரு, அந்தோணியார் கோயிலு, அந்திரையார் கோயில்லயெல்லாம் திருழாவுக்கு வந்து அலங்காரம் பண்ணுவாவ."

"ரெம்ப தூரமில்ல பாட்டி"

"முன்னால நம்ம பக்கத்தூரு திசயவெளையிலதாம் இருந்தாவ... சண்டயில இங்கன வந்ததுவ அப்படியே ஒதுங்கியாச்சி."

"எல்லாமே அவனோட சித்தம் பிரகாசியம்மா" என்றார் சண்முகம்.

"செல்வன் செட்டு போனது எங்க செல்வமே போனமாரியின்னாவள திசயவெள வியாபாரிமாரு." என்றாள் பாட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெல்லை மாவட்டத்தின் கடற்கரையூர்களுக்கு மேட்டு நிலைத்தில் அமைந்திருக்கும் திசையன்விளையே சந்தை. ஒரு நோய் நோக்காடா, உடுதுணியா, காய்கறி, மசாலை சாமான் வாங்க வேண்டுமா, சினிமாவா எல்லாவற்றிற்குமே திசையன்விளைக்குத்தான் வந்தாக வேண்டும். திசையன்விளையைச் சார்ந்து கடற்கரையூர்களும், கடற்கரையூர்களைச் சார்ந்து திசையன்விளையும் இருந்தது. 1972இல் நடந்த இனக்கலவரம் பெரிய திருப்புமுனை. கடற்கரையூர்களுக்கு தாம் சுயசார்பாய் இருக்க வேண்டும் என்ற உண்மையை உரைக்க வைத்த சம்பவம். பிள்ளைகள் பள்ளிகளுக்கு போக முடியவில்லை, நோய்நொடி வந்தால் பார்ப்பதற்கு இடமில்லை, அரிசி, புளி, மசாலை சாமான்கள் வாங்க வழியில்லை என ஆமந்துறையும் பக்கத்து கடற்கரையூர்களும் அல்லோலகல்லோலப்பட்ட நேரம். எங்கு பார்த்தாலும் இரும்புத் தொப்பி போலீசார் சூறாவளி போல் சுழன்று சுழன்று சமூகப் பணியாற்றினார்கள். அந்த நாட்களில் ஆமந்துறையில் பங்குக் குருவாய் இருந்த பீட்டர்ராயன் சாமியார் பார்ப்பதற்கு தேவதூதன் போல் தெரிந்தார்.

“சேர்மாதேவி சப்கலெக்டர் சந்திரலேகா வந்த பெறவுதான பிரச்சனைய ஒரு முடிவுக்கு வந்திச்சி”

ஊதா நிறப்புடவையில், கண்ணுக்கு கூலிங்கிளாஸ் மாட்டியபடி, குதிரைவால் கொண்டையோடு சப்கெலெக்டர் சந்திரலேகா அங்கும் இங்கும் ஓடியாடி வேலை செய்தது இன்றும் என் நினைவுகளில் பசுமரத்தாணியாய் இருக்கிறது.

பேருந்து நிலையத்திலிருந்து வெளியே இறங்கி நடந்தோம். பாரதி ஹோட்டலில் காபி வாங்கித் தந்தாள் பாட்டி. இன்றைய சரவணாவை விட ருசியான காபி என்பேன். மேம்பாலத்திற்கு கீழே வந்தபோது பாட்டியின் கையை தட்டி விட்டு விட்டு வேடிக்கை பார்த்தபடி நின்றிருந்தேன். மேலே பேருந்து முதலான நான்கு சக்கர வாகனங்கள் போவதற்கும், நடுவில் இரு சக்கர வாகனங்கள், மாட்டுவண்டி, சைக்கிள் ரிக்ஷா போன்றவை போவதற்கும், கீழே பாதசாரிகள் போவதற்குமான அமைப்பு. திருநெல்வேலி ஜங்ஷன் பகுதியிலிருந்து டவுனுக்கு போகும் பாதையில் பூர்ணகலா தியேட்டருக்கும், சிவசக்தி தியேட்டருக்கும் இடையில் அமைந்திருந்தது மேம்பாலம். முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி ஜப்பான் பயணம் போயிருந்தபோது அங்கு பார்த்து வந்து அந்தச் சூட்டோடே இந்த மேம்பாலத்தைக் கட்டியதாகச் சொல்வார்கள். என்னைப் போலவே பலரும் மேம்பாலத்தை வாயை பிளந்தபடியே பார்த்தபடி இருந்தார்கள்.

மேம்பாலத்தின் கீழே குறுக்கே குறுகலான சந்தில் நுழைந்து வந்தால் தாமிரபரணி ஆற்றின் படித்துறை, எதிரே இருந்தது செல்வன் கிட்டங்கி குட்டையும், நெட்டையுமாய் ஒலிக்குழாய்கள், கட்டுகட்டாய் குழல் விளக்குகள், சீரியல் விளக்குகள், டீசல் எஞ்சின் செட்டுகள் என நிறைந்து வழிந்த கிட்டங்கியின் ஒரு மூலையில் மேசை, நாற்காலி போட்டு அமர்ந்திருந்தார் தல்மேதா தாத்தா. மேசை மேல் தடித்த கணக்கு நோட்டு புத்தகங்கள். மூக்குக் கண்ணாடியை தூக்கிவிட்டபடியே தலையைத் தூக்கி எங்களைப் பார்த்தவர் வாயெல்லாம் பல்லாகத் தெரிய கேட்டார்.

“பிரகாசியம்மா, யாரு இது எலிக்குஞ்சி?”

“மூத்தவ மகம், மூத்தவம்.”

“...”

“சேவியர் பள்ளிகுடத்துல பத்து படிக்க எடம் வேணும்.”

“அரசாங்க பரிட்சயாச்ச...”

“என்ன சொல்லுறிய, பதினொன்னுலதான அரசாங்க பரிச்ச!”

“பிரகாசியம்மா, எல்லாம் மாறிப் போச்சாம். பத்துல அரசாங்கபரிச்சையாம், பெறவு மேல்நிலை வகுப்பாம். கணக்கு பாடமே மாறிப் போச்சாம் புதுசா கணம்ன்னு ஒரு புது பாடம் வந்திருக்காம்.”

“அது என்ன மாயமோ...!”

“சமாதானபுரத்துல மருமகம் வீட்டுப் பக்கந்தாம் பீரிஸ் வாத்தியார் வீடு, சொல்லி ஏற்பாடு பண்ணியிறுலாம்.”

“ஓங்களத்தாம் மலபோல நம்பியிருக்கோம்.”

“பணங்காசுன்னா நாங்க பிரகாசியம்மாவ மலபோல நம்பலயா அதுமாரிதாம்.”

“எலேய், பீரிஸ் வாத்தியாரு ஹாக்கி வெளையாடச் சொல்வாரு...” என்றார் தல்மேதா தாத்தா.

“தூத்துக்குடியில எல்லாம் கூடப்பந்து...”

“தெரியுமா!”

“பாத்திருக்கம்”


“என்னமோ... பீரிஸ் வாத்தியாரு ஹாக்கி வெளையாடுவியான்னு கேட்டா, சரின்னு சொல்லு.”

“சரி தாத்தா, ஆனா ஃபுட்பாலு...”

“எப்பவும் ஒண்ணயே புடிச்சிகிட்டு தொங்காதைங்க. நல்லதா புதுசா வார நாலு விசயத்த தெரிஞ்சிக்கிறுங்க. கடக்கரைக்காரமின்னாலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கால் பந்துதாம்..."

ஹாக்கி என்றாலேயே பீரிஸ் வாத்தியார் என்றிருந்த காலம். இன்றும் திருநெல்வேலி பக்கமிருந்து அதிகம்பேர் அரசாங்க வேலையிலிருக்கிறார்கள் என்றால் அதற்கு பீரிஸ் வாத்தியார்தான் காரணம்.

தல்மேதா தாத்தாவிற்கு நல்ல சதுர முகம், மாம்பழ நிறம். நெற்றிப் பொட்டில் பிறை நிலவு போல வடு ஒன்றிருக்கும். நேர்த்தியாய் பக்கவாட்டில் வகிடெடுத்து தலைவாரியிருப்பார். வெகுகாலம் கொழும்பில் இருந்தவர் ஆமந்துறை வந்து தன் மூன்று பெண் குழந்தைகளுக்கும் திருமணம் செய்து வைத்துவிட்டு இப்போது செல்வன் ஒலி ஒளி உரிமையாளரான தர்மர் வீட்டில் தன் மூத்த மகளோடு வாசம். மருமகன் தருமருக்கு கணக்கு வழக்குகளில் உதவி செய்வதற்காக அவர்களோடு இருந்தார் தாத்தா. ஊரில் இருந்து வருபவர்களுக்கு தல்மேதா தாத்தா ஒரு கலங்கரை விளக்கம். தாத்தாவின் அய்யா பெரிய தொள்ளாளியாம், கடலில் அவர் கை நீட்டிய இடத்தில் மீன்படும் என்று சொல்வார்கள். ஆனால் தல்மேதா தாத்தா காலத்தில் தனக்கு ஆண் வாரிசே இல்லாமல் மூன்றும் பெண்ணாகிவிட்டதால் மாந்திரீகம், தரித்திரம் என்று ஒதுக்கி விட்டாராம்.

பள்ளியிலும், விடுதியிலும் தல்மேதா தாத்தா புண்ணியத்தில் சேர்ந்தாகிவிட்டது. ஆனால் பள்ளி நேரமும் படிப்பு நேரமும் கடந்த மற்ற நேரங்கள் மகிழ்வாய் கழிந்தன. பள்ளியில் தமிழ் வாத்தியார் ராமசுப்பு மாசில் வீணையும், மாலை மதியமும்...என வெண்கலக் குரலெடுத்துப் பாடுவார். கணக்கு வாத்தியாரோ மாடு மேய்ந்த பரப்பளவு எவ்வளவு ஆனந்து என்றே எப்போதும் மிரட்டுவார். படிப்பு மண்டையில் ஏறி மூளையில் உரைக்கவேயில்லை. விடுதியில் ஸ்டடி நேரங்களில் புத்தகத்தை திறந்து வைத்தபடியே கனவு கண்டு

> “ஹாக்கி என்றாலேயே பீரிஸ் வாத்தியார் என்றிருந்த காலம். இன்றும் திருநெல்வேலி பக்கமிருந்து அதிகம்பேர் அரசாங்க வேலையிலிருக்கிறார்கள் என்றால் அதற்கு பீரிஸ் வாத்தியார்தான் காரணம்.”

கொண்டிருப்பேன். கனவுகளில் ஆமந்துறைக் கடலில் தொம்மந்திரை தாத்தா கடலோடும் வித்தையை பார்த்து ரசித்தபடியே இருப்பேன். மொட்டப்புளி மேட்டிலிருந்து தோப்பு கிணற்று இறக்கத்தில் காற்றை கிழித்தபடியே சைக்கிளில் இறங்குவேன். வேம்பர் ஹாக்கி மட்டையோடு, காலில் பூட்ஸ் மாட்டியபடி காக்கிப் பந்தை வேகமாய் உருட்டிச் சென்று கோல் அடிப்பேன்.

விடுதியில் திங்களானால் மொச்சை கொட்டைக்குழம்பு, புதனானால் முட்டைக்கூட்டு. ஞாயிற்றுக்கிழமைகளில் காலை உணவுக்கும் மதிய உணவுக்குமான இடைப்பட்ட நேரம் சுவராஸ்யமானது. விடுதியின் வெளிப்புறச் சுவரருகே ஐஸ் வண்டிக்காரர்கள் வந்து நிற்பார்கள். ஆமந்துறையில் குச்சி ஐஸ்சும், சேமியா ஐஸ்சுமே ருசித்திருந்த எனக்கு ஆரஞ்சு, திராட்சை, மாம்பழ ருசியில் விதவிதமாய் ஐஸ்கள் கிடைத்தன. முண்டியடித்தபடி ஐஸ் வாங்கி சப்புவோம். நாட்கள் ஆக ஆக கிடைத்த தைரியத்தில் சுவரேறிக் குதித்து மரியா கேண்டினில் கேக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போண்டாவும் சுவைத்தோம்.

முதன் முதலாக எனக்கு பேண்ட் மாட்டி அழகு பார்த்தபடி பழைய காயல் இளங்கோவும், சிவந்திப்பட்டி தாம்சனும்,எப்போதும் ஆங்கிலமே பேசும் சொரூபன் ஜுடும் இந்த விடுதியில்தான் எனக்கு நண்பர்களாக அறிமுகமானார்கள்.

மாதம் ஒருமுறையாவது தல்மேதா தாத்தா என்னைப் பார்க்க வருவார். அந்தக்காலத்து கடற்கரை வாழ்வை கதை கதையாய் சொல்வார் தாத்தா. முத்துக் குளித்துறையில் பாண்டியபதி முத்துச் சிலாபம் நடத்தி கோலேச்சிய கதையை விலாவரியாகச் சொல்வார். கொக்கிரகுளம் சுலோச்சனா முதலியார் பாலம் வந்த கதை, பிள்ளையைப் போட்டெடுத்த பலாப்பழ ஓடை கதை என அவர் சொன்ன அத்தனை கதைகளுமே கேட்பதற்கு பிரமிப்பாய் இருக்கும். சில வேளைகளில் சமாதானபுரத்து வீட்டிற்கு கூட்டிப்போய் அங்கு வீட்டு உணவைச் சாப்பிட வைப்பவர், அப்படியே ஜங்ஷன் வரை வந்து அரசனில் ஐஸ்கிரீம் வாங்கித் தருவார். அந்தச் சுவை நாக்கில் இன்னும் தேனாய் இனிக்கிறது.

கடந்த 2013 செப்டம்பரில் பாளையங்கோட்டை சேவியர் கல்லூரியில் நடந்த கலைவிழாவொன்றுக்கு அழைக்கப்பட்டிருந்தேன். கோவிலின் அருகே ஹாக்கி மைதான திறந்த வெளியில் இருந்தது மேடை. உடம்பெல்லாம் புல்லரித்துக் குளிர்ந்துபோக அதிபர் மற்றும் முதல்வர் சாமிமாரோடு மேடையில் அமர்ந்திருந்தேன். கல்லூரியின் மாணவ, மாணவியர் பல்வேறு விதமான கலைநிகழ்ச்சிகளை அங்கே அரங்கேற்றியபடி இருந்தார்கள். எனக்கு முதன்முதலாய் மேடையேறிய சம்பவம் மன திலாடியது. பூணுலும், பஞ்சகச்சமும் அணிந்து, நெற்றியிலும் தோள் பட்டையிலுமாய் விபூதி பூசி வில்லுங்கையுமாய் மேடையில் கையில் இரண்டு கோலோடு அமர்ந்திருந்தேன். எதிரே முன்வரிசையில் அமர்ந்திருந்த தாடிக்கார அதிபர் சாமி ஜாண் புன்னகைத்து கண்ணசைக்க,

தந்தனத்தோம் என்று சொல்லிய

வில்லினில் பாட - ஆமா

வில்லினில் பாட - ஆமா

வந்தருள்வாள் கலைமகளே - என்று ஆரம்பித்து நண்பர்களோடு பெஸ்கி என்ற வீரமாமுனிவரின் கதை சொல்ல ஆரம்பித்தேன். ஒரு முடிவுறாத கதை சொல்லியின் ஆரம்பப்புள்ளி அதுவோவென வியந்து நோக்கத் தோன்றுகிறது. என் வேர்கள் உரம்பெற்ற பாளையங்கோட்டை சவேரியார் பள்ளிவளாகமண்ணை நினைத்தாலே மனம் குளிர்ந்து போகிறது. ■

## காக்கையின் கோரிக்கை




**காக்கைச் சிறகினிலே இதழுக்கு படைப்புகள் அனுப்புவோர் கவனத்திற்கு:**

படைப்பாளிகள் பக்க வரையறையைத் தீவிரமாகக் கவனத்தில் கொள்க. உங்கள் படைப்பு ஐந்து பக்கங்களுக்கு மிகாமல், (ஏறக்குறைய 750 வார்த்தைகள்) கணினி அச்சில் இருத்தல் அவசியம்.

படைப்புகளை எழுத்துப்பிரதியாக அனுப்புவதைத் தவிர்க்குமாறு கேட்டுக் கொள்கிறோம். யுனிகோட் எனப்படும் ஒருங்குறி எழுத்துருவில் கணினி அச்சு செய்து அனுப்பவும். படைப்புகளை அனுப்புவோர் தங்களுக்கான பிரதியை வைத்துக் கொள்ளவும். வெளியிடுவதற்குத் தேர்வு பெறாத படைப்புகளைத் திருப்பி அனுப்ப இயலாது.

உங்கள் படைப்பு வெளியிடுவதற்குத் தேர்வு பெற்றதா, இல்லையா என்பது குறித்து, படைப்பை அனுப்பிய ஒரு மாத காலத்திற்குப் பிறகு, தொலைபேசியில் (9841457503) தொடர்பு கொண்டு கேட்டறியலாம்.

கவிதை, சிறுகதை, கட்டுரை என உங்கள் படைப்பு எதுவாயிருப்பினும், நீங்களே ஓரிரு முறை படித்துப் பார்த்து, ஒற்று உள்பட மெய்ப்புத் திருத்தி அனுப்புமாறு கோருகிறோம்.

படைப்பை ஏற்பதும் நிராகரிப்பதும் ஆசிரியர் குழுவின் இறுதி முடிவுக்கு உட்பட்டது என்ற இதழியல் உலகின் மரபையும் ஜனநாயகத்தையும் மதித்துப் போற்றும் பண்பாடு நிறைந்தவர்கள் படைப்பாளிகள் என்று காக்கை முழுமையாக நம்பிக்கை கொள்கிறது.

இதழ் குறித்த தங்களது கருத்து அல்லது விமர்சனத்தை ரத்தினச் சுருக்கமாக அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம். 60 முதல் 100 வார்த்தைகளுக்குள் இருத்தல் நலம். அதிகமான வர்களின் கருத்துகளை வெளியிடுவதற்கு இது உதவியாக அமையும்.

பிரபல சிற்றிதழ்கள் போல, விரிந்த கட்டமைப்பு வசதிகள் மற்றும் மனித வளத்துடன் இயங்கும் நிலையில் காக்கை இல்லை. வெகுசில தன்னார்வலர்களின் கூட்டு முயற்சியில் இந்த இதழ் வெளிவருகிறது. முன்னும் பின்னும் அறிந்து ஆக்கப்பூர்வமான ஒத்துழைப்பை அளிக்குமாறு படைப்பாளிகளையும் வாசகர்களையும் காக்கை நிமிர்ந்து கோருகிறது.

**- ஆசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதிர்ந்த பௌர்ணமி நிலவு போல்
நெருப்பில் காய்ச்சி கவிழ்த்து
வைக்கப்பட்டிருக்கிறது பறை
நெருப்பின் மொழி மேல் நோக்கி
இருப்பினும்
பறையின் மொழி அதைக்காட்டிலும்
மேல் நோக்கி பறந்து தின்கின்றது.
பறையைப்பற்றி பரிபாடல் கருத்துக்களை
நவீன கரையான்கள் அனைத்து விட்டு
புது கருத்துக்களை மூளைக்குள்
திணித்துள்ளது.
இறந்து போன மனங்களுக்கும் சேர்த்து
இறுதிச்சடங்கில் தூவப்படுகின்றன பூக்கள்.

அவர்கள் வாழ்வியல் சொற்களை
நீங்கள் உச்சரிக்க நேர்ந்தால்
சாக்கடையின் துர்நாற்றத்தையும்
மலக்குழியின் வீச்சத்தையும்
வல்லுறவு கொண்ட உதிரவாடையையும்
அடிமனதில் காயம்பட்டு புண்பட்டு கசியும்
சீல் நெடியையும் உணரக்கூடும்.
தொடர்ந்து கழிவுகளை சுத்தம் செய்து
சுகாதார வாழ்வளிப்பவர்களை
தொடர்பு எல்லைக்கு அப்பாலே
வைத்திருக்கிறது சமூகம்.

தீண்டப்படாதவர்களின் காதல்
தண்டவாளங்களில் ஏற்றப்படுகின்றது.
அவர்களுக்கென்று தனிக்குவளை. . . .
அவர்களுக்கென்று தனி உணவு. . . .
அவர்களுக்கென்று தனி வாழ்விடம். . .
பூப்படைவு சொல்லிப் போவோம்
இழவு சொல்லிப் போவேம்
ஒட்டு உறவு இல்லாமல் எங்களை. . . .
வெட்டி வைத்திருப்பவர்களுக்கு
வெட்டியான் வேலையும் பார்ப்போம்.

# பறை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜெயமோகனின் வெள்ளை யானை

அது விக்டோரியா மகாராணியாரின் ஆட்சிக்காலம். அந்தக் காலக்கட்டத்தில்தான் சென்னையில் 'வெள்ளை யானை'யின் கதைக்களம் தொடங்குகிறது. கதை நடைபெறுகிற ஆண்டு1877-78. இவ்வாண்டுகளை வரலாற்று ஆசிரியர்கள் தக்காணத்து பஞ்சம் என்று சொல்லுவார்கள். என்னைப் போன்ற பாமரன் 'தாது வருஷத்து பஞ்சம்' என்பான். அந்தப் பஞ்சக் காலத்தில் சென்னையைச் சுழன்று சுழன்று வருகிறது 'வெள்ளை யானை' கதை - நாவல்!

இப்போது இருக்கிற விவேகானந்தர் இல்லம் அப்போது 'ஐஸ் அவுஸாக' இருந்தது. அதில் அமெரிக்கக் கம்பெனி ஒன்று இங்கிலாந்திலிருந்து கப்பலில் ஐஸை இறக்குமதி செய்து வைத்திருந்து வெள்ளையருக்கு விற்று வந்தது. இந்தப் பனிக்கட்டி நுங்கு உரித்தது மாதிரி இருப்பதால் ஜெயமோகன் 'வெள்ளை யானை' என்று பெயரை அந்தநாவலுக்குவைத்து அவர் 'வேலையைத்' தொடங்கிவிட்டார். இந்த ஐஸ் கம்பெனியில் 300 தாழ்த்தப்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அடிமையாக, ஒடுக்கப்பட்டவர்களாகக் கிடந்தவர்கள் ஒரு நிகழ்வின் காரணமாக கொதித்தெழுந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகிறார்கள். கவர்னர் பெருமான் மறைமுகமாக அவ்வளவு தொழிலாளிகளையும் கொன்று ஒழிக்கிறார். இதுதான் வெள்ளை யானையின் சுருக்கமான வரலாற்றுக் கதை.

இக்கதையில் கவர்னர் பங்கிங்காம் வருகிறார். இங்கிலாந்தில் அவர் ட்யூக்-சிற்றரசர் போல! அவரின் செயலர், ஒரு காவல் அதிகாரி எய்டன்பைரன், அந்தக் காவல் அதிகாரியைச் சுற்றி சில பணியாட்கள், இராயபுரத்து விலைமகள் மரிசா, அங்குள்ள செயிண்ட் பீட்டர் சர்ச்சின் பாதிரியார் பிரண்ணன், 'எல்லாம் தெரிந்த'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்தவராயன், கறுப்பன், ஐஸ்அவுசின் மேலாளர் பார்மர், ஒரு செட்டியார், ஒரு முதலியார் இப்படிப் பல பாத்திரங்கள் வருகின்றன; வெள்ளை யானை நாவலில்! எல்லாருடைய பெயரையும் எழுதி விரிவாக்க விரும்பவில்லை. இந்நாவலில் காவல் அதிகாரி எய்டன் பைரன், தாழ்த்தப்பட்டவர்களின் தலைவர் காத்தவராயன் ஆகியோரை ஜெயமோகனின் 'கையிருப்பு' பேச வைத்து இருக்கிறது. இதற்கு மூலம் Asian Educational Services புத்தகங்கள்தான்! அதிலிருந்து வடித்த எஸ்.முத்தையாவின் புத்தகங்களாகவும் இருக்கலாம். இன்னும் சென்னைப் பட்டினத்தைப் பற்றி நூற்றுக்கணக்கான நூல்கள் வெளிவந்து இருக்கின்றன. அவையும் இருக்கலாம்.


ஐஸ் அவுஸ் வேலை நிறுத்தத்தைப் பற்றி அவரால் 48 பக்கங்களில் சொல்லி இருக்க முடியும். ஜெயமோகன் 19ஆம் நூற்றாண்டு மத்திய காலத்து சென்னையின் வரலாற்றைத் தெரிந்து கொண்டு விட்டாரே என்ன செய்வது; அதனால் 408 பக்கங்களுக்கு நாவலை இழுத்துவிட்டார். எதற்காக எழுதினார் என்பதும், யாரைத் தாக்க எழுதினார் என்பதும் அடிப்படையான விஷயங்களானாலும் கதையை மிகச்சுவையாக வளர்த்து இருக்கிறார். செய்திகளை சொல்லும்விதம் கவர்ச்சியாக இருக்கிறது. இந்நாவல் எழுத ஜெயமோகனுக்கு என்ன தேவை வந்தது? ஏன் எழுதினார்? - என்பதுதான் அதைவிட முக்கியம்.

பசுமை பக்கங்கள் எனும் இணைய தளத்தில் (03.06.2013) 'தாழ்த்தப்பட்ட மக்களை ஊருக்கு வெளியே விரட்ட வேண்டும்; திராவிட இயக்கத்தின் விபரீதவரலாறு' எனும் கட்டுரையை அருள் என்பவர் எழுதி வெளியிட்டு இருந்தார். இக்கட்டுரையை என் கவனத்திற்கு விடுதலை நாளேடு கொண்டு வந்தது. நான் 2013ஆம் ஆண்டு ஜுன் 13,14,15 ஆகிய நாள்களில் விடுதலையில் அதற்கு விரிவான பதிலை எழுதினேன். அதற்கான ஆதார ஆவணங்களையும் அக்கட்டுரையில் சுட்டிக்காட்டி இருந்தேன். அக்கட்டுரையின் உள்ளடக்கத்தில் 1921ஆம் ஆண்டு சென்னை பி அண்டு சி மில்லில் நடைபெற்ற வேலைநிறுத்தம் பற்றி அருள் கூறியிருந்த குற்றச்சாட்டுகளுக்கு விளக்கமாக பதில் அளித்து இருந்தேன். இது முடிந்தபோன ஒன்று. அதற்கு மேல் சொல்வதற்கு அதில் ஒன்றும் இல்லை.

ஜெயமோகன் நான் விடுதலையில் எழுதிய விளக்கத்தினைப் படித்து இருக்கிறார். விவரங்களைத் தெரிந்து கொண்டார். அவற்றைப் படித்ததுபோல்காட்டிக்கொள்ளவில்லை.ஆனால் 'வெள்ளை யானை' என்ற ஒரு நாவலை எழுதி வெளியிட்டு விட்டார். எப்போது? 18.08.2013இல். நான் விடுதலை நாளேட்டில் பதில் எழுதியதற்குப் பிறகு! ஜெயமோகன் அந்த நாவலுக்கு ஒரு முன்னுரை எழுதியிருக்கிறார். அதில், 1921ஆம் ஆண்டு நடைபெற்ற பி அண்டு சி வேலைநிறுத்தம் பற்றியும் அந்த வேலை நிறுத்தத்தின்போது நீதிக்கட்சி ஆதிதிராவிடர்களுக்கு கேடும் அவதூறும் விளைவித்ததாகவும் விரிவாக எழுதியுள்ளார். நாவலில் இந்தச் செய்தி வருகிறதா என்றால் இல்லை. ஏன் சொல்லுகிறார் என்றால் திரு.வி.கவைப் பற்றிக் குறிப்பிட வேண்டும். அங்கிருந்து கதைக்கான களத்தை அமைத்தாகக் காட்டிக் கொள்ள வேண்டும். அதற்காகத்தான் முன்னுரையில் இப்படி ஒரு பூர்வபீடிகை. இம்முன்னுரையில் திராவிட இயக்கத்தையும் இடதுசாரிகளையும் ஓர் இடிஇடித்துவிட்டு மேலே செல்ல வேண்டும். அப்படிப்பட்ட 'ஓர் இடிராஜா' ஜெயமோகன்!

'வெள்ளை யானை' நாவலின் முன்னுரையில் ஜெயமோகன் குறிப்பிட்டுள்ள செய்திகளைப் பார்ப்போம்.

1. '1878இல் ஐஸ்அவுசின் கடைசி நாள்களில் நடந்த போராட்டம் முழுக்க, முழுக்க தலித்துகளால் நடத்தப்பட்டது. அதைப் பற்றி திரு.வி.க ஓரிரு வரிகள் செவிவழிச் செய்தியாகக் கேட்டதை தமது வாழ்க்கைக் குறிப்பில் எழுதி இருக்கிறார்' என்று



ஜெயமோகன் நான் விடுதலையில் எழுதிய விளக்கத்தினைப் படித்து இருக்கிறார். விவரங்களைத் தெரிந்து கொண்டார். அவற்றைப் படித்ததுபோல் காட்டிக் கொள்ளவில்லை. ஆனால் 'வெள்ளை யானை' என்ற ஒரு நாவலை எழுதி வெளியிட்டு விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு பொன்னோவியம் சொன்னதாக ஜெயமோகன் முன்னுரையில் எழுதி இருக்கிறார்.

ஆனால்திருவிகவின்வாழ்க்கைக்குறிப்புகளில் 1878இல் ஐஸ் அவுசில் நடந்த தொழிலாளர் போராட்டம் (?) பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்பதே உண்மை. ஆகவே வெள்ளை யானை கதையின் கரு ஜெயமோகனின் கற்பனையே. அது உண்மை வரலாற்றை விரிவுப்படுத்திய சரித்திரக் கற்பனை அல்ல.

2. திருவிகமற்றும்அவரின்கூட்டுத்தோழர்கள் நால்வர், மொத்தம் ஐந்துபேர்சேர்ந்துதான் இந்தியாவின் முதல் தொழிற்சங்கமான 'சென்னை தொழிலாளர் சங்கத்தை'த் தொடங்கினர். இதனை ஆங்கிலத்தில் 'Madras Labour Union' என்றுதான் வரலாறு குறிப்பிடுகிறது. ஆனால் அதனை 'Madras Workers Union' என்று முன்னுரையில் குறிப்பிட்டு இருக்கிறார் - ஜெயமோகன். வரலாற்றை நாவலாக வடிக்கிறபோது 'நுட்பம்' கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட ஒருவிஷயத்தை ஜெயமோகனிடம்காண முடியாது. அதற்கு பல எடுத்துக்காடுகளைக் காட்ட முடியும்.

3. வெள்ளையானைமுன்னுரையில்மற்றுமொரு குண்டைத் தூக்கிப்போட்டு இருக்கிறார். அயோத்திதாசர், இரட்டைமலை சீனிவாசன் போன்ற தாழ்த்தப்பட்ட தலைவர்களுக்கு முன்பு 15க்கும் மேற்பட்ட தலித்துத் தலைவர்கள் இருந்ததாக அன்பு பொன்னோவியம் சொன்னார் என்று ஜெயமோகன் எழுதுகிறார். அவர்கள்தான் அயோத்திதாசருக்கும், இரட்டைமலை சீனிவாசனுக்கும் வழிகாட்டிகளாக இருந்தார்கள் என்றும் ஜெயமோகன் குறிப்பிட்டு இருக்கிறார். அப்படியானால் அவர்கள் யார், யார் என்று குறிப்பிட வேண்டாமா? அதைப் பற்றிய செய்திகள் எதுவும் முன்னுரையில் சொல்லப்படவில்லை.

4. இன்னொருஇமாலயப்பொய்யைஎழுதுகிறார் ஜெயமோகன்! 1921ஆம் ஆண்டு நடைபெற்ற பி அண்டு சி வேலைநிறுத்தப் போராட்டத்தில் அயோத்திதாசர் மறைமுகமாகவோ நேரடியாகவோ பங்குப்பெற்று இருக்கிறார் என்று குறிப்பிட்டுவிட்டு, இதையும் பொன்னோவியம் சொன்னதாக எழுதுகிறார். அயோத்திதாசர் 1845-1914 என்கிறகாலகட்டத்தில்வாழ்ந்துமரித்தவர். இவர் எப்படி 1921ஆம் ஆண்டு நடைபெற்ற வேலைநிறுத்தத்தில் பங்கேற்றிருக்க முடியும்?

ஒரு வரலாற்று நாவலை எழுதுகிறவர் முன்னுரையிலேயே இவ்வளவு குளறுபடிகளைக் கூறி இருக்கிறார். அன்பு பொன்னோவியம் கூறினால் அப்படியே எழுதிவிடலாமா? சரிபார்த்து எழுத வேண்டாமா? உண்மையாக எழுதுகிறவர்தானே, அப்படி எழுதுவார். இவர் திராவிட இயக்கத்தையும் இடதுசாரிகளையும் தாக்குவதற்காக எழுதுகிறவர். அவர் கையில் விஷய 'இருப்பு' இருந்திருக்கிறது. ஒரு நாவலை உருவாக்கிவிட்டார்; அவ்வளவுதான்!

அந்நாவலில் 1921ஆம் ஆண்டு நடைபெற்ற பி அண்டு சி வேலைநிறுத்தத்தைப் பற்றி கதைக்காமல் தன்னிடமுள்ள விஷயங்களுக்கு ஏற்ப கற்பனையான ஐஸ்அவுஸ் வேலை நிறுத்தத்தைப் பற்றி படைத்துக் கொண்டார். இதில் முக்கியமான ஒரு செய்தி என்னவென்றால் இக்காலக் கட்டத்தில் வெளிவந்த சிறிய, பெரிய ஏடுகள் எதிலும் அந்த வேலைநிறுத்தம் பற்றிய செய்தி இடம் பெறவில்லை. இதழ்களை ஆராய்ந்தவர்கள் எவரும் இதுவரை தெரிவித்ததும் இல்லை. திராவிட இயக்கத்திற்கோ, இடதுசாரிகளுக்கோ தலித்துகளின் மீது வன்மம், கோபம், பழிவாங்கல் என்று ஒருபோதும் இருந்ததில்லை. ஆகவே ஜெயமோகன் தனது கற்பனையில் ஒரு வேலைநிறுத்தத்தை - வெள்ளை யானை நாவலில் படைத்துக் கொண்டு 300 தாழ்த்தப்பட்டவர்களை கொன்று இருக்கிறார். இதன் பொருள் என்ன?

ஜெயமோகன் அறிவு ஜீவிகளில் ஒரு மாதிரியானவர். சரியாகச் சொல்வதானால் அவர் 'அந்தப் பக்கத்து' அறிவாளி. நமக்கு அவர் எந்த வகையிலும் உதவக்கூடியவர் இல்லை. பின், ஏன் அவரைப் பற்றி எழுதுகிறீர்கள் என்று கேட்பீர்களானால் 'மக்களே போன்றவரை' அடையாளம் காட்ட வேண்டாமா? - அதற்காகத்தான்! அவர் எதைப்பற்றி எழுதினாலும் செய்திகளின் குவியலைக்காட்டி மலைக்க வைப்பார்; மயங்க வைப்பார். அந்த மலைப்புகளின் உள்ளே, பொய்யை மெய்யாக்கிக் காட்டுவார். விஷயங்களைத் தெரிந்து வைத்திருப்பவரைக் கெடுப்பார்; அய்யப்பட வைப்பார். ஏற்கெனவே ஜெயமோகனின் 'இன்றைய காந்தி யார்?' எனும் நூலுக்கு அதே தலைப்பில் ஒரு சிறு நூலே எழுதி விமர்சனம் செய்து இருக்கின்றோம்.

இப்போது அவரின் 'வெள்ளை யானை' வெளி வந்து இருக்கிறது. இந்நாவலை நான் படிக்க வேண்டும் என்பதற்காக டாக்டர் ராம் - வனிதா இணையர் வாங்கித்தந்து இலண்டன் திரும்பினர். சிலமாதங்கள் என்னால் இந்நாவலைத் தொட முடியவில்லை. தொட்டுப்பார்த்து உணர்ந்தபோது ஜெயமோகன் அவர் பாதையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**" ஜெயமோகன் அறிவு ஜீவிகளில் ஒரு மாதிரியானவர். சரியாகச் சொல்வதானால் அவர் 'அந்தப் பக்கத்து' அறிவாளி. நமக்கு அவர் எந்த வகையிலும் உதவக்கூடியவர் இல்லை. பின், ஏன் அவரைப் பற்றி எழுதுகிறீர்கள் என்று கேட்பீர்களானால் 'மக்களே போன்றவரை' அடையாளம் காட்ட வேண்டாமா? – அதற்காகத்தான்! "**

- பொய்த் தகவல்களைத் தருவதில் இன்னமும் முனைந்து இருக்கிறார் என்பது தெரிய வந்தது. முன்னுரையில் அவரின் பொய்க் கூற்றுகளைப் பார்த்தோம். இப்போது நாவலின் உள்ளே சிலவற்றைப் பார்ப்போம்.

முதல் அத்தியாயத்தில் பக்.30இல் 'மெரினா' என்று சென்னை கடற்கரையைக் குறித்துள்ளார் ஜெயமோகன். கதை நடப்பது 1877-78இல். அப்போது 'மெரினா' எனும் பெயர் அப்பகுதிக்கு வழங்கப்படவில்லை. இப்பகுதிக்கு 'மெரினா' என்று பெயர் வைத்த கவர்னர் மௌண்ட் ஸ்டுவர்ட் எலிபின்ஸ்டோன் கிராண்ட் டப் (Mount Stuart Eliphinstone grant Dutb). இவர் அதிகாரத்தில் இருந்த ஆண்டு 1881-1886. இதை ஜெயமோகன் கவனத்தில் கொள்ளவில்லை.

கதையில் அப்போதைய சென்னையின் கூவம் ஆறு எப்படி பிரிக்கப்பட்டு ஓடியது என்பதை எழுதியிருக்க வேண்டும். எய்டன் பைரன் எனும் காவல் அதிகாரி அடையாற்றில் இருந்து வந்திருக்க வேண்டியதில்லை. கோட்டைக்கும் ஐஸ் அவுசுக்கும் உள்ள இடைப்பட்ட ஆற்றில் மரப்பாலம் அமைக்கப்பட்டுவிட்டது. எய்டன் கோட்டைக்கு செல்லும்போது அதைப்பற்றி எதுவும் சொல்லவில்லை.

கடற்கரை சாலையில் சேப்பாக்கம் அரண்மனை, மாநிலக்கல்லூரி, பல்கலைக்கழக செனட் கட்டடம், பொதுப்பணித்துறை செயலகக் கட்டடம் போன்றவை கதை நடக்கும் காலத்தில் கட்டப்பட்டுவிட்டன. எய்டன் குதிரை சாவரியின்போது இவற்றை கடந்து சென்றதாகக் கதையில் குறிப்பிடப்படவில்லை. வேலை நிறுத்தம் நடைபெறும் கட்டட அமைப்பு - எப்போது கட்டப்பட்டது ஐஸ் அவுஸ் என்கிற விபரம் கதையில் இடம் பெறாதது சரியில்லை.

இரண்டாவது அத்தியாயத்தில் பங்கா (இழுக்கப்படும் இழுவை விசிறி) பற்றி குறிப்பிட்டிருப்பது அக்கால நிலையை உணர்த்துவது ஆகும். மின்விசிறி இல்லாத காலம். சென்னை அருகே உள்ள பொன்னேரியில் 1950களில்கூட தாசில்தார் அலுவலகத்தில் 'பங்கா' இருந்தது. 1954இல்தான் சென்னைக்கு அருகே உள்ள பொன்னேரிக்குக்கூட மின்சாரம் வந்தது.

இதே அத்தியாயத்தில் பக் 71இல், 'இங்கே வெள்ளையர் பகுதியில் குப்பையில் வீசப்படும் உணவைப் பொறுக்கி உண்பதற்காகக்கூட ஏராளமான கறுப்பர்கள் வருகிறார்கள்' என்று ஜெயமோகன் எழுதியிருந்தார். வசதிப்படைத்த அனைத்துப் பகுதிகளிலும் இம்மாதிரியான நிலை சென்னை நகரில் இருந்து வந்து இருக்கிறது. வடசென்னையில் 1960 வரையும் நீடித்தும் இருந்தது.

எங்கள் குடும்பம் வடஆர்க்காடு மாவட்ட கிராமம் ஒன்றிலிருந்து தாது வருஷத்து பஞ்சத்தின்போது சென்னைக்கு பிழைக்க வந்த குடும்பம். எச்சில் இலையில் வீசப்படும் உணவை வழித்துத் தின்பவர்களுக்கு ஒரு 'ஹெட்' இருப்பானாம். அவன் அவ்வாறு உணவை சேமிக்கும் வேலையை ஏதுமிலிகள் செய்யும்போது கழுத்தில் துணியைக் கட்டிக் கொண்டு ஒரு டப்பாவின் மீது தெருவில் அமர்ந்து மேஸ்திரி வேலைப் பார்த்துக் கொண்டிருப்பானாம். இத்தகவலை எங்கள் தகப்பனார் எங்களுக்குச் சொன்னது. இப்படிப்பட்ட பல செய்திகளை ஜெயமோகன் குறிப்பிடுவது அக்கால எதார்த்தத்தை விளக்குவதாக உள்ளது வரை சரி.

ஆனால் காத்தவராயன் பாத்திரம் இருக்கிறதே - அவன் காவல் அதிகாரியிடம் உரையாடுவது இருக்கிறதே - அக்கால நிலையில் அது மிகை. அவன் ஜெயமோகன் படித்ததையெல்லாம் பேசுகிறான். ஒன்றைக் குறிப்பிடுகிறேன் பாருங்கள்.

"ஒரு வேளை ஆங்கிலேயர் ஆயிரம் வருடங்களுக்கு முன்னால் அயர்லாந்தினரை முழுக்கத் தோற்கடித்து அடிமைகளாக்கி இருந்தார்கள் என்றால் உங்களிடம் நான் இதைக் கேட்டிருக்க வேண்டியிருக்கும் சார்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> ஆக, ஜெயமோகன் வெள்ளை யானை எனும் நாவலைத் தானாக படைத்துக் கொண்ட ஒரு வேலைநிறுத்தத்தைப் பற்றி எழுதி இருக்கிறார். அதில் திராவிட இயக்கத்தையும், இடதுசாரிகளையும் ஓர் இடி இடித்து இருக்கிறார். இவையெல்லாம் அவர் தாழ்த்தப்பட்ட மக்களின் மேல் உள்ள ஓர் அக்கறையினால் எழுதியது அல்ல.

என்று எய்டனிடம் காத்தவராயன் சொன்னான் என ஜெயமோகன் எழுதுகிறார். இது மட்டுமல்ல. பஞ்சத்தில் இறந்தவர்களின் கணக்கைப் பேசுகிறான் அவன்!

இப்போதுகூட ஒரு போலீஸ் கமிஷனரிடம் இப்படிப்பட்ட ராஜதந்திர விஷயங்களை குப்பத்துத்தலைவன் பேசிவிட முடியும் என்று நான் நினைக்கவில்லை. அப்படி இருக்கும்போது 1877-78களில் இது எப்படி சாத்தியம்? கதை ஆசிரியர் ஜெயமோகன் அத்தகைய செய்திகளை வேறுவிதமாகச் சொல்லி இருக்க வேண்டும். வால்கா முதல் கங்கை வரை போன்ற நூல் அல்லவே - ஜெயமோகனின் வெள்ளை யானை!

இதேபோல மிகச்செல்வாக்கு உடைய முரஹரி அய்யங்காரைப் பார்த்து தாழ்த்தப்பட்டோரின் தலைவரான காத்தவராயன், (பக்.340)

"சரி, கடவுள் இருக்கிறார் என்றுதான் நானும் நினைக்கிறேன். இல்லாவிட்டால் மாடு தின்பவர்கள் உங்களுக்கு எஜமானர்களாக வந்து இருக்க மாட்டார்கள். உங்கள் பெண்களை அவர்களுக்குக் கொடுத்துவிட்டு அறைக்கு வெளியே நீங்கள் கூழைக்கும்பிடு போட்டு நின்றிருக்கமாட்டீர்கள்" என்கிறான். இந்தச் செய்தியை அவன் அக்காலக்கட்டத்தில் பேசி இருக்க முடியுமா? இதை வேறுவிதமாக அல்லவா ஜெயமோகன் சொல்ல வேண்டும். ஏன் அவர் காத்தவராயனைத் அக்காலக் கட்டத்திலும் தூக்கிக் காட்டுகிறார் என்றால் நீதிக்கட்சியையும் இடதுசாரிகளையும் இழிவுபடுத்த வேண்டும் என்ற நோக்கத்தில்தான்!

காப்டன் ஆரோன் எனும் பாத்திரம், காவல் அதிகாரி எய்டன் பைரனிடம் பேசுகிறது:

"...இந்த நாடெங்கும் பரவி இருக்கும் சாதி அமைப்பைக் கொள்கை அளவில் நியாயப்படுத்தி நிலை நிறுத்தும் பொருட்டு பிராமணர்களுக்கு அந்த இடம் அளிக்கப்பட்டு இருக்கிறது. அதற்காகத்தான் அவர்களுக்கு உச்சக்கட்ட மரியாதையும்காணிக்கையும்கொடுக்கப்படுகிறது. அவர்கள் அதைச் செய்யாவிட்டால் அவர்கள் அமர்ந்திருக்கும் கோபுரம் அவர்களுடன் சேர்ந்து சரிந்துவிடும்" (பக்.107)

"பிராமணர்களின் வழியாக இந்த நாடு ஆளப்படுகிறது. நேற்று மன்னர்களால், இன்று நம்மால்!" (பக்.109)


முதலில் உள்ள கூற்று ஒரு பிரிட்டிஷ் அதிகாரி கொல்லப்பட்டதில் - அந்த அதிகாரியே வர்ணாசிரமத்தை எதிர்ப்பது போல் நியாயப்படுத்தும் விதமும், இரண்டாவது கூற்றுப்படி இன்னமும் அது தொடரும் எங்களை உங்களால் ஒன்றும் செய்துவிட முடியாது என்கிற ஆணவம் ஜெயமோகனுக்குப் பொங்கி வழிவதைக் காண முடிகிறது.

கடைசி அத்தியாயத்தில் ஜெயமோகனின் 'பொன்னுலகம்' எப்படி இருக்கும் என்பதைச் சொல்கிறார். 'அறிவியலும் மெய்யியலும் ஒன்றேயான பொன்னுலகம்' (பக்.406) என்று ஒரு பாத்திரம் பேசுகிறது. அது எந்த மெய்யியல்? நமது மெய்யியல் என்பது செயலூக்கம் உள்ள அறிவியல்தானே! ஜெயமோகனின் உட்பொதிந்த மெய்யியல் வேறு என்பதை நான் சொல்ல வேண்டியதில்லையே.

ஆக, ஜெயமோகன் வெள்ளை யானை எனும் நாவலைத் தானாக படைத்துக் கொண்ட ஒரு வேலைநிறுத்தத்தைப் பற்றி எழுதி இருக்கிறார். அதில் திராவிட இயக்கத்தையும், இடது சாரிகளையும் ஓர் இடி இடித்து இருக்கிறார். இவையெல்லாம் அவர் தாழ்த்தப்பட்ட மக்களின் மேல் உள்ள ஓர் அக்கறையினால் எழுதியது அல்ல. தாழ்த்தப்பட்ட மக்களையும் இழிவுப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் அவர் இந்நாவலை எழுதி இருக்கிறார். அவ்விரு இயக்கங்களின் மேல் அவருக்கு உள்ள வெறுப்பால் இந்த நாவல் படைக்கப்பட்டுஇருக்கிறது.ஏற்கெனவேஎண்ணற்ற நூல்களில் பதிவான வரலாற்று விஷயங்களை வெள்ளையானையில் அவர் பாணியில் சுழலவிட்டு இருக்கிறார். இந்நாவலில் புதுமை என்பது அவரின் 'பொன்னுலகம்' மட்டுமே! ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தேநீர்த் தேவதூதன்

புயல் அடித்த இரவில்
மழை ஒழுகும்
கடைசி நிமிடங்கள்
ஊசிகளாய்க் குத்த
வெட்டவெளித் தேகம்
கல்லாய் உறைந்து விறைத்து
தள்ளாடி நடக்க
கருத்த இருள் வானும்
அடங்கிப் போன பூமியும்
சிநேகமற்று ஈர மௌனமாக
சற்றுத் தொலைவில்
தண்டவாளத்தின் அருகில்
மினுக் மினுக் கென சிறு
மின்மினிப் பூச்சியாய்
சிறு விளக்கொன்று இருளைத்
தின்னும்
ஒரு குடிசைக் கடை
ஒரு குவளைத் தேநீர்
ஆவிபறக்கத் தந்தான்
கல்லான தேகம்
மீட்சி கண்டது
சமயங்களில்
தேநீர் செய்வதை
அரசு கூட செய்வதில்லை
வெள்ளைத் தாடி
தேநீர்க்காரன்
தேவதூதன் ஆனான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகமும் தமிழ்மொழியும்



எல்லாஉயிர்களும்மண்,காற்று,நெருப்பு, நீர், வெளி என்ற இயற்கை வெளியில் பிறக்கின்றன; ஆனால் மனித உயிர்கள்மட்டும் கூடுதலாக 'ஊடகம்' என்று மனித சமூகம் உருவாக்கிக் கொண்ட பெருவெளியில் வந்து விழுகின்றன. மனித சமூகத்தை இயக்கும் தொல்பழம் நிறுவனங்களான குடும்பம், மதம், கல்வி, அரசு, நீதி, பொருளாதார அமைப்பு, கலை இலக்கியம் முதலிய அனைத்தையும் ஆட்டிப் படைக்கும் மாபெரும் நிறுவனமாக இன்று 'ஊடகம்' வலை பின்னியுள்ளது. இது மிகவும் "சிக்கலான உயிரோட்டமுள்ள அமைப்பாக" உயர்ந்து நிற்கிறது. மனிதர்கள் கருவிகளை வடிவமைக்கிறார்கள்; அதன் பின்பு கருவிகள் மனிதர்களை வடிவமைக்கின்றன; அதுவும் கணினி, இணையதளம் என்று வந்த பிறகு மனிதர்களைவிட நூறுமடங்கு உயிர்த்துடிப்புள்ள ஒன்றாக ஊடகக் கருவிகள் மனிதர்களின் மேல் வினைபுரிகின்றன. மனிதர்கள் வெறுங் கருவியாக நிற்கிறார்கள்; மனிதர்களின் பார்வை, புரிதல், உணர்தல், மதிப்பிடுதல், சிந்தித்தல், சுவைத்தல், தேர்ந்தெடுத்தல் முதலிய அனைத்தையும் நிர்ணயம் செய்பவைகளாக இந்த ஊடகங்களே விளங்குகின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக மனிதர்களின் மனமெனும் பிரபஞ்ச வெளியைக் கட்டமைக்கும் மனிதர்களின் மா-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் கண்டுபிடிப்பான "மொழியையும்" வடிவமைப்பவைகளாக ஊடகங்களே விளங்குகின்றன. நாம் அன்றாடம் பேசுகிற மொழி நமது தாய், தந்தையர், ஆசிரியர் சொல்லித்தந்த மொழி அல்ல; நம்மைச் சுற்றிக் கிடக்கும் பத்திரிக்கைகள், நம் காதை நிரப்பும் வானொலி, நம் கண், காது வழியாகப் பாயும் தொலைக்காட்சி மற்றும் இணைய தளம் முதலியவைகள் மூலமாக நமக்குள் வந்து சேர்ந்த மொழியைத்தான் பேசித் திரிகிறோம்; ஊடகங்களின் இந்த வலுவான இடத்தைப் புரிந்து கொண்டுதான் அதன் அடிப்படையில் மாலுஹான் மற்றும் கொய்ன்டைன் பையோர் (Maluhan and Quentine Fiore) என்ற இரட்டையர்கள், மானுட சமூக வரலாற்றையே நான்கு காலகட்டமாக வகுத்து ஆராய்கிறார்கள்;

1. பழங்குடியினர் காலகட்டம்

2. எழுத்தறிந்த காலகட்டம்

3. அச்சு இயந்திர காலகட்டம்

4. மின்னணுக் காலகட்டம்

எவ்வாறு காரல் மார்க்சு, சமூகத்தின் அடிக்கட்டுமானமாக விளங்கிய பொருளாதார உற்பத்தி உறவுமுறையில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு ஏற்ப, ஆதிப் பொதுவுடைமைச் சமூகம், அடிமைச் சமூகம், நிலவுடைமைச் சமூகம், முதலாளித்துவச் சமூகம், சோசலிச சமூகம் என மானுட சமூக வரலாற்றை ஐந்து காலகட்டமாகப் பிரித்து விளக்கினாரோ அதுபோலவே தொடர்பு ஊடகங்களில் ஏற்பட்ட மாற்றத்திற்கு ஏற்பவே மனித சமூகம் மாறி வளர்ச்சி அடைந்து வந்துள்ளது என விளக்குகின்றனர் ஊடகவியல் அறிஞர்கள். இந்த அளவிற்கு இன்றியமையாத இந்த ஊடகம், மனிதர்கள் மேல் பல்வேறு விதமாக ஆக்கிரமித்து வினைபுரிந்து கொண்டிருக்கிற சூழலில் தமிழ்மொழியின் மேலும் அது வினைபுரிவது தவிர்க்க முடியாதது; இதை நாம் எப்படி எதிர் கொள்ளுகிறோம் என்பதைக் குறித்துச் சில குறிப்புக்களை முன்வைப்பதுதான் இந்தக் கட்டுரையின் நோக்கம்.

இன்று தமிழ்மொழி என்பது ஓர் உலக மொழியாக மாறி இருக்கிறது. ஏறத்தாழ 120 நாடுகளில் இருந்து தமிழ்ப் பத்திரிக்கைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன; இலண்டன், கனடா, அமெரிக்கா, சீனா, பிரான்சு என்று 17 நாடுகளில் இருந்து தமிழ் வானொலி ஒலிபரப்புகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன; தமிழ்த் தொலைக்காட்சியில் மட்டும் ஏறத்தாழ 100 சேனல்கள் செயல்படுகின்றன. "செய்திகள்" என்று 24மணிநேரமும் நம் மேல் சொற்கள் விழுந்த வண்ணம் இருக்கின்றன. இதற்குமேல் அவரவர் இணைய தளங்கள் தனிப்பட்ட முறையிலும், பொது நிலையிலும் செயல்பட்டு மக்கள் தொடர்பு என்பது தூங்காமல் நிகழ்ந்த வண்ணம் இருக்கிறது; இத்தகைய சூழலில் ஊடகத்தமிழ் என்பது, நமது கல்வி சார்ந்த, நமது நிலம் சார்ந்த, நமது சூழல் சார்ந்த தளத்தில் இருந்து வேறொரு தளத்திற்குத் தாவிச்செல்லும் என்பதுதான் இயற்கையாக இருக்கும். இந்நிலையில் மாறிவரும் சூழலுக்கு ஏற்பத் தமிழை மாற்றி வடிவமைத்துக் கொள்வது, புதிய மொழிக் கூறுகளைக் கடைந்து அவற்றைத் தமிழ் அமைப்பிற்குள் எப்படி இணைப்பது என்பதை நோக்கிய ஆய்வுகளை நாம் மேற்கொள்வதுதான் சரியான அணுகுமுறையாக இருக்குமெனப்படுகிறது. பிடிபடாத பேருருவாக மாறியுள்ள இணையதளக் கருவிகளுக்கு ஏற்ப, மொழியைமாற்றிப்படைத்துக்கொள்வதைநோக்கி நாம் இயங்க வேண்டும். அதுதான் சமூகத்தின் பரிணாம வளர்ச்சிக்கேற்ற ஒன்றாக அமையும்; கருவிகளுக்கு ஏற்ப நாம்தான் மாறிக் கொள்ள வேண்டும். கருவிகளை நம்மால் மாற்ற முடியாது; இதுதான் வரலாற்று விதி. அருந்ததிராய், தனக்குப் புக்கர் பரிசு பெற்றுத்தந்த "சிறு விஷயங்களுக்கான கடவுள்" என்ற ஆங்கில நாவலில், தனது நிலம் சார்ந்த கோட்டயத்து மலையாள மொழிச் சொற்களை ஆங்கிலச் சொற்கள் போலத்



**'ஊடகத்தமிழ்' எனப் பேசும்போது, அத்தமிழ் குறித்த ஆராய்ச்சிகளை நிறைய நிகழ்த்த வேண்டும். தமிழில் அத்தகைய வேலைப்பாடுகள் இன்னும் தொடங்கப்படவே இல்லை என்பதைத்தான் வருத்தத்தோடு பதிவுசெய்ய வேண்டியதிருக்கிறது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாராளமாகப் பயன்படுத்தியுள்ளார். இன்றைக்கு அந்தச் சொற்களை "ஆங்கில அகராதிகள்" ஏற்றுக் கொண்டு அவற்றை ஆங்கிலச் சொற்கள் வரிசையில் சேர்த்துக் கொண்டுள்ளன. நாமின்று 'உலகம் ஒரு கிராமம்' என்று சொல்லத்தக்க நிலையில் இடம் பெயர்ந்து வாழ்தலும் போக்குவரத்துப் பெருகுதலும் நிறைந்த ஒரு காலகட்டத்தில் வாழ்ந்து தீருமாறு நிறுத்தப்பட்டிருக்கிறோம். இந்த 'உண்மையில்' இருந்துதான் நாம் நம் தமிழ் மொழியையும் அணுக வேண்டும்.

ஊடகங்கள் திட்டமிட்டே தமிழ் மொழியை அழிக்கும் வேலையைச் செய்கின்றன. மொழியுணர்வு அறவே அற்ற நிலையில் வணிக நோக்கில் மட்டுமே செயல்படுகின்றன; தமிழ் மொழியின் ஒலி உச்சரிப்பைக்கூட அவை பொருட்படுத்துவதில்லை; மொழி குறித்த அரசின் கண்காணிப்பு அறவே இல்லை; கலப்பு மொழி பேசி அதாவது "தமிங்கிலம்" பேசி ஊடகத்திற்கான தமிழே அல்லாத ஒரு புது மொழியை உருவாக்க முயலுகின்றன-பொதுவாக பெருவாரியான பொதுமக்கள் மொழியை - குறிப்பாகபழமொழி கலந்த மக்களின் நாட்டுப்புற மொழியை வளர்த்தெடுக்க முயற்சி ஏதும் எடுக்காமல், சென்னை போன்ற நகரம் சார் மொழியை,மேட்டுக்குடி மற்றும் உயர் சாதியினர் மொழியை மட்டும் நிலைநிறுத்த முயலுகின்றன. பட்டய கிளப்பு, குஜாலா யாருக்கு, கலக்கப் போவது யாரு? உல்ட்டா, கோல்மால், குட்டீஸ் கிளப், யார் அந்த ஸ்டார்? சூப்பர் சிங்கர், டாப் டென் மூவீஸ், காமெடி டைம், காமெடி கலாட்டா முதலிய கலப்பு மொழிகள் மொழி ஆர்வலர்களைக் கலக்கம் அடையச்செய்கின்றன.ஆனால் உண்மையில் இத்தகைய கலப்புமொழியாடல் நிகழ்த்துவதற்குக் காரணம், மொழியுணர்வு அற்ற ஊடகங்கள் என்று ஒற்றைக் காரணம் காட்டிக் கோபித்துக் கொள்வதில் பொருளில்லை. இதற்குள் பல்வேறு காரணிகள் வினைபுரிகின்றன. அமெரிக்காவில் ஆங்கில மொழி உச்சரிப்புப் போட்டியில் இந்தியாவைப் பூர்வீகமாகக் கொண்ட 'சர்மா' என்ற மாணவர் முதலில் வந்தார் என்ற செய்தியைப் பெருமையாகக் 'கட்டம் கட்டி' வெளியிடும் காலனித்துவ அடிமை மனம் கொண்ட சூழல் அடர்த்தியாகச் சமூக உறுப்பினர் ஒவ்வொருவருக்குள்ளும் ஆழமாக ஊடுருவி உள்ள நிலையில் ஊடக நிறுவனங்களை மட்டும் குறை சொல்ல முடி-யாது.இங்கிலாந்திற்குப் பக்கத்திலேயே இருக்கும் பிரான்சு, ஜெர்மனி போன்ற நாடுகள் தங்கள் மொழி அடையாளத்தில் கவனமாகச் செயல்பட முடிகிறது; எப்படி? அவைகள் வேற்று நாடு-களைச் சார்ந்திருக்க வேண்டிய நிலையைக் கடந்து சுதந்திரமாக வாழக்கூடிய (அ) அரசியல் நிகழ்த்தக்கூடிய பலத்தோடு விளங்குகின்றன. அத்தகைய சூழல் இந்தியாவில் நிலவுகிறதா? விடுதலையான வாழ்வுதான் விடுதலையான மொழி அடையாளத்தையும் பெற்றுத்தரும். ஆட்சிமொழியாக, வழக்காடுமன்ற மொழியாக, கல்வி நிறுவனங்களின் பயிற்று மொழியாக, ஆராய்ச்சிக்கான மொழியாக இன்னும் ஆங்கில மொழியையே பயன்படுத்தி கொண்டிருக்கும்போது, ஊடகத்தமிழ் மட்டும் தூய்மையான தமிழாக எப்படித் தன்னை வளர்த்துக் கொள்ள முடியும்?

ஊடகத்தமிழ் என்னும்போது கண்ணால் மட்டும் காணும் எழுத்துக்களாலான தமிழ் வேறு; வானொலியில் காதால் மட்டும் கேட்கும் தமிழ் வேறு;




தொலைக்காட்சி மற்றும் இணைய தளங்களில் அதே தமிழ்ச் சொற்கள்தான் பயன்படுத்தப்படுகின்றன என்றாலும் அந்தத் தமிழும் அதன் வாசிப்புத் தளமும் வேறு வேறு; இந்த வேறுபாடுகளைக் கண்டுணர்ந்து நாம் இன்றைய தமிழ்மொழியின் புதிய பரிமாணங்களை விளக்கி இருக்கிறோமா? அப்படிப்பட்ட நூல்கள் நூற்றுக்கணக்காக வெளிவர வேண்டாமா? வேறுவேறான ஊடகங்களின் வழியாக வெளிவரும் மொழி, வேறுவேறான புலன்களைக் கூர்மைப்படுத்து கின்றன. வேறுவேறான அறியும் பழக்கங்களை, வாசிப்பு முறைகளை ஊக்கப்படுத்துகின்றன. இவற்றைக் குறித்தெல்லாம் ஆய்வு நூல்கள் வெளிவரத்தானே வேண்டும். மரபார்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுக்கலைமூலமாகவந்தஎழுத்து ஊடகம்மனித உடலின் விரிவாக்கத்தில் வளர்ந்தது; ஆனால் இன்றைய மின்னணு ஊடகங்கள், மனிதர்களின் நரம்பு மண்டலங்களின் விரிவாக்கத்தில் வளர்ச்சி காணுகின்றன. எனவே மிக வேகமாகவும் உடனுக்குடனும் இவற்றின் மொழிக்குறியீடுகள் ஒலி, ஒளி, கோணம், காலமிச்சம், பொருள் மிச்சம் முதலிய பலவற்றின் துணையோடும்மனிதர்களின் புலன் உலகுக்குள் ஆற்றலோடுபாய்கின்றன.ஊடக மொழியின் இந்தத் தன்மைகள் குறித்துத் தமிழ்மொழியின் மின்னணு ஊடகங்களை முன்வைத்து நாம் ஆய்வுகளை நிகழ்த்தி இருக்கிறோமா? இப்படிப்பட்ட பல்வேறு ஆய்வுகளை நிகழ்த்தும் போதுதான் இந்த மாபெரும் நீர்ச்சுழிக்குள் மாட்டி மாய்ந்துபோகாமல், நம்மொழிக்கான ஓர் இடத்தைக் கண்டெடுத்துக் காப்பாற்றிக்கொள்ள முடியும். இத்தகைய ஊடகம் குறித்த ஆய்வுகள் இல்லாத நிலையில்தான் 'வெற்றுப் புலம்பல்கள்' மேலெழுந்து நிற்கின்றன. புதிய ஊடகங்கள் புதிய மொழியைக் கொண்டு வருகின்றன. மொழி மட்டுமே ஊடகமாக இருந்த காலம்போய், ஊடகமே மொழியாகிவிட்ட காலத்தில் வாழ்கிறோம்.

**ஊடகங்கள் திட்டமிட்டே தமிழ் மொழியை அழிக்கும் வேலையைச் செய்கின்றன. மொழியுணர்வு அறவே அற்ற நிலையில் வணிக நோக்கில் மட்டுமே செயல்படுகின்றன**

இந்தப் புதிய மொழிக்கான இலக்கணத்தை வகுத்து வரையறைப்படுத்துவதென்பது எந்த மொழியிலும் இன்றுவரை இயலாத ஒன்றாகவே இருக்கிறது. ஆனால் அதை நோக்கிய ஒரு முயற்சிதான் மொழியைக் காப்பாற்றி, அம்மொழி பேசும் மக்களையும் குறிப்பிட்ட சமூக மதிப்பீட்டிற்குள் நிறுத்தி வைக்கத் துணைபோகும். எனவே 'ஊடகத்தமிழ்' எனப் பேசும்போது, அத்தமிழ் குறித்த ஆராய்ச்சிகளை நிறைய நிகழ்த்த வேண்டும். தமிழில் அத்தகைய வேலைப்பாடுகள் இன்னும் தொடங்கப்படவே இல்லை என்பதைத்தான் வருத்தத்தோடு பதிவுசெய்ய வேண்டியதிருக்கிறது.

நாளிதழ்கள் என்று எடுத்துக் கொண்டால் ஒவ்வொரு இதழுக்கும் ஒவ்வொரு மொழி இருக்கிறது; ஒரு நாளிதழே வட்டாரம் சார்ந்து வெவ்வேறு மொழியைப் பயன்படுத்துகிறது. வார இதழ்கள், மாத இதழ்கள், இலக்கிய இதழ்கள், மதம் சார் இதழ்கள், சாதி சார் இதழ்கள், சோதிடம், பக்திசார் இதழ்கள், அரசியல் இதழ்கள், திரைப்பட இதழ்கள், சிறுவர் இதழ்கள், பெண்களுக்கான இதழ்கள், ஆராய்ச்சி இதழ்கள், மருத்துவ இதழ்கள் முதலிய ஒவ்வொரு இதழிலும் வேறுவேறு தமிழ்மொழி இயங்குவதை ஒருவர் எளிதாகக் கண்டு கொள்ளலாம்.2 இதுபோலவே தொலைக்காட்சி, வானொலிகளிலும் சிறுவர்களுக்கான நிகழ்ச்சி, பெண்களுக்கான நிகழ்ச்சி, பட்டிமன்ற நிகழ்ச்சி, சமையல் குறிப்பு நிகழ்ச்சி, சிரிப்பு நிகழ்ச்சி முதலிய பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பப் பல்வேறு வகையான தமிழ்மொழி முன்எப்போதும் இல்லாத அளவிற்கு ஆற்றலோடு மட்டுமல்ல, படித்தவர் படிக்காதவர்; கிராமத்தார் நகரத்தார்; ஏழை பணக்காரர்; உயர்சாதிக்காரர் தாழ்ந்த சாதிக்காரர்; என்கிற சமூக வேறுபாடுகள் அனைத்தையும் கடந்து குறுகிய காலத்தில் மிகமிக விரைவான முறையில் ஐம்பெரும் புலன்களின் ஊடே மனத்தில் போய்ச் சேருகின்றன. இப்படி நிகழ்ச்சிகளுக்குத் தகுந்தவாறு, ஊடகக் கருவிகளுக்குத் தகுந்தவாறு வேறுபடும் ஊடக மொழி குறித்தெல்லாம் ஆய்வுகள் வந்த வண்ணம் இருக்கும் போதுதான் ஊடகமொழி என்ற புதிய மொழி மூலம் தமிழ்மொழியைப் புதுப்பித்து நிலைநிறுத்திக் கொள்ள முடியும். இத்தகைய முயற்சிகளை முன்னெடுப்பதில் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை நிறுவனங்களும், மொழியியல் அறிஞர்களும், தமிழ் ஊடக ஆய்வாளர்களும் விரைவாகச் செயல்பட வேண்டும். புதிய ஊடகத் தமிழ்மொழிக்கான புதிய இலக்கணத்தை வடிவமைக்க வேண்டும்.

பிற் குறிப்பு

1. இன்றும் யூடியூப், பேஸ்புக், மைக்ரோ சாஃப்ட், கூகுள், விக்கிபீடியா, பிபிசி, எம்.எஸ்.என், யாஹூ முதலிய இணைய தளங்கள் அனைத்தும் அமெரிக்காவை, ஐரோப்பியாவைச் சார்ந்தவையாகவே இருக்கின்றன; சீனா மட்டும் இந்த ஆதிக்கத்தின் விளைவை உணர்ந்துதனக்கான இணைய தளங்களை வடிவமைத்துள்ளது. நாம் சார்ந்து வாழவே பழகிவிட்டோம். இத்தகைய முயற்சிகளைக் குறித்து இன்னும் எண்ணிக்கூடப் பார்க்கவில்லை.

2. இந்தியாவில் நாளிதழ்களை வாசிப்பவர்கள் சுமார் 20கோடி வாசகர்கள். தொலைக்காட்சியைப் பார்ப்பவர்கள் சுமார் 40கோடி பார்வையாளர்கள். வானொலி நேயர்கள் சுமார் 70கோடி. புதிதான இணையதளத்தின் ஊடகப் பயனாளிகள் சுமார் ஒரு கோடி. ஊடகங்கள்தாம் இன்றைய வேதங்கள் என்பதை உணர்ந்து செயல்பட்டு மொழியைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேஜர் அப்பா



"வாப்பா.... வாப்பா அப்பளத்துக்கு ஒண்ணுமில்லை வாப்பா"

மேஜர் அப்பா சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு, "டேள் இர்பான் பழைய நோட்டு வச்சிருந்தாஎடுத்துட்டு வா" என்றார் மேஜர் அமீர்சாகிப் மகள் ஸல்மாவின் மகன் இர்பானைப் பார்த்துச் சொன்னார். இர்பான் வீட்டுக்குள் ஓடிச் சென்று பழைய நோட்டை எடுத்து வந்தான். மேஜர் கத்திரியை வைத்து வட்டவட்டமாக வெட்டிப்போட்டார். எல்லா பிள்ளைகளும் ஆச்சரியத்துடன் பார்த்துவிட்டு, "அப்பளம்.... அள்ய்யா அப்பளம்" என்று குதூகலித்தன.

தாஹிர், கபூர், செள்யது மீரா, ஹமீமா, கரீம், சகீனா, ஜமால் என மேஜர் அமீர் கமாலின் சகோதர சகோதரிகளின் பேரன்களும் பேத்திகளும் அவரைச் சுற்றி இருந்தார்கள். மேஜர் வாப்பா மலேசியாவிலிருந்து பேரப்பிள்ளைகள் விளையாடுவதெற்கென கொண்டு வந்த கிச்சன் செட் சாமான்களை வைத்து சோறு

பொங்கிக் கொண்டிருந்தார்கள். தாஹிரும், கபூரும் எல்லா மரங்களிலும் உள்ள இலைகளை பறித்து வந்து கீரை வெட்டிக் கொண்டிருந்தார்கள். சிறிதாக காள்த்திருந்த சுண்டைக்காள்கள் கத்தரியாக மாறின. தூதுவளை பழங்கள் தக்காளிகளாக வெட்டப்பட்டுக் கொண்டிருந்தன. சைவ சாப்பாடு தயாராகிக் கொண்டிருந்தது. பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வேலையில் மும்முரமாக இருந்தார்கள். மேஜர் அப்பாதான் எல்லா வித சமையலுக்கும், உதவியாளரும் மேஸ்திரியுமாவார். எல்லோரும் சமைக்கும் எல்லா உணவுகளையும் முதன்முதலில் அவர் உதடுகளை அசைத்து சாப்பிட்டு "ருசியா இருக்கே" என்று சொல்வார். அப்படி ஒரு சோறு பொங்கும் விளையாட்டும் அத்தோடு அவர் மலேசியாவிலிருந்து கொண்டு வந்திருக்கும் வெளிநாட்டு சாக்லேட்டுகள் மிட்டாய்களின் விருந்தும் நடக்கும். மேஜர் அப்பா கமால், மலேசியாவிலிருந்து வந்து மூன்று நாட்கள் ஆகிவிட்டது. அப்பா வந்துவிட்டார் என்ற செய்தி கேட்டுவிட்டால் போதும், பேரக்குழந்தைகள் அனைவரும் ஒன்று கூடி விடுவார்கள். பிறகென்ன குழந்தைகளுக்கு கொண்டாட்டமும் கும்மாளமும் தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வாப்பா... வாப்பா.. யாரோ வந்திருக்கா"

ஏறிட்டார் மேஜர் அப்பா. ஊர் ஜமாத்துக்காரர்கள் வந்திருந்தார்கள் எப்போது வெளிநாட்டில் இருந்து வந்தாலும் முதல் நாள் சுபுஹ் தொழுகையில் ஜமாத்காரர்களையும், முஹல்லா வாசிகளையும் சந்தித்து ஊர் நிலவரம் குறித்தும், ஊருக்கு செய்யவேண்டிய அடிப்படைக் காரியங்கள் குறித்தும் கேட்டறிவார். அவர்தான் உளூ செய்ய அவுல் ஏற்படுத்திக் கொடுத்தார். பள்ளிவாசலைப் புதுப்பித்தலிலும் அவர் பங்கு கணிசமானது. தற்சமயம் மூட்டு வலியால் பள்ளிவாசலுக்கு தொழவரவில்லை என்பதை அறிந்து தான் ஜமாத்தினர் வந்திருந்தார்கள்.

"அஸ்லாமு அலைக்கும் மேஜர் சாப்" என்றார் ஜலீல் ஹாஜியார். "வ அலைக்கும் ஸலாம் வாங்க.. வாங்க நான்தான் வந்து பார்க்கணுனுமுனு நினைச்சேன். கொஞ்சம் மூட்டுக்கால் வலி. அதான் வரமுடியல.. வேற ஒண்ணுமில்லை"

"சேச்சே.. அப்படியெல்லாம் சொல்லாதீங்க. உங்கள நாங்க வந்து பாக்குறது தான் முறை. அதுசரி இப்ப வலி எப்படி இருக்கு" "பரவாயில்ல. வந்து மூணு நாள் ஆச்சு. மூட்டுவலிக்கு ஆப்பரேஷன் பண்ணலாம்னு வந்தா, உங்க இதயம் பலவீனமாயிருக்கு. அதுக்கும் சேர்த்துத்தான் பார்க்கணும்னு டாக்டர் சொல்லிட்டார். நீங்க சொல்லுங்க ஜலீல் ஹாஜியார்... என் இதயம் என்ன அவ்வளவு மோசமா?" என்று சொல்லிவிட்டு வாய்விட்டுச் சிரித்தார். யாரும் பேசவோ, சிரிக்கவோயில்லை. மீண்டும் அவரே பேச்சைத் தொடர்ந்தார். "என் மருமவன் அந்த செக்கப் இந்த செக்கப்னு அழைச்சிட்டுப் போயிட்டான். டாக்டர்கள் உடனே ஆப்ரேஷன் பண்ணணும்னு சொல்றாங்க. நான் தான் இந்த பிள்ளைகளோடு ஒரு வாரம் கொஞ்சம் ஜாலியா இருந்துட்டு பண்ணிக்கிடலாம்னு சொல்லிட்டேன். அதுசரி இந்த வருஷமும் ஹஜரத் செய்யது அலாவுதீன் கந்தூரியை நல்லமுறையில் கொண்டாடுங்க. எப்போதும் விடுமுறையில கந்தூரிக்கு வருபவன், இந்த வருசம் வரமுடியுமான்னு தெரியல"

"கந்தூரிய நல்லபடியா நடித்திடுவோம் மேஜர் சாப் இப்ப சின்ன பிள்ளைகளெல்லாம் தர்காவை இடிக்கணும். கந்தூரிய நடத்தக்கூடாதுன்னு அது இதுன்னு சொல்லிகிட்டு திரியுதுக. நம்ம ஊர்ல அப்படி ஒண்ணும் வராது. உங்க பேரச் சொல்லி நல்லபடியா நடக்கும்" "என் பேரை சொல்லிண்டு சொல்லாதீங்க அல்லா பேரைச் சொல்லி நடக்கட்டும். ஏம்பா சல்மா, என் ஹேண்ட் பாக்ல ஒரு மஞ்சள் பை இருக்கு எடுத்துட்டு வா" என்றார். மஞ்சள் பையில் ஒரு பேப்பர் கட்டு டொய்ன் வைத்துக் கட்டப்பட்டு இருந்தது. "ஹாஜியார் இதுல ரூ.30000/ இருக்கு எப்போதும் போல ஏழை எளியதுக்கு நல்லபடியா கந்தூரி சோறு ஆக்கிப் போடுங்க. மேற்கொண்டு செலவானாலும் என் மகளிடம் வாங்கிக்கோங்க"

மகள் டீயை குவளைகளில் கொண்டு வந்து கொடுத்தார். டேய் மலேசியா தேயிலை குடிச்சுப்பாரு. டேஸ்ட் எப்படியிருக்கும் தெரியுமா அதற்குள் சல்மாவின் மூன்று வயது மகள் சகீனா ஒரு சிறு தட்டில் சிறிது மண்ணும் தண்ணியும் வைத்துக் கொண்டு "வாப்பா பாவாசம்.. பாவாசம்.. குடிங்கோ" என்றது.

"அப்படியா... பாயாசமா அழகா இருக்குல்ல... குட்டி" என்று சொல்லி சிறிய தட்டை வாங்கி வாய்க்கு முன்னால் வைத்து சாப்பிடுவது போல நடித்தார். "நல்லா ருசியா இருக்கு" என்றார். "குட்டி அப்பால்லாம்

> **வந்து மூணு நாள் ஆச்சு. மூட்டுவலிக்கு ஆப்பரேஷன் பண்ணலாம்னு வந்தா, உங்க இதயம் பலவீனமாயிருக்கு. அதுக்கும் சேர்த்துத்தான் பார்க்கணும்னு டாக்டர் சொல்லிட்டார். நீங்க சொல்லுங்க ஜலீல் ஹாஜியார்... என் இதயம் என்ன அவ்வளவு மோசமா?"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்திருக்காங்க. அவங்களுக்கும் கொடு"

மாட்டேன் என்று சொல்லிக் கொண்டே ஓடிப்போனது குட்டி.

"மேஜர் சாப் எங்களுக்கு டீயை கொடுத்திட்டு உங்களுக்கு பாயாசமா..."

"அப்படி சொல்றீங்களா... கொஞ்சம் இருங்க சைவ சாப்பாடு தயாராகிட்டு இருக்கு" என்று சொல்லிவிட்டு வாய்விட்டு சிரித்தார்.

"இது தான் மேஜர் சாப் சிரிப்பு" என்றார் ஜலீல் ஷாஜியார். "எல்லாம் சரி உடம்பு நல்லபடியா பார்த்துக்கோங்க எப்போதும் நீங்க வந்து தான் நேர்ச்சை தட்ட எடுத்துக் கொடுக்கணும். ஏதாவது உதவின்னா சொல்லுங்க. நாங்க வாரோம்" என்று சொல்லி விட்டு கிளம்பினார்கள்.

அமீர்கமால் பிறக்கும் போது செல்வச் செழிப்பில் திளைத்தார். தங்க வளையல்களில் இணைத்துக் கட்டப்பட்ட நான்கு மோதிரங்கள் ஒவ்வொரு கைகளிலும் தவழ தவழ்ந்து கொண்டிருப்பார். அதே போல் கழுத்திலும் இரண்டு மூன்று டாலர் வச்ச செயின்கள் கிடக்கும். மூத்த மகனான அமீர்கமால் பிறந்தவுடன் தான், யோகம் அடித்ததாக அவர் வாப்பாவுக்கு எண்ணம். அமீரின் அப்பாவிற்கு பர்மாவில் பலசரக்கு கடையும், சீமை எண்ணெய் ஏஜென்சியும் ஓகோவென்று ஓடின. அங்கேயே சொந்த வீடும் தோட்டமும் வாங்கியிருந்தார்.



இரண்டாம் உலக யுத்தத்தின்போது தெற்காசிய நாடுகளை கபளீகரம் செய்த ஜப்பான், பர்மாவை விழுங்கிக் கொண்டது. பிடித்துக்கொண்டது மட்டுமில்லாமல், உடனடியாக பர்மாவைவிட்டு வெளியேற இந்தியர்களை நிர்பந்தித்தது. பிள்ளைகளும் மனைவியும் இந்தியாவில். சொத்தும் வருமானமும் பர்மாவில். பிள்ளைகளே பெரிதென்று கிளம்பி கால்நடையாக வந்து சேர்ந்தார். அதன்பிறகு அவருக்கு மனச்சோர்வு ஏற்பட்டு இனிமேல் தான் எதற்கும் பயன்படாதவன் என்று எண்ணியபடியே மனைவியையும் ஆறு குழந்தைகளையும் விட்டுவிட்டு மூன்று ஆண்டுகளில் கண்ணை மூடிக்கொண்டார். அமீரின் அம்மாவோ படிப்பறிவில்லாத உலகம் தெரியாத பெண். எதற்கும் வீட்டை விட்டு கீழிறங்காத ஜாதி. கணவனின் சொத்துக்களை மீட்க வழி தெரியாத சூழ்நிலையில், ஆறு குழந்தைகளையும் வளர்க்க முடியாமல் திணறினார்.

சின்ன வயதிலேயே அமீரின் தலையில் அத்தனை பொறுப்புக்களும் ஏறி உட்கார்ந்து கொண்டது. படிப்பை விட்டுவிட்டு கூலிவேலைக்கும் ஹோட்டல் வேலைக்கும் சென்றான். திடீரென அவன் வேலை பார்த்த ஹோட்டலுக்குச் சாப்பிட வந்த இராமநாதபுரத்துக்காரர் அவன் அழகிய உருவத்தையும் வாட்டசாட்டமான உடலையும் கண்டு பாஸ்போட்டு இல்லாமலேயே மலேசியாவிற்கு அழைத்துச் சென்றுவிட்டார்.

அம்மாவையும் தம்பி தங்கைளையும் விட்டு விட்டு வெளிநாட்டுக்குப்போகிறோமே என்ற தவிப்புக்கு மத்தியில் அவர்களை வாழ வைக்க வேண்டுமென்ற உறுதி அவனை நிலை கொள்ளச் செய்தது. வெளிநாட்டிலிருந்து அவன் அனுப்பி வைக்கும் பணமே வீட்டுச் செலவிற்கு தம்பி தங்கைகளின் படிப்புக்கும் செலவாகியது. ஐந்தாண்டுக்கு ஒரு முறை ஊருக்கு வர முடிவு செய்து கொண்டு, அதன்படியே ஊருக்கு வந்து கொண்டிருந்தார்.

பத்தாண்டுகளில் அவனது 6 அடி உயரமும், எடுப்பான உரமிக்க உடலும், அவனை மருமகனாக்கி கொள்ள உள்ளூர் பெருந்தனக்காரர்களின் ஆசையாக உருவெடுத்தது. அவன் மசியவில்லை. தங்கைகளின் திருமணத்திற்குப் பின்பே தனக்கு திருமணம் என முடிவெடுத்தான். மூன்று தங்கைகளுக்கும் திருமணம் முடித்துக் கொடுத்தபோது அவனுக்கு முப்பது வயது ஆகிவிட்டிருந்தது.

அதற்குள் அவன் வாழ்க்கையில் பல படிகள் ஏறியிருந்தான். ஹோட்டல் உதவியாளராக இருந்து, சர்வராகி, அரசு உயர் அதிகாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவியினால் அரசாங்க எடுபடி வேலைக்குப் போனான். அங்கே மலேயா மொழியையும் கற்றுக் கொண்டான். திடீரென 1952ல் ஏற்பட்ட உள்நாட்டு கலவரம் அவன் அரசாங்கத்தின் ஆதரவாளராக ராணுவத்தில் சேர்ந்து துப்பாக்கி தூக்க வேண்டியது வந்தது. அந்தச் சூழ்நிலையிலும் தீரமாக அவன் செயல்பட்டதால் ராணுவ அதிகாரிகளின் நம்பிக்கைக்குரியவனாகி படிப்படியாக உயர்ந்து மேஜரானான். சம்பளமும் சலுகைகளும் அவன் எதிர்பார்த்ததை விட அதிகமாயிற்று. தம்பிகளையும் படிக்க வைத்து ஆளாக்கி பதவிகளில் அமர வைத்தான்.

மலேசியப் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் இந்திய விஜயத்தின்போது அவரின் பாதுகாவல்படை தளபதியாக, மலேசிய நாட்டின் ராணுவ உடையில் அவருடன் விமானத்தில் இருந்து இறங்கியதைப் பார்த்தபின்பு, அவரது செல்வாக்கு அவரது கிராமத்தையும் சுற்றியுள்ள ஊர்களையும் வியந்து பேச வைத்தது. அதன்பிறகு அமீர்கமால், மேஜர் அப்பா என ஆகிப்போனார்.

எதையும் எதிர்பாராது, தூரத்து சொந்தத்தில் திருமணம் செய்து கொண்டதும், மனைவியை மலேசியாவிற்கு தன்னுடன் அழைத்துச் சென்றதை ஊரே வியந்துபார்த்தது. ஒவ்வொரு வருடமும் ஊருக்கு வரும்போது ஏழைகளுக்கும் ஜமாத்தார்களுக்கும் அள்ளி அள்ளி கொடுத்தார். ஆனாலும் அவர் சாதாரணமாகவே இருப்பார்.

"வாப்பா... வாப்பா... தக்கரை வாப்பாவும், கமாலும் வந்துட்டாங்க" ஓடி வந்து சொன்னாள் அவன் மகள் வயிற்றுப் பேத்தி, பேரன் கமாலை கட்டிப்பிடித்து முத்தினார். "ஏய் உங்க வாப்பாவ எங்கல"

"பின்னாலே வாராங்கோ" என்றவன் "அய்ய்யா.. சோறு பொங்கி விளையாட்டா நானும் வாரேன்" என்று பிள்ளைகளுடன் சேர்ந்து கொண்டான் சிறுவன் கமால்.

20 வருடங்களுக்கு முன்பு தம்பி தங்கைகளின் பிள்ளைகளுடன் விளையாடிய இதே விளையாட்டுதான். இப்போதும் அவர் ஒரு மகிழ்ச்சியின் குறியீடு. எந்தப் பிள்ளையும் அவருக்கு உற்சாகமான தோழர்கள் தான். குழந்தையாகவே மாறிவிடும் அவருடன் விளையாட எந்தக்குழந்தைக்கும் பிடிக்கும். யாரையும் குறித்து எப்போதும் கேலியும் நகைச்சுவையும் இழையோடும். அதிலிருந்து மகள், மருமகள், மருமகன் என்று யாரும் தப்ப முடியாது. ஆனால் எதுவும் மனதில் தங்காது. கல்மிஷம் என்பது அவர் அகராதியில் இல்லாத வார்த்தையும் கூட.

மணி ஒன்று ஆகியிருந்தது. "எல்லோரும் சாப்பிட போவோமா" என்றார் குழந்தைகளிடம். பிள்ளைகள் அனைவரும் அவரைச்சுற்றிச் சாப்பிட உட்கார்ந்தார்கள்.

சாப்பிட்டுக் கொண்டிருந்த இர்பான் அவர் காதை பார்த்தவுடன் ஒரு கேள்வி கேட்டான் "வாப்பா... உங்க காதுல எப்படி ஓட்டை விழுந்திச்சி?"

"அதா... அது ஒரு பெரிய கதை"

"வாப்பா... வாப்பா... கதையா... அதச் சொல்லுங்க வாப்பா" சுற்றியிருந்த குழந்தைகளும் நச்சரித்தன. "சரி சொல்றேன் சாப்பிடுங்க முதல்ல"

"டேய் அப்பாவ தொந்தரவு பண்ணாதீங்கடா" என்று மெயின் ஹாலில் இருந்து குரல் கொடுத்தார் மருமகன் தக்கூரைபீர் முகம்மது. மேஜரின் இரண்டாவது மகளின் கணவர்.

"ஆமா இவரு பெரிய யோக்கியம்... சின்ன புள்ளைல இவரு ஊர்ல இருந்து வந்தவுடன் எங்கிட்ட வந்து "மாமா... மாமா

"

**திடீரென 1952ல் ஏற்பட்ட உள்நாட்டு கலவரம் அவன் அரசாங்கத்தின் ஆதரவாளராக ராணுவத்தில் சேர்ந்து துப்பாக்கி தூக்க வேண்டியது வந்தது. அந்தச் சூழ்நிலையிலும் தீரமாக அவன் செயல்பட்டதால் ராணுவ அதிகாரிகளின் நம்பிக்கைக்குரியவனாகி படிப்படியாக உயர்ந்து மேஜரானான்.**

"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாரியானை அம்பாரி யானைன்னு என்னை நச்சரிப்பே... நான் உன்ன தூக்கி முதுகில் வச்சிகிட்டு நடுஹாலிலிருந்து புறவாசல் வரைக்கும் அஞ்சாறு தடவை நடக்கணும். அதுகப்புறம் தான் கீழே இறங்குவ. இப்ப பெரிய மனுசன். புள்ளயள பேச வந்துட்டாரு..."

தக்கரை மாமா ஒன்றும் பேசாமல் மௌனமாய் புன்னகைத்தபடியே நகர்ந்தார். ஜெரின் மகள் வந்து "காஜா மாமா வந்திருக்காங்க" என்றார். காஜாவும் மேஜரும் சிறுவயதிலிருந்தே நெருங்கிய நண்பர்கள். காஜாவுக்கு ஐந்து வயது குறைவாக இருந்தாலும் அப்படி ஒரு நெருக்கம்.

எப்போது ஊருக்கு வந்தாலும் அவரது ஏற்பாட்டில் ஒரு திருமணமாவது நடக்கும். இந்தத் தடவை தனது நண்பனின் மகளை, தனது தங்கை மகனுக்கு திருமணம் செய்து வைக்க முடிவு செய்தார். நண்பர் காஜா பணமில்லையே என்று தயங்கியபோது தானே ஏற்பாடு செய்துவிட்டதாய் சொன்னார். காஜாவுக்கு என்ன சொல்ல என்று தெரியாமல் கண்களில் நீர் கசிய வாயைப் பொத்திக் கொண்டு அழுதார்.

"டேய்... டேய் ஏண்டா பொம்பள மாதிரி அழுவுற. என்ன நடந்தாலும் ஆம்பள அழக்கூடாது. ஆக வேண்டியதப் பாரு. நானும் பார்க்கிறேன். நாளைக்கு நாம பேசிக்கிடுவோம். உன் பெஞ்சாதிய பார்த்து பேசி முடிவு பண்ணு" காஜா கனத்த இதயத்துடன் ஆனந்த கண்ணீருடன் அவர் வீட்டுக்கு புறப்பட்டார்.

அடர்ந்து செழித்த மரங்களின் நடுவில், வட்டப்பாறைகளைச் சுற்றி சலசலத்தபடி ஓடும் தாமிரபரணி நதியின் அருகிலேயே தோட்டம் ஒன்று வாங்கியிருந்தார். ஓய்வு பெற்ற பின்பு, விவசாய வேலைகள் செய்ய வேண்டுமென்று ஆசையும் கொண்டிருந்தார்.

எப்போது வந்தாலும் தோட்டத்தில் வைத்து தனது நண்பர்கள், ஊர் ஜமாத்தார்கள் எல்லோரையும் அழைத்து பிரியாணி போடச் சொல்லி விடுவார். அனைவரும் பிரியாணி தயாராக தாமிரபரணி ஆற்றில் ஆசை தீர குளிப்பார்கள். வயிறு நிறைய பசியுடன் பிரியாணியை எல்லோரும் வெட்டுவார்கள். எல்லோருக்கும் தன் கைப்பட பரிமாறுவார். அனைவரும் சாப்பிட்ட பிறகுதான் அவரும் வீட்டுக்காரர்களும் சாப்பிடுவார்கள்.

அதற்குள் கேலியும் பழைய நகைச்சுவை சம்பவங்களும் வானை பிளக்கும். மேஜர் அமீரின் கேலி, மருமகன் என்றும் மகள் என்றும் பாராமல் எல்லோர் மீதும் பாயும். யாரும் அவரின் கேலியைப் பொறுத்து கூச்சப்படவோ வருத்தப்படவோ மாட்டார்கள். அனைவரும் வாழ்க்கையின் வெறுமைகளை விட்டுத் தொலைத்தபடி மகிழ்ச்சியில் நனைந்தபடி வீடு திரும்புவார்கள். அந்த நாட்களில் பேசவும் சிரிக்கவும் பலதரப்பட்ட கதைகள் எப்போதும் ரெடியா இருக்கும். புதிதாக ஏற்படும் நல்ல சம்பவங்களும் நகைச்சுவைகளும் அடுத்த பிரியாணி தர்பாரில் பிரமாதப்படும்.

பெரியவர்கள் எல்லோரும் குளிக்கப்போனார்கள். மேஜர் அப்பாவும் குழந்தைகளும் மட்டும் தோட்டத்தில் இருந்தார்கள். அப்பா தாளம் தட்டி எல்லோரையும் அமர வைத்தார்.

"காது ஓட்டையான கதை கேட்டீங்களா... சொல்றேன் கேளுங்கள்" என்று ஆரம்பித்தார் மேஜர். "இந்தியாவுக்கு 1947ல் சுதந்திரம் கிடைச்ச மாதிரி மலேயா 1952ல் சுதந்திரம் அடைந்தது. அப்போது தான் நான் இராணுவத்தில் சேர்ந்திருந்தேன். மலேயாவின் பல பகுதிகளில் சீனர்களின் தொந்தரவு இருந்தது. ஈப்போவின் காடுகளில் ஒரு போராட்ட குழுவை ஒடுக்க எங்களுக்கு உத்தரவு கொடுத்தார்கள். பயங்கரமான காடு எங்கும் கமைபடந்த பெரியமரங்கள். பகல் முழுவதும் நாங்கள் தேடினோம். யாரும் தெரியவில்லை. இரவில் அங்கேயே தங்க முடிவு செய்தார்கள். அதன்படி தங்கினோம். திடீரென ஒரு மணிக்கு எங்களை நோக்கி குண்டு மழை பொழிந்தது ஒளிந்து கொள்ள வழியில்லை. எப்படியாவது அவர்களைப் பிடிக்க வேண்டும். என்னையும் இன்னொருவரையும் ஒரு பர்லாங் தூரத்திற்கு தனியே போகச் சொல்லி அங்கிருந்து சுடச் சொன்னார்கள்.

நாங்கள் தைரியமாகப் போய் அங்கிருந்து சுட்டோம். போராட்டக்காரர்கள் எங்களது இராணுவப்படை அங்கிருப்பதாக நினைத்து எங்களை நோக்கிச் சுட்டார்கள் பல குண்டுகள் எங்களைச் சுற்றிலும் பறந்தன. போராட்டக்குழு எங்களை நெருங்கியபடியே நின்று கொண்டு சுட்டார்கள். அப்போது ஒரு குண்டுதான் என் வலது காதில் நுழைந்து சென்றது. இரத்தம் வழிய வழிய காலை வரை நாங்கள் போக்கு காட்டிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> இந்தத் தடவை தனது நண்பனின் மகளை, தனது தங்கை மகனுக்கு திருமணம் செய்து வைக்க முடிவு செய்தார். நண்பர் காஜா பணமில்லையே என்று தயங்கியபோது தானே ஏற்பாடு செய்துவிட்டதாய் சொன்னார். காஜாவுக்கு என்ன சொல்ல என்று தெரியாமல் கண்களில் நீர் கசிய வாயைப் பொத்திக் கொண்டு அழுதார்.

கொண்டே இருந்தோம். அவர்களும் எங்களை நோக்கி சுட்டபடியே இருந்தார்கள். எங்களது மற்ற படையினர் அதிகாலையில் போராட்டக்குழுவினரை சுற்றி வளைத்து ஒட்டுமொத்தமாக சிறை பிடித்தனர். அன்று அவர்கள் மட்டும் பிடிபடாமல் இருந்திருந்தால் நாங்கள் சல்லடையாக துளைக்கப்பட்டிருப்போம்.

அதன்பிறகு எங்கள் இருவருக்கும் பதவி உயர்வு கொடுக்கப்பட்டது. இது தான் அப்பாவின் காது ஓட்டையான கதை. அடர்ந்த தோட்டத்திற்குள் இருந்து அப்பா சொல்லி கதை அவ்வளவு குழந்தைகளையும் அலற வைத்தது. இவ்வளவு தீரமான மேஜர் அப்பாவோடா நாம் கேலி பேசி விளையாடிக் கொண்டிருக்கிறோம் எனப் பெரிய குழந்தைகள் ஆச்சரியப்பட்டார்கள்.

அதற்குள் பிரியாணி தயாராகிக் கொண்டு இருந்தது. மேஜர் அப்பா பிள்ளைகளுக்கு முதலில் கொடுங்கள் என்று சொன்னார். பிள்ளைகள் வட்டமாய் இருந்து சாப்பிட்டார்கள். பின்பு குளித்துவிட்டு வந்தவர்களும் உண்டு மகிழ்ந்தார்கள்.

மேஜர் அப்பா உடல்நிலையை அனுசரித்து அன்று சாப்பிடவில்லை. ஆனால் குழந்தைகள் சாப்பிடச் சொல்ல வற்புறுத்தியபோது, நீங்கள் செய்யும் பிரியாணியை சாப்பிடுகிறேன் என்று சமாளித்தார்.

மறுநாள் காலையில் குளித்துவிட்டு சிவந்த காதுகளுடன், வெள்ளை உடையுடன் முன் முற்றத்தில் அமர்ந்திருந்தார் மேஜர். குட்டி மாஸ்டர்கள் பிரியாணி செய்யத் தயாரானார்கள்.

பிரியாணி இலை பறிக்கிறேன் என்று ஈச்சங்குருத்துக்களை பிரித்தார்கள். கயிறு தொங்கவிடப்பட்டு ஆட்டுத்தோலை உரித்து காற்றில் கறி வெட்டினார்கள். இரு தட்டுக்களை ஆட்டியபடியே அரிசியை களைந்தார்கள். பிரியாணி அடுப்பில் ஏறியது.

அப்பா திடீரென காமில் மாமாவை அழைத்தார். காதில் ஏதோ சொன்னார். அப்பாவிற்கு முகமெல்லாம் வேர்த்திருந்தது. "பிள்ளைகளே பிரியாணி தயார் செய்யுங்கள் சாப்பிட வந்து விடுகிறேன்" என்று சொல்லியபடியே காரில் ஏறிப்போனார்.

எல்லா பிள்ளைகளும் பிரியாணி செய்து முடித்திருந்தார்கள். மாலை வரை மேஜர் அப்பாவை எதிர்பார்த்தார்கள். அப்பா வரவில்லை. பிரியாணி தட்டுக்கள் அப்படியே இருந்தன. இரவிலும் அப்பாவை எதிர்பார்த்து நெடுநேரம் தூங்காமலிருந்த படியே தூங்கிப் போனார்கள்.

மறுநாள் காலையிலும் பிள்ளைகள் எழுந்திருந்து எல்லோரிடமும் மேஜர் அப்பா ஏன் வரவில்லை என்று கேட்டார்கள் யாரும் பதில் சொல்லவில்லை. வேறு வழியின்றி அப்பாவை எதிர்பார்த்தபடியே பின்முற்றத்தில் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

மாலை 5 மணியளவில் ஆம்புலன்ஸ் வேனில் இருந்து குளிர்பதனப் பெட்டியை இறக்கி கமால் மாமாவும், நண்பர் காஜாவும், முத்தவல்லியும் ஊர்க்காரர்களுமாக பத்திரமாக நடுக்கூடத்தில் வைத்தார்கள். யாரும் எதுவும் பேசிக்கொள்ளாமல் அமைதியாக நின்றிருந்தார்கள். அப்பாவின் பேத்தி சகீனா பின் முற்றத்தில் நின்று கொண்டு தனது மழலை மாறாத குரலில் விளையாடிக் கொண்டிருந்த பிள்ளைகளை அழைத்தாள்.

"எல்லோரும் பாக்க ஓடிவாங்கோ. ஓடி வாங்கோ. நடுஹால்ல பெரிய மீன் தொட்டிக்குள்ள மேஜர் அப்பா தூங்கிக்கிட்டு இருக்காங்கோ...."

■




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலவசத் திட்டங்கள் யாருக்காக?!

அரசியல் கட்சிகளின் தேர்தல் அறிக்கையில், வாக்காளர்களைக் கவர்வதற்காக, இலவசமாக, டிவி, கிரைண்டர், மிக்சி, மின்விசிறி உள்ளிட்ட பொருட்கள் வழங்கப்படுவதாகக் கூறி, இதற்கு தடை விதிக்கும்படி, உச்சநீதி மன்றத்தில், பொதுநல வழக்கு ஒன்று போடப்பட்டது. இதை விசாரித்த உச்சநீதி மன்றம், "தற்போதுள்ள சட்டத்தின்படி, தேர்தல் அறிக்கைகளில் இலவசங்களை அறிவிப்பது, லஞ்சம் கொடுப்பதற்கு சமமாகாது' எனக்கூறி, வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டது.

தற்போது தமிழக அரசால் பள்ளிக் கல்வித்துறை வழியாக, மதியஉணவு, சீருடை, புத்தகம், குறிப்பேடுகள், புத்தகப்பை, பேருந்துப் பயணச் சீட்டு, மடிக்கணினி முதலான பதினான்கு பொருள்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இது ஒருவகையில் நம் ஏழைக்குழந்தைகளுக்கான கல்வியைத் தூண்டக்கூடியதுதான். இதன் நல்விளைவு இன்னும் பத்தாண்டுகளில் வெளிப்படக்கூடும் என்றாலும், இலவசங்களின் சமூக விளைவு என்ன? யாருக்குக் கொடுக்கப்படுகிறது என்பதிலும், இந்த இலவசங்கள் யாருக்குப் பயன்படுகிறது என்பதும் மிகவும் முக்கியம்.

காமராசர், ஏழைக்





குழந்தைகளுக்கு மதியஉணவு தந்தால் பள்ளிக்கூடத்திற்கு வருவார்கள் என்று பள்ளிக் குழந்தைகளுக்கான இலவச மதியஉணவுத் திட்டத்தை *1956*இல் கொண்டுவந்தார். இரண்டே ஆண்டுகளில் பள்ளிமாணவர் எண்ணிக்கை ஐந்து லட்சத்திலிருந்து பத்துலட்சமானது. ("வரலாற்றுச் சுவடுகள்" ரு தினத்தந்தி ரு பக்கம்422)

எம்.ஜி.ஆர். இரண்டாவது முறையாகத் தமிழ்நாட்டு முதலமைச்சரான போது காமராசரின் மதியஉணவுத் திட்டத்தை விரிவுபடுத்தி, "சத்துணவுத் திட்டம்" எனும் பெயரோடு *01.07.1982* முதல் செயல்படுத்தினார். அப்போது, "என் மகனுக்கு நீ என்ன சோறு போடுவது? என் கைகளுக்கு வேலை கொடு, என் பிள்ளை வயிற்றுக்கு நான் சோறுபோட்டுக் கொள்வேன்" என்று எழுந்த வீரவசனங்கள், கொஞ்சம் கொஞ்சமாக, "எல்லாருக்கும்தான் போடுறார், அப்பறம் என்பிள்ளைக்கு மட்டும் வேணாம்னா சொல்ல முடியும்?" என முணகலாய முடிந்தது. எதிர்க்கட்சிகள் வாயடைத்தன.

பள்ளிக்குழந்தைகளுக்குச் சோறுபோடுவது இலவசத்தில் சேருமா என்னும் கேள்வி முக்கியமானது. தன் குழந்தைக்குச் சோறு போட வசதியில்லாத அப்பன்கள் இருக்கும் நாட்டில் சத்துணவைக் குறைசொல்ல முடியாதுதான். என் கேள்வி, தன் பிள்ளைக்குச் சோறு போட முடியாத தந்தைகளை உருவாக்கியது

இலவசத் திட்டங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சமூகம் தானே? கொசுவை ஒழிக்க மருந்தடிப்பது இலவசமாகவே இருந்தாலும், கொசு உற்பத்தியாகும் சாக்கடையை ஒழிக்க எந்த முயற்சியும் எடுக்காமல், கொசுமருந்து அடித்ததற்கு நன்றி சொல்வதுமட்டும் சரியா? என்பதே என்கேள்வி.

ஒருவர் சத்துணவு இலவசம் என்று அறிவித்தால், அடுத்துவருபவர், அதை விடமுடியாத சமூக (அரசியல்?) சூழலைப் புரிந்துகொண்டு, அதோடு முட்டை இலவசம் என்கிறார், அடுத்தடுத்த ஆட்சிகளில் வாழைப்பழம், பயறுகள், வாரம் இரண்டு முட்டை என்று இலவசங்கள் வரிசைகட்டுகின்றன. கடைசியில் புலிவாலைப் பிடித்த கதையாக முடிவே இல்லாத தொடர்கதைகளாகின்றன.

இலவசம் என்பதென்ன?

வாங்கும் சக்தி குறைந்த மக்கள் இலவசத்தை வரவேற்கிறார்கள். அந்த மக்களின் வாங்கும் சக்தியை அதிகப் படுத்தத் திட்டமிடுவதுதானே சரியான மக்களுக்கான பொருளியல் சிந்தனையாக இருக்க முடியும்? அதைத் திட்டமிடுபவர் தானே மக்களை உண்மையாக நேசிக்கும் தலைவராக முடியும்? அதற்கான தொலைநோக்குத் திட்டங்களைத் தராமல், இலவசமாகவே எல்லாவற்றையும் தந்து மக்களையும் சிந்திக்கவிடாத அரசியல், சுயநல அரசியல் அல்லவா?

இலவசங்களிலேயே பெரிய கொடுமை இலவச தொலைகாட்சிதான்! இந்த குப்பை பெட்டியால் யாருக்காவது எள்ளளவிலாவது நன்மை கிடைத்திருக்குமா? சுமங்கலி கேபிள் மூலம் மாதசந்தா மற்றும் தொலைகாட்சி விளம்பர வருவாயினால் சன் தொலைகாட்சியினர் அடைந்த லாபமே இந்த இலவசத்தினால் பெற்ற பயன்.. இதுதான் என்னைப் பொருத்தவரை மிக (குறுக்கு) புத்திசாலித்தனமான விஞ்ஞான ஊழல்! (நன்றி "எளியவை" வலைப்பக்கம் திரு.பந்து)

ஒன்று வாங்கினால் ஒன்று இலவசம் (ஐம்பது விழுக்காடு தள்ளுபடி), என்னும் வணிக நோக்கங்களைப் புரிந்துகொள்ளும் மக்கள் இந்த இலவசங்களைப் புரிந்து கொள்ளாமலா இருப்பார்கள்? ஆனால், தற்காலிகப் பெருமூச்சுக்கு வேறு வழி? அல்லது சுயமரியாதை இயக்கங்கள் வளர்த்த சுய அவமரியாதை என்றும் கூறலாம். (இதில் பெரியாரைக் குற்றஞ்சொல்லத் தேவையில்லை, அவர் இதை ஏற்கமாட்டார்)

ஏழை விவசாயிகளுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரம், இடுபொருள் மானியம், விவசாயக்கடன் ரத்து பற்றியெல்லாம் தனியாக எழுத வேண்டும். பாதிக்கும் மேல், இவையெல்லாம் பணக்கார விவசாயிகளுக்கு அல்லது விவசாயத்திற்கே தொடர்பில்லாத பணக்காரர்களுக்குத்தான் பயன்படுகின்றது.

இலவசக் கண்ணொளித்திட்டம், இலவச சைக்கிள்ரிக்ஷாத்திட்டம் கொண்டுவந்த கலைஞரின் காலத்தில்தான் தமிழகத்தில் மீண்டும் மதுவிலக்கு ரத்தாகி அரசு கள்ளுக்கடைகளும், சாராயக் கடைகளும் (நம்பர் கடைகள்) அறிமுகமாயின. இவர்தான் பின்னர் வீட்டுக்கு வீடு தொலைக்காட்சிப் பெட்டிகளை இலவசமாக வழங்கினார். எந்தக் காசிலிருந்து எது? கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்!

காமராசர் காலத்திலிருந்து இலவசமாக இருந்த கல்வி, சத்துணவு தந்த எம்.ஜி.ஆர். காலத்தில்தான் ஸ்ரீ ஆங்கிலவழியில் வளர்ந்து வணிகமயமானது. அதுவரை அங்கொன்றும் இங்கொன்றுமாயிருந்த ஆங்கிலவழிப் பள்ளிகள் புற்றீசல்போல் கிடுகிடுவென்று வந்ததும் 1978க்குப் பிறகுதான். கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்.

கலைஞரின் சாராயத்தை "ஒழித்து", டாஸ்மாக் கடைகளை அரசே ஏற்று நடத்த உத்தரவிட்ட ஜெயலலிதாதான் வீடுகளுக்குப் பயன்படும் மிக்சி, கிரைண்டர், மின்விசிறி, மற்றும் மாணவர்களுக்கான அனைத்தும் இலவசம் என "சிறப்புத் துறை" ஒதுக்கி, இலவசத்தை மக்கள் மயமாக்கினார். இவர் "இலவசம்" என்னும் சொல்லை ஒழித்து(?) அவற்றை "விலையில்லாப் பொருள்" என்று புதியநாமகரணம் சூட்டியதும் நடந்தது, இக்காலத்தில்தான் பல்லாயிரம் கோடியில் மது விற்பனையும் "வளர்ந்தது!"

வள்ளல்களின் வள்ளல் தன்மைக்குப் பின்னால் ஒரு வஞ்சகம் இருக்கும். அது வெளிப்பார்வைக்குப் புரியாது. தான் திருடிச் சேர்த்த அல்லது பரம்பரையாகத் தன்குடும்பம் திருடிச் சேர்த்த சொத்தில்தான் வள்ளல்களின் வள்ளல்தனம் வளரும். அதுவும் பின்னால் அந்தப் பிச்சைக்காரர்களிடம் எதையாவது எதிர்பார்த்துத் தான்.. எதிர்பார்ப்பே இல்லாத வள்ளல் யாரும் கிடையாது. இருந்தால் அந்த ஏழ்மையை உலகிலிருந்தே இல்லாமல் ஒழிக்க அல்லவா பாடுபட வேண்டும்?

"வறுமை ஒழிப்புத் திட்டம்" போடும்





டில்லிக்காரர்களின் "கரீபி உறட்டாவோ" முழக்கத்திற்கு வயது ஐம்பதுக்குமேல்! "வறுமைஒழிப்பு" சேவை செய்வதன் ஒரு பகுதிதான் இலவசத்திட்டங்கள்.

"ரத்தம் குடித்தவர்களே ரத்ததான முகாம் நடத்துவது போல" என்பார் கவிஞர் சகாரா.

வீட்டிற்குத் தேவையான எல்லாம் இலவசமாகத் தரப்படும் நம் நாட்டில், நல்ல கல்வியும், நல்ல மருத்துவமும் தானே ஏழைகளுக்கு எட்டாக் கனியாகிவிட்டது? இதற்கு மாற்று யோசனை என்னவெனில், மற்ற எல்லாம் இலவசமாகத் தரப்பட வேண்டிய அவசியமே இருக்காது, கல்வியும் மருத்துவமும் இலவசமாகிவிட்டால்.

எல்.கே.ஜி.க்கே ஏராளம் செலவு செய்யும் தகப்பனைத் தவறு சொல்ல முடியாது, அவனது பாசமும், தன் குழந்தையின் எதிர்காலம் பற்றிய கவலையும் அப்படிச் செயல்படுகிறது. நல்ல கல்வி நல்ல பள்ளி நல்ல கல்லூரி நல்ல செலவு! என அவனது சமூகம் அவனுக்குக் கற்றுத்தந்திருக்கிறது, சுயநலமாகச் சிந்திக்கிறான்.

9ஆம் வகுப்பிலேயே நாமக்கல் "பிராய்லர்" பள்ளிக் கூடத்தில் சேர்த்துவிட்டால் பின்னால் மருத்துவமோ, பொறியியலோ நிச்சயம் என்று நம்புகிறார்கள்! மோசமான பள்ளியில் படித்து, மதிப்பெண் குறைந்து பின்னால் பொறியியலுக்கு இருபதுலட்சம், அல்லது மருத்துவத்திற்கு ஐம்பது லட்சம் செலவு பண்ணுவதைவிட இப்போதே ஒன்பதாம் வகுப்பிலிருந்து 12ஆம் வகுப்புவரை வருடத்திற்கு 2லட்சம் செலவுஎன்பது குறைவுதானே? இதில் என்ன தவறு என்னும் சிந்தனை சர்வசாதாரணமாகிவிட்டது. இதைப் புரிந்துகொண்ட கல்வி வள்ளல்கள் ஏதோ சொர்க்கத்தின் திறவுகோலை அவனிடம் தருவதற்கான ஏற்பாடு போல அறிவுக் கண்ணைத் திறந்துவிடும் அவசரத்தில், பண்பையும், அன்பையும், மனஅமைதியையும் அந்தக் குழந்தையிடமிருந்து வழித்தெடுத்து, குழந்தையையும் வறுத்தெடுத்து அனுப்பிவிடுகிறார்கள்!

ஓர் ஏழைக் குழந்தை, பள்ளியில் படிக்கும்போது "அவ்வளவும் இலவசம்" பள்ளிப்படிப்பை முடிக்கும் பன்னிரண்டாம் வகுப்பு வரை பெற்றோர்க்கு எந்தச் செலவும் வைக்காமல் முடித்துவிடக் கூடிய தமிழகத்தில், மேற்படிப்புக்கு ஏன் படாத பாடு படவேண்டியிருக்கிறது?! கல்விக் கடன் கிடைக்கும் என்று கடனை உடனை வாங்கிச் சேர்க்க சுமார் 50,000 முதல் 5லட்சம் வரை புரட்ட முடிந்தவர்களின் பிள்ளைகள்தான் இப்போதும் உயர்கல்வியை எட்ட முடிகிறது! (கல்விக்கடனுக்கு அவர்கள் அலையும் அலைச்சல், அதனால் ஏற்படும் மன உளைச்சல் தனி!)

பள்ளிப் படிப்புவரை எல்லாம் இலவசம் என்பதே, "உயர்கல்வி வள்ளல்"களுக்கு நம்பிள்ளைகளைப் பிடித்துத்தரும் பின்வாசல் உதவிதானோ? என்று தோன்றுகிறது! அல்லது, "அவ்வளவும் இலவசமாக் குடுத்தாச்சு, இதுக்கே உன் பரம்பரையே நன்றியோட இருக்கணும், இதுக்கு மேல உன்னால முடிஞ்சா, காசு இருந்தா மேல படிச்சு அதிகாரியாப் போ(அதுதான் இருக்காதுன்னு தெரியுமே?) இல்லாட்டி இத்தோட நிறுத்தி பியூனாப் போய்க்கோ, பேராசை பெருநஷ்டம்பா!" என்று அசரீரி கேட்கிறதே!

இன்றைய முதலாளித்துவ வர்க்க அரசியலின் மறைமுக ஏற்பாடுதான் இது! உடல் உழைப்புத் தொழிலாளி வேணுமில்ல? அதுக்கு ரொம்பப் படிச்சா சரிவருமா? இலவசமாக் கிடைச்சா யானையக்கூட வாங்கிக்க ஆளு இருக்கும்போது வேறென்ன?

கல்வி, மருத்துவம் இரண்டை மட்டும் இலவசமாகத் தருவதுதான் நல்ல அரசின் கடமை, அதை விடுத்து, இவற்றைமட்டும் ஏழைகளுக்கு எட்டாக்கனியாக்கி மற்ற அனைத்தும் இலவசமாகத் தருவோம் என்பது மக்களை முட்டாளாக்கவே!

நம் பாவப்பட்ட மக்கள் அன்றாட வாழ்க்கைச் சிக்கல்களிலிருந்து விடுபடவே இந்த நாசகரச் சூழ்ச்சியில் விழுகிறார்கள். எனினும் அரசியல்வாதிகளுக்கு இல்லாத தொலைநோக்கம் மக்களுக்கு வந்தாக வேண்டும். இல்லையேல், இன்னும் பல பத்தாண்டுகளுக்கு நரகம்தான், இலவச இணைப்பாக அடிமையெனும் அவமானமும். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கடவுள்

கடவுள் எப்போதும் தனியாக வருவதில்லை
ஏதாவது ஒரு விலங்கோடு
அன்றி பறவையோடு
ஆயுதங்கள் அவர்கள் முதுகில் அல்லது தோளில்

பெரும்பாலான கடவுள்கள்
அரக்கரத்தம் குடித்திருக்கின்றன
பூக்கள் வாசத்தையும் மீறி
புலால் வாசம்

கடவுள் கண்ணீர் விட்டதில்லை
பசி என்று அடுப்படியில்
தீனி தேடியதில்லை
விடலைக் கோளாறில்
விசில் அடித்த கடவுள் இல்லை

கடவுள் யுகத்தில் கில்லி இல்லையா
கடவுள் தோட்டத்தில்
பட்டாம்பூச்சி கிடையாதா?
கடவுள் முங்கு நீச்சல் அடித்த
வரலாறில்லை புராணமுமில்லை
கிராபிக்ஸில்கூட உண்டாக்கலாம்
நம் கடவுள்களை.

கடவுள் கவிதை எழுதியிருக்கிறது
கடவுள் பெண்ணின் இதழ் குடித்திருக்கிறது
கடவுள் புடவை திருடி
சடையை இழுத்து சில்மிசித்திருக்கிறது.
காதல் கடிதம் எழுதிய
கடவுள் எங்காவது உண்டா?

வாய்விட்டுச் சிரித்த கடவுளை
எங்கேனும் பார்த்ததுண்டா நீங்கள்

நமக்கான கடவுள்கள்
நமமோடு சாப்பிட வேண்டும்
நம் விழியோரக் கண்ணீரை
ஒத்தி எடுக்க வேண்டும் கைக்குட்டையால்

ஒரு கிழவனின் தடிக்காம்பிலும்
ஒரு மழைக்கால குடைக்காம்பிலும்
அவன் இருக்க வேண்டும்
நமக்கானவன் இல்லை என்றால்
நமக்கான கடவுள் இல்லை அவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஜி நஜ்ருல் இஸ்லாமின் ஏழு காதல்



வங்கக்கவி நஜ்ருல் தம் இளம் வயதிலேயே கவியாக, பாடகராக, பத்திரிகைகளில் அனல் பறக்கும் தேச பக்திக் கட்டுரைகளை எழுதுபவராகப் பிரபலமாகிவிட்டார். அவருடைய படைப்புகள் மக்களுக்கு உணர்ச்சியூட்டின. அந்தக் காலத்தில் அலிஅக்பர் கான் என்ற இளைஞர் அவருக்குப் பரிச்சயமானார். அலிஅக்பர் சிறுவர்களுக்கான பாடப்புத்தகங்களும் பாடல்களும் எழுதி வெளியிட்டு வந்தார். நஜ்ருலின் கவித்திறனைத் தம் தொழிலுக்குப் பயன்படுத்திக் கொள்ளத் திட்டமிட்டு அவரைத் தம் கிராமமான தௌலத்பூருக்குக் கூட்டிச் சென்றார். நஜ்ருலுக்கு அலிஅக்பரின் இரகசியத் திட்டம் தெரியாது.1921ஆம் ஆண்டில் சில மாதங்கள் அவர் தௌலத்பூரில் தங்கியிருந்தார்.

அப்போது அலிஅக்பரின் அண்ணன் மகள் சயீதாவுக்குத் திருமண வயது. அவள் நல்ல அழகி. அவளை நஜ்ருலுக்குத் திருமணம் செய்துவைத்துவிட்டால்அவரைத்தௌலத்பூரிலேதங்கச்செய்துவிடலாம் என்று திட்டமிட்ட அலிஅக்பர் திருமணத்துக்கு ஏற்பாடு செய்துவிட்டார். திருமண அழைப்பிதழ்கள் கொல்கத்தாவிலிருந்த நஜ்ருலின் குடும்பத்தாருக்கும் நண்பர்களுக்கும் அனுப்பப்பட்டு விட்டன.

முஸ்லீம் திருமணங்களில் மாப்பிள்ளை வீட்டார் மணப்பெண்ணுக்குப் புதுப் பெயரிடுவார்களாம். அதன்படி நஜ்ருல் சயீதாவுக்கு 'நர்கிஸ்' என்று பெயரிட்டார்.

1921ஆம் ஆண்டு ஜூன் மாதத்தின் பிற்பகுதியில் ஒருநாள் திருமண நாளாகக் குறிக்கப்பட்டது. அதற்கு முதல்நாள் திருமண ஒப்பந்தம் எழுதப்பட வேண்டிய நேரத்தில் நஜ்ருல் மேடையிலமர்ந்ததும் ஒப்பந்தம் வாசிக்கப்பட்டது. அதில் இருந்த ஒரு நிபந்தனை நஜ்ருல் திருமணத்துக்குப் பின்னும் மனைவியின் வீட்டிலேயே வசிக்க வேண்டும் என்பதுதான். ஆனால் அவர் இந்த நிபந்தனைக்கு உட்பட விரும்பவில்லை. அவர் அலிஅக்பரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்துக்குத் தெரியாமல் அன்றிரவே அந்த வீட்டைவிட்டு வெளியேறி இருளில் பலமைல்கள் தன் நண்பர் ஒருவருடன் நடந்து குமில்லா என்ற நகரத்துக்குப் போய்ச் சேர்ந்தார். அதன்பின் அவர் நர்கீஸைச் சந்திக்கவில்லை.

இந்த நிகழ்ச்சிக்கு சுமார் பதினாறு ஆண்டுகளுக்குப் பிறகு நர்கிஸ், நஜ்ருலைக் குறைசொல்லி ஒரு கடிதம் எழுதினார். அதுவரை நர்கிஸ் திருமணம் செய்து கொள்ளவில்லை.

நான் எழுதுவது அவ்வளவும் உண்மை. என்னை நம்பு. மற்றவர்களின் பேச்சிலிருந்து நீ என்னைக் கற்பனை செய்து கொண்டால், என்னைத் தவறாகப் புரிந்து கொள்வாய்.

அந்தக் கடிதத்துக்குப் பதிலாக நஜ்ருல் நர்கிஸுக்கு எழுதிய ஒரே கடிதம் இது:

106. மேல சித்பூர் சாலை,

கிராமபோன் ஒத்திகை அறை

கொல்கத்தா

1.7.1937

சௌபாக்கியவதிக்கு,

உன் கடிதம் கிடைத்தது. புது மழைமேகங்களால் நனைந்த காலை நேரத்தில் அன்று மேகங்கள் சூழ்ந்து மென்மையாக இருந்த வானத்திலிருந்து மழை பெய்து கொண்டிருந்தது. உனக்குநினைவிருக்கலாம்-பதினைந்து ஆண்டுகள் முன்பு இதுபோல ஓர் ஆஷாட (தமிழில் ஆனி) மாதத்தில் பெருமழை பொழிந்தது. ஆஷாட மாதத்து மேகக்கூட்டத்துக்கு என் சிரந்தாழ்ந்த வணக்கம். இந்த மேகந்தான் காளிதாசன் காலத்தில் விரகதாபங்கொண்ட யட்சனின் தூதனாக ரேவா நதியையும் மாளவிகாவின் நாட்டையும் கடந்து அவனது காதலியிடம் சென்றது. இந்த மேகக்கூட்டத்தின் வாழ்த்தொலி என் வாழ்வில் எல்லையற்ற வேதனையைக் கொணர்ந்து சேர்க்கிறது. இந்த ஆஷாட மாதம் என்னைக் கற்பனையின் சுவர்க்கத்திலிருந்து இழுத்து வந்து துன்ப வெள்ளத்தில் தள்ளி விடுகிறது.

போகட்டும், இப்போது உன் குற்றச்சாட்டுக்குப் பதில் அளிக்கிறேன்.

நான் எழுதுவது அவ்வளவும் உண்மை. என்னை நம்பு. மற்றவர்களின் பேச்சிலிருந்து நீ என்னைக் கற்பனை செய்து கொண்டால், என்னைத் தவறாகப் புரிந்து கொள்வாய்.

நான் உள்ளத்திறந்து சொல்கிறேன் - எனக்கு உன்மேல் வெறுப்பு இல்லை. உன் காரணமாக என் உள்ளத்தில் எவ்வளவு ஆழமான புண், எவ்வளவு எல்லை கடந்த வேதனை என்பது என்னுள்ளே உறையும் தெய்வத்துக்கே தெரியும். அந்த வேதனை நெருப்பில் நான் தான் பொசுங்குகிறேன். அதைக் கொண்டு உன்னைச்சுட நான் என்றுமே விரும்பியதில்லை. நீ எனக்கு இந்த வேதனைத் தீயை அளித்திராவிட்டால் என்னால் அக்கினி வீணையை1 இசைத்திருக்க முடியாது, வியப்பின் உருவகமான தூம சேது2 வாய் உதித்திருக்க முடியாது. என் இளம் வயதில் நான் தரிசித்த உன் மங்கலத்தோற்றம், என் வாழ்க்கையின் முதல் காதலைக் காணிக்கையாகப் பெற்ற உன் உருவம் இன்னும் என்னுள்ளத்தில் சுவர்க்கத்தின் பாரிஜாத மலர் போல் மலர்ந்திருக்கிறது. என் வேதனைத் தீயால் அதைத் தீண்ட முடியவில்லை.

நான் கவி என்பதை மறக்காதே. நான் தாக்கினாலும் மலர் கொண்டு தாக்குவேன். அழகற்றதைப் பேணுவது என் தொழிலல்ல. என் தாக்குதல் காட்டுமிராண்டி அல்லது கோழையின் தாக்குதல் போல் ஈவிரக்கமற்றதல்ல. என்னுள்ளத்தில் குடிகொண்ட இறைவனுக்குத் தெரியும். உன்னைப் பற்றி எனக்கு எவ்விதப் புகாருமில்லை, உன்னிடமிருந்து நான் வேண்டுவதும் ஒன்றுமில்லை.

நான் ஒருபோதும் உன்னிடம் எந்த 'தூதனை'யும் அனுப்பவில்லை. நம்மிடையே ஏற்பட்டுள்ள இந்த எல்லையற்ற வேற்றுமையைப் போக்கும் பாலமாக இருக்க மனிதன் என்ன, விரும்பாமலேயே முடியுமா என்பது ஐயமே. என்னை நம்பு. நான் அந்த 'அற்பர்'களின் வார்த்தையை நம்பவில்லை. நம்பியிருந்தால் உனக்கு இந்தக் கடிதம் எழுதியிருக்க மாட்டேன். உன்பால் எனக்கு எந்த அவமரியாதையுமில்லை, உன்மேல் எந்த உரிமையுமில்லை. நான் ஒரு நாயை வியாபாரக்குறியாகக் கொண்ட இசைத்தட்டுக் கம்பெனியில்3 பணிபுரிந்தாலும் உனக்கெதிராக எந்த நாயையும் ஏவிவிடவில்லை. உங்கள் டாக்காவைச் சேர்ந்த சில 'நாய்'கள் ஒரு சமயம் நான் கவனக்குறைவாக இருந்தபோது என்னைத் தாக்கினர். அவர்களைப் பழிவாங்கும் வலிமை எனக்கு இருந்தாலும் நான் அவர்களைப் பழிவாங்கவில்லை.

அந்த நாய்களுக்குப் பயந்துகொண்டு நான் டாக்கா வராமலிருப்பதாக நீ எழுதியிருப்பது கண்டு எனக்குச் சிரிப்புதான் வருகிறது. இளைஞர்கள் என்னை எவ்வளவு நேசிக்கிறார்களென்று உனக்குத் தெரியும். என் வேண்டுகோளுக்காக அவர்கள் அந்த ஈனரை மன்னித்தனர். இல்லாவிடில் அந்த இழிந்தவர்களின் அடையாளங்கூட பூமியில் இருக்காது. உனக்கு என்னை நன்றாகப் புரிந்து கொள்ளும் வாய்ப்பு கிடைக்காததால்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு எழுதியிருக்கிறாய்.

போகட்டும் நீ அழகி; செல்வமும் நற்குணமும் படைத்தவள். உன்னை மனைவியாக அடைய அநேகர் முன்வருவார்கள். நான் அறிந்திருப்பதெல்லாம் உன்னுடைய அன்றைய இளமைத் தோற்றந்தான். அதைத்தான் நான் எல்லையற்ற காதலுடன், அளவற்ற பக்தியுடன் என் இதய பீடத்தில் நிறுவ விரும்பினேன். அன்றைய நீ அந்தப் பீடத்தை ஏற்றுக் கொள்ளவில்லை; கருங்கற்சிலையைப் போல் வேதனையாகிய பீடத்தை ஏற்றுக் கொண்டாய், வாழ்நாள் முழுதும் அந்தப் பீடத்துக்கே பூசனை செய்கிறேன் நான். என்னைப் பொருத்தவரை இன்றைய நீ பொய், பயனற்றவள். ஆகவே இவள் எனக்குத் தேவையில்லை. நான் இன்றைய உன் தோற்றத்தைப் பார்த்து ஏமாந்து போகலாம் அல்லது துன்பமுறலாம், ஆகவே நான் அதை விரும்பாமலிருக்கிறேன்.

மீண்டும் சந்திப்பா? மண்ணுலகில் அது நேராவிட்டால்தான் என்ன? அன்பாகிய மலர் உலகில் வாடி வதங்கி அழகிழந்து விடுகிறது. நீ உண்மையில்என்னைநேசித்தால் அங்கிருந்துகொண்டேஎன்னை அடைவாய். லைலா மஜ்னூவை அடையவில்லைதான்; சிரீன் ஃபர்ஹாதை அடையவில்லைதான். இருந்தாலும் அவர்களைப் போல்எவரும்தங்கள் காதலரை அடையவில்லை. தற்கொலை பெரும் பாவம் என்பது பழைய பேச்சானாலும் மிகவும் உண்மை. ஆத்மா அழிவற்றது, அதை அழிக்க யாராலும் முடியாது. காதலென்னும் மந்திரக்கோல் உனக்குக் கிடைத்திருந்தால் உன்னைவிட அதிருஷ்டசாலி யார்? அதனுடையமாயஜோதியில்உன்னுடையது எல்லாமே ஒளி பெற்றுத் திகழும். துன்பத்தைத் தூக்கிக்கொண்டு ஓர் அறையிலிருந்து இன்னோர் அறைக்குச்செல்வதால் துன்பம் மறைந்துவிடாது. மனிதன் விரும்பினால் தன் முயற்சியால், தவத்தால் துன்பத்தை இன்பமாக மாற்றிக் கொள்ள முடியும். நீ வாழ்க்கையில் ஏதாவது தவறு செய்திருந்தால் அதை இல்வாழ்விலேயே திருத்திவிட்டுச் செல்ல வேண்டும். அதன்பின் உனக்கு ஆனந்தம் கிடைக்கும், விடுதலை கிடைக்கும்; உன் துன்பமெல்லாம் மறையும். நீ உன்னையே உயர்த்திக் கொள்ள முயற்சி செய். இறைவன் உனக்கு உதவி செய்வார். நான் இல்லறம் நடத்துபவன்தான்; இருந்தாலும் உலக வாழ்வின் தடைகளை மீறி மேலுலகத்தை அடைந்துவிட்டேன். அவ்வுலகில் அன்புப் பார்வையில் குற்றங்களுக்குறைகளுங்கூட அழகாகத் தோன்றும்....



பதினைந்து ஆண்டுகளுக்கு முந்தைய நிகழ்ச்சியொன்று திடீரென்று நினைவுக்கு வருகிறது. உனக்கு காய்ச்சல் கண்டிருந்தது. நான் வெகுநேரம் மன்றாடி வேண்டியபின் என் கைகளுக்கு உன் நெற்றியைத் தீண்டும் பாக்கியம் கிடைத்தது. உனது தகிக்கும் நெற்றியின் பரிசத்தை இன்னும் உணர முடிகிறது என்னால். நீ கண் திறந்துப் பார்த்தாயா? என் கண்ணில் நீர், என் கைகளில் உனக்குப் பணிவிடை செய்ய வேண்டுமென்றத் துடிப்பு,என்னுள்ளத்தில் நீநலம் பெற இறைவனிடம் உருக்கமான வேண்டுகோள். இதெல்லாம் நேற்றுதான் நிகழ்ந்தாற்போல் தோன்றுகிறது. காலம் இந்த நினைவை அழிக்க முடியாது.எப்படிப்பட்ட கட்டுக்கடங்காத காதல் வெள்ளம் பெருகியது அன்று! இரவும் பகலும் உறக்கமில்லை எனக்கு...

போகட்டும், இன்று வாழ்க்கையின் இறுதி நேரத்தில், வடியும்வெள்ளம்என்னை இழுத்துச் செல்கிறது. அதிலிருந்து என்னைத் திருப்பும் வலிமை உனக்கு இல்லை. ஆகவே அதற்கு முயலாதே!

நான் எழுதும் இந்தக் கடிதமே உனக்கு எனது இறுதிக் கடிதமாகட்டும். நான் எங்கிருந்தாலும் என் ஆசி உனக்கு கவசமாக இருக்கும். இதை நம்பு. நீ சுகம் பெற வேண்டும், அமைதி பெற வேண்டும் என்பதே என் பிரார்த்தனை. நீ என்னை எவ்வளவு மோசமானவனாகநினைக்கிறாயோ அவ்வளவு மோசமானவன் அல்லன் நான்.

இப்படிக்கு,

உன் நலம் கோரும்

நஜ்ருல் இஸ்லாம்

பின்குறிப்பு: என் 'சக்ரஸாகம்' தொகுப்பின் கவிதைகளைப் படித்திருக்கிறாயா? உன் குற்றச்சாட்டுகளுக்கு என்பதிலை அவற்றில் காணலாம். உன்னுடைய நூலொன்றில் நீ என்னைத் தாக்கியிருந்தாய்.

(1. 'அக்னி வீணா' என்பது நஜ்ருலின் ஒரு கவிதைத் தொகுப்பு

2. நஜ்ருல் 'தூமகேது' என்ற பத்திரிக்கையின் ஆசிரியராக இருந்தார்.

3. நஜ்ருல் எச்.எம்.வி.கம்பெனியின் இசையமைப்பாளராகப் பணிபுரிந்தார்.

நஜ்ருலின் இந்தக் கடிதத்தைப் பெற்றச் சிறிது காலத்துக்குப் பிறகு நர்கிஸ் ஒருவரை மணந்து கொண்டார்.) ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனவரி மாதம்
# 'தமிழ் மரபுத் திங்கள்'



ஜனவரி மாதத்தை தமிழ் மரபுத்திங்களாக அறிவிக்கும் சட்டமூலம் ஒன்ராறியோ சட்டசபையில் 17. 03.2014 அன்று ஏற்றுக் கொள்ளப்பட்டது. கனடாவின் ஒன்ராறியோ சட்டசபையில் 'தமிழ் மரபுத் திங்கள்' மூன்று கட்சிகளாலும் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டதானது கனடியத் தமிழரோடு உலகெங்கும் வாழும் தமிழர்களையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. மாநில அரசொன்று தமிழ் மரபுத் திங்களை அரசுமுறையில் ஏற்றுக்கொண்டது இதுவே முதன் முறையாகும்.

Tamil Heritage Month Act, *2014* எனக் குறிப்பிடப்படும் ஒன்ராறியோ சட்டசபையின் ஙிவீற்றீ *156* எனும் இச் சட்டமானது ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதத்தை ஒன்ராறியோ முழுவதும் தமிழ் மரபுடமை மாதமாக கடைப்பிடிக்க 'Bill 156 - Tamil Heritage Month Act, *2014*' சட்டபூர்வமான அனுமதி தந்துள்ளது.

ஒன்ராறியோவின் எல்லாச்சட்டங் களையும்போலவே இதற்கும் மகாராணியின் நிறைவேற்று ஒப்புதல் கிடைத்ததும் உடனடியாக சட்டம் நடைமுறைக்கு வரும் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இச்சட்டம் அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் ஒன்ராறியோ பிரதமர், எதிர்க்கட்சித்தலைவர், மற்றும் ஏனைய பல உறுப்பினர்களும் சட்டசபையில் பார்வையாளர்களாக வந்து அமர்ந்திருந்த பகுதிக்கு எழுந்து வந்து அங்கு அமர்திருந்த தமிழர் பிரதிநிதிகளுடன் சட்டசபை பாரம்பரியங்களுக்கு அமைய கைகுலுக்கி பெரு மகிழ்ச்சி தெரிவித்தனர்.

■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வாழ்வின் பாதையில்...

சாமானிய மனிதனொருவனின் கதையிலும் அசாதாரண செயல்களும் எதிர்பாரா திருப்பங்களும், வாழ்வியல் கோட்பாடுகளை விளக்கும் தத்துவ நெறிகளும் பரிபூரண அன்பும் நட்பும் உறவும் அமைந்திட சாத்தியங்கள் உண்டென்பதை 'சின்னசாமியின் கதை' காட்டுகிறது.

நம் ஒவ்வொருவர் வாழ்வும் ஒரு சிறந்த சுயசரிதை எழுதுமளவில் இருப்பினும் தன்னை முன்னிலைப்படுத்தாது, நட்பை முன்னிலைப்படுத்தி நண்பனின் இடுக்கண்கள் களைந்திடவும் சமூக மேம்பாட்டுக்கு தன்னாலியன்றதை செய்யத் தயங்காமலும் இப்புதினத்தின் மாதவனும் முருகனும் செயல்படுவதை வாசிக்க வாசிக்க, நம்முள்ளும் உத்வேகம் பிறக்கிறது.

தமிழ் ஆசிரியர் மட்டுமல்ல தமிழர் அனைவருமே பேச்சு மொழியில் பிற மொழிக்கலப்பு வராமல் பேச பிரயாசைப்பட வேண்டியிருக்கிறது தற்காலத்தில்.

கதை துவங்கி இரண்டாம் பக்கத்தில் மாதவனின் மனைவி சுகுணா, "சாமி இருக்கற எடத்தைக் காட்டற வழியும் சாமிதான்" என திருப்பதி மலைக்கான பாதையை தான் வணங்கியதை நியாயப்படுத்திய தருணத்திலிருந்தே வாசிப்பு மெருகேறிற்று எனக்கு.

கதை நெடுக உரையாடல்களில் நிரம்பி வழியும் வட்டார வழக்குகள் வாசகனை கதையின் உயிர்ப்போடு ஒன்றச் செய்வதாயுள்ளன. 'ஒங்க அப்பாரெல்லாம்' என்றபதம் எனது சிறுவயது கிராம வாழ்வையும் பரங்கிப்பேட்டை பஞ்சாயத்து யூனியனின் 60 கிராமங்களிலும் பிரபலமான என் தந்தையாரையும் பல சமயங்களில் பலர் வாயிலாக இந்த மரியாதைக்குரிய பதம் என்னுள் எழுப்பிய கிளர்ச்சியையும் மறு ஆக்கம் செய்வதாய் இருந்தது.

மதுரை வீதியின் அழகில் மயங்கி கோவலன் முதல் நாள் சிலம்பை விற்க மறந்து திரும்பிய கதை கூட உவமையாக்கப்பட்டிருக்கிறது புலமைத் திறத்தால்!

"இந்தப் பதவி என்ற பிசாசு பிடித்துவிட்டால் அன்பு, நேர்மை, நன்றி போன்ற எல்லாம் பறந்து போய் விடுகிறதே!" எனும் மாதவனும் உலகியல் தெளிவில் சற்றும் சளைத்தவனல்ல என்பது தெரிகிறது. சொல்வது போல், புதினம் என்பது கால்பந்து விளையாடுவது போலவே. பெரிய மைதானம் பலப்பல கதாபாத்திரங்கள், சம்பவங்கள்... 'சின்னசாமியின் கதை'யில் மாதவன் நாயகன் ஆவதும் ஒரு முரண் தானோ...! ஆம். இருவருக்குமான குண விசேடங்கள். வாழ்வியல் அணுகுமுறைகள்... அறிவியல்படியும் எதிரெதிர் துருவங்கள் தானே ஒன்றையொன்று ஈர்க்கின்றன!

"உன்னால இல்லடா, நான் எனக்காகத்தான் எப்பவும் பேசுவேன்; எங்கெங்கே எதைப் பேசணுமோ அதைப் பேசுவேன்" என நெத்தியடி அகற்ற அகற்ற வந்து நெருக்கிக் கொள்ளும் பாசிக்குளம் பிரச்சினைகள் தொடரும் வாழ்விற்கான ஒட்டுமொத்த குறியீடாக காட்டியிருப்பது மிக நன்று.

மகனுக்கு சுயமரியாதைத் திருமணத்தை நடத்திய கண்ணுசாமி யாருமறியாமல் பெண் வீட்டாருக்காக பாரம்பரிய முறைப்படியும் மங்கல நாண் அணிவிக்கும் சடங்கை செய்ததை அறிந்த முருகனின் மனக்கிலேசங்கள் வாசிக்கும் நம்மையும் உறுத்தவே செய்கின்றன.

சின்னசாமிக்கு கடைசி வரை மாதவனும் முருகனும் தோள்கொடுத்து தாங்குவது நட்பின் உன்னதம்! அக்கறை கொண்ட நண்பர்களைத் தவறாகப் புரிந்துகொண்டு வேதனையுற்ற அவன் இறுதியில் தெளிந்து நெகிழ்வது நிறைவைத் தருகிறது.

சுயசரிதையைவிட நம் வாழ்வின் கடந்து வந்த பாதையில் மனம் கவர்ந்தவற்றை பல புதினங்களாக்குவது மேல் என்று எண்ணச் செய்கிறது நூற்பொழிவு.

*(சின்னசாமியின் கதை - வளவ.துரையன்; வெளியீடு: அனன்யா, 18/37 ஞ. ஏ.ஒய்.நகர், புதுக்கோட்டை சாலை, தஞ்சாவூர் பக் 234, விலை ரூ.200/-)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிரும் புதிரும்

விரைந்து செல்லும் மேகங்கள்
சிறுத்தையை துரத்தும் முயல்களாய்,
அந்தரத்தில் பறக்கும் பனை மரங்களாய்,
வேடனைத் துரத்தும் அணில் கூட்டங்களாய்,
தெரிகிறது ஒரு குழந்தைக்கு.

குழந்தையின் தகப்பனுக்கோ
வில் ஏந்திய ராமனாக
தொட்டிலில் தவழும் குழந்தை ஏசுவாக
பள்ளி வாசல் கோபுரங்களாகத் தெரிகிறது.
ஆனால், தாத்தாவிற்கு மட்டும்தான்
தெரிகிறது மேகங்களாய்

நிறங்கள்
அந்த ஓவியனின்
தற்காலிக இளைப்பாறலில்
நிறங்களை மாற்றி
வேண்டுமளவு பூசிக்கொள்கிறது
பூர்த்தியடைய இருக்கும்
அவனுடைய ஒவியம்.

அலுப்பூட்டும் நீலத்தைத் துறந்து
சிகப்பை பூசிக்கொள்கிறது கடல்..
மரங்களும் ஒரு மாறுதலுக்காக
நீலத்தைப் பூசிக்கொள்கிறது.
மரத்தில் இருக்கும் வெள்ளைப் புறாக்கள்
கருப்பு நிறத்திற்கும்
சிற்றோடைகள் ஊதா நிறத்திற்கும்
மாறியது.

துயில் கலைந்த ஓவியன்
தூரிகையைத் தேட
அது வேகமாக தன்னுள்ளில் தோய்ந்த
அனைத்து நிறங்களையும் உதிர்த்து
தலை விரி கோலமாக
ஓவியன் முன்னே நின்றது
அடைக்கலம் தேடி வந்த
அபலைப் பெண் போல..

ஓவியனின் கைகளைப்
பிடித்துக்கொண்டு
இப்போது தூரிகை வரைகிறது
ஒரு பெண்ணின் ஓவியத்தை
எந்த நிறச்சாயலும் கலக்காமலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மடல் திறப்பு

மார்ச் 2014, 'காக்கைச் சிறகினிலே' இதழ் வாசித்தேன். ராஜீவ் கொலையில் தூக்குத் தண்டனை பெற்ற முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய மூவரும், கே.ஆர்.நாராயணன், குடியரசுத் தலைவராக இருந்த காலக்கட்டத்திலேயே மரணத்தின் விளிம்பிற்குச் சென்றவர்கள் என்பதும், விஜய் தொலைக்காட்சியில் நடந்த ஒரு விவாதத்தில், திருச்சி வேலுச்சாமி பேசியதன் அடிப்படையில், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் சுதாங்கனும் மற்றவர்களும் எடுத்த உடனடி முயற்சியின் காரணமாகவே அன்று அவர்கள் தூக்கிலிருந்து தப்பினர் என்பதும், 'மிச்சமிருக்கிறது வழக்கு' கட்டுரையில் இரா.எட்வின் தரும் அதிர்ச்சி செய்தியாக உள்ளது. இன்று நடை பெறும் இத்தனைப் போராட்டங்களுக்கும், அந்த மூவரின் விடுதலைக்கான முன்நகர்விற்கும் களம் அமைத்த அவர்களுக்கு, மூவரின் விடுதலையை விரும்பும் அனைவருமே நன்றி சொல்லக் கடமைப் பட்டவர்கள் எனலாம்.

**- சு.இராமசுப்பிரமணியன், தோவாளை**

'முதுமையை விரட்டும் மந்திரச்சாவி' கட்டுரை, ஓய்வுபெறும் நிலையிலுள்ள பணியாளர்களுக்கு திட்டமிடுதலுக்குத் தகுந்த ஆலோசனைகளாக உள்ளது. தமிழ்நாட்டில் ஒரேயொரு அரசு முதியோர் மருத்துவ மையம் மட்டுமே உள்ளதென்பது மிகுந்த வேதனையளிக்கிறது. முதியோர் காப்பகங்களின் எண்ணிக்கை அதிகமாவது பெருமைபடக் கூடியதன்று. சடங்குகள், சம்பிரதாயங்களை விட்டொழித்தாலே பெரும்பாலான சிக்கல்களிலிருந்து விடுபடலாம். கட்டுரையில் குறிப்பிட்டுள்ள ஐந்தாம் மந்திரச்சாவி முதியோர்களுக்கு சிறந்த வழிகாட்டியாகும்.

**- நா.இராசேந்திரன், திருவண்ணாமலை**


காக்கைச் சிறகினிலே

உரிமை விளக்க அறிக்கை

படிவம் IV (8ஆவது விதி காண்க)

| | | | |
|---|---|---|---|
| 1) | வெளியாகும் இடம் | - | 17/14, திவான் ராமா சாலை, புரசவாக்கம், சென்னை - 600 084 |
| 2) | வெளியாகும் காலம் | - | மாதம் ஒருமுறை |
| 3) | அச்சிடுபவர் பெயர் | - | எச்.தனசேகர் |
| | இந்தியக் குடிமகனா | - | ஆம் |
| | முகவரி | - | சேகர் ஆப்செட் பிரிண்டர்ஸ் புது எண்.50 (பழைய எண்.168/1) பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005 |
| 4) | பதிப்பாளர் பெயர் | - | வி.முத்தையா |
| | இந்தியக் குடிமகனா | - | ஆம் |
| | முகவரி | - | 17/14, திவான் ராமா சாலை, புரசவாக்கம், சென்னை - 600 084 |
| 5) | ஆசிரியர் பெயர் | - | வி.முத்தையா |
| | இந்தியக் குடிமகனா | - | ஆம் |
| | முகவரி | - | 17/14, திவான் ராமா சாலை, புரசவாக்கம், சென்னை - 600 084 |
| 6) | ஒரு விழுக்காட்டுக்கு மேல் முதலீடு செய்யப்பட்டுள்ள இதழ் உரிமையாளர்களும் பங்குதாரர்களும் முகவரியும் | - | வி.முத்தையா 17/14, திவான் ராமா சாலை, புரசவாக்கம், சென்னை - 600 084 |

வி.முத்தையா ஆகிய நான், எனக்குத் தெரிந்தவரை மேற்கண்டுள்ள விவரங்கள் யாவும் முற்றிலும் உண்மையென இதன்மூலம் நம்பகமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாள் : 25.02.2014

வி.முத்தையா
பதிப்பாளர் கையொப்பம்


## இரங்கல்



கவிஞர், நாடக ஆசிரியர், விமர்சகர், பத்திரிகையாளர், திறனாய்வாளர் எனப் பல தளங்களில் வாழ்நாளின் இறுதிவரை இயங்கி வந்த தமிழின் மூத்த எழுத்தாளர் திரு. தி.க.சி. அவர்கள் 25.3.2014 அன்று இயற்கை எய்தியது தமிழ் எழுத்துப் பரப்பின் ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். 'விமர்சனங்கள், மதிப்புரைகள், பேட்டிகள்' என்ற நூலுக்காக சாகித்ய அகாடமி விருதுப்பெற்ற தி.க.சி, எண்ணற்ற இளம் படைப்பாளிகளை உருவாக்கி ஊக்குவித்த பெருமைக்குரியாவர். அன்னாரை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் காக்கை தனது ஆழ்ந்த இரங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

ஆசிரியர் குழு




Owned and published by V.Muthaiah from 17/14, Diwan Rama Road, Purasaivakkam, Chennai - 600 084 and Printed by H.Dhanasekar at Sekar Offset Printers, New No. 50, Old No. 168/1, Big Street, Chepauk, Chennai - 600 005. Editor : V.Muthaiah



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

www.gnanalaya.org

# ஞானாலயா
## ஆய்வு நூலகம்

தமிழ்ப் பதிப்புலகின் ஆவணக் காப்பகம்



நிறுவனர்கள்

**பா.கிருஷ்ணமூர்த்தி**

**டோரதி கிருஷ்ணமூர்த்தி**



ஆய்வாளர்கள்
பதிப்பாளர்கள்
ஆய்வு மாணவர்கள்
நூலாசிரியர்கள்
படைப்பாளிகள்
கலைஞர்கள்
கலை விமர்சகர்கள்

**என பல்வேறு அறிவுத் தரப்பினரும் பயன்கொள்ளும் அறிவுச்சோலை**

ஈழத் தமிழ் நூல்களுக்கென தனிப் பிரிவு

ஈழத் தமிழர்கள் தங்கள் நூல்களை அனுப்பி வைக்கலாம்

**அறிவுச் சோலை வளம்பெற ஆர்வலர்களின் உதவியை நாடி நிற்கிறது**

ஞானாலயா, 6, பழனியப்பா நகர், திருக்கோகர்ணம் அஞ்சல் நிலையம்,
புதுக்கோட்டை – 622 002. தொலைபேசி : 04322-221059

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Kaakkai Cirakinile (Monthly) Registrar fo Newspapers for India No. TNTAM/2012/43921
Postal Registration No. TN/CCN/588/2013-2015 ISSN 2348 - 4160 Date of Publication : 25.3.2014

GK LEADERS
Institute for IAS, IPS, IFS & TNPSC Exams



Announces

# IAS 2014

## PRELIMINARY

POLITY (INCLUDING CURRENT AFFAIRS) ₹ 2000
ECONOMY (INCLUDING CURRENT AFFAIRS) ₹ 2000
HISTORY (INCLUDING CURRENT AFFAIRS) ₹ 2000
GEOGRAPHY (INCLUDING CURRENT AFFAIRS) ₹ 2000
SCIENCE & TECH AND ENVIRONMENT INCLUDING CURRENT AFFAIRS ₹ 2000

## MAINS

PAPER-I Essay: ₹ 3000
PAPER-II General Studies- I: Indian Heritage and Culture, History and Geography of the World and Society. ₹ 3000
PAPER-III General Studies- II: Governance, Constitution, Polity, Social Justice and International relations. ₹ 3000
PAPER-IV General Studies-III: Technology, Economic Development, Bio diversity, Environment, Security and Disaster Management. ₹ 3000
PAPER-V General Studies- IV: Ethics, Integrity, and Aptitude. ₹ 3000

3032,'Z'BLOCK, 3RD STREET, 13TH MAIN ROAD, ANNA NAGAR WEST, CHENNAI-40
(ADJACENT TO NATESAN INSTITUTE OF CO-OPERATIVA MANAGEMENT)
CONTACT:044-26224044,9600033300 web:www.gkleadersiasips.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org